கல்கி




KALKI ஆகஸ்ட் 22, 1954 4 அணா

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."


என்கிறார்

பி. எஸ். ஸரோஜா



இந்தியாவில் தயாரித்தது.

லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான, மிக மென்மையான நுரை உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. பி. எஸ். ஸரோஜா கூறுவதாவது: "இந்த வெண்மையான, சுத்தமான சோப்பை வழக்கமாக உபயோகிப்பது உங்கள் சருமத்திற்கு குறிப்பிடத் தக்க மாறுதலை அளிக்கிறது. அதன் ஆழப்புகுந்து சுத்தம் செய்யும் நுரை உங்கள் சருமத்தை மலரிதழ் போல் மென்மையாகவும், அழகாகவும் இருக்கச் செய்கிறது."



முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய ஸைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

"... அதனால் தான் என் வதனத்திற்கு எப்பொழுதும் லக்ஸ் டாய்லட் சோப்பின் பாதுகாப்பை அளிக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 423-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 14 இதழ் 4 | 1954 ஆகஸ்டு 22 | ஜய ஹு ஆவணி 6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
கதை :
நாமக்கல் கவிஞர் . .
வசனம்:
மு. கருணாநிதி . . . .
டைரக்ஷன் :
S. M. ஸ்ரீராமுலு நாயுடு
BHARAT STUDIO
காஸினோ · பிரபாத் · சரஸ்வதி .. மற்றும் நாடெங்கும் நடைபெறுகிறது

கல்கி

மலர் 14 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 4

உலகத்துக்கு ஒரு சோதனை

கட்டுக் கதையைக் காட்டிலும் உண்மை அதிக விசித்திரமானது என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு.

ரிப் வான் விங்கிள் (Rip Van Winkle) என்ற மூடன் சேர்ந்தாற்போல் இருபது வருஷ காலம் அயர்ந்து தூங்கி விட்டான்.

பிறகு அவன் விழித்துக் கொண்டபோது, உலகமே அடியோடு மாறி யிருந்தது. அவனது குடும்பமே முற்றிலும் மாறி யிருந்தது எனில் உலகத்தைப் பற்றிக் கேட்பானேன்!

இவ்வாறு ஓர் அபூர்வமான கற்பனைப் பாத்திரத்தைச் சிருஷ்டித்து, பிரபல அமெரிக்க நூலாசிரியர் ஆழ்ந்த கருத்துக் கொண்ட கதை எழுதி யுள்ளார்.

தம்மைச் சுற்றிலும் உலகத்திலும் ஏற்படும் மாறுதல்களைக் கண் இருந்தும் பாராமல் தூங்கும் விசித்திரப் பிறவிகளையே அந்த நூலாசிரியர் அவ்விதம் எல்லோருக்கும் சித்திரித்துக் காட்டி யுள்ளார்.

ஆனால், ரிப் வான் விங்கிளைக் காட்டிலும் உண்மையான, அதிசயமான பிறவிகளை இந்த உலகிலே நேரில் பார்க்கிறோம்.

ரிப் வான் விங்கிள் இருபது வருஷங்கள் தூங்கியபின் விழித்துக் கொண்டான்.

பல நூற்றாண்டுகளாகியும் விழித்துக்கொள்ளாமல் தூங்கும் அதிசயப் பிறவிகள் இந்த உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பூகோள ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் இந்தியாவைச் சேர்ந்த கோவா, போர்ச்சுகல் நாட்டுக்குச் சொந்தமானது என்று போர்ச்சுகீசியர்கள் கூறுகிறார்கள் அல்லவா?

அவர்களுடைய கூற்று பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்த மனிதர்களின் கூற்று என்று பண்டித ஜவாஹர்லால் நேரு கூறியுள்ளார்.

அத்தகையோர் நானூறு வருஷ காலத்துக்கு முந்திய உலகில் வசித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது நானூறு வருஷங்களுக்கு மேலாகத் தங்களைச் சுற்றியும் உலகத்திலும் நிகழ்ந்து வரும் சம்பவங்களைப் பார்க்காமல் போர்ச்சுகீசியர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டி யிருக்கிறது.

நானூறு ஆண்டுகளுக்கு முன் இந்த உலகம் முழுவதும் முடியரசு மயமாக இருந்தது.

இன்றோ பெரும்பாலான முடியரசுகளும் மறைந்து விட்டன; எங்கு பார்த்தாலும் குடியரசும் ஜனநாயகமும் வளர்ந்தோங்கி வருகிறது.

பாரத நாட்டிலிருந்து பிரிட்டிஷார், தங்களுடைய இருநூறு வருஷ ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வெளியேறி விட்டார்கள்.

அன்னியரின் ஆட்சியிலும் சூழ்ச்சியிலும் உழன்று வந்த மற்றும் பல ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற்று விட்டன.

மகா வல்லமை பொருந்திய அமெரிக்கா கூட பிலிப்பைன் நாட்டில் தங்களுடைய ஆட்சி நிலைத்திருக்கும்படி செய்ய முடிய வில்லை.


பல ஆண்டுகள் போர் புரிந்தும் ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான டச்சு சர்க்கார் இந்தோனேஷ்யாவின் சுதந்திரத்தைத் தடுக்க முடிய வில்லை.

எட்டு ஆண்டுகள் கோர யுத்தம் செய்தும் பிரஞ்சு வல்லரசு இந்தோ சீனாவைப் பணிய வைக்க முடிய வில்லை.

இவ்வாறு ஒவ்வொரு இடமாகக் காலனி ஆட்சி முறை மறைந்து வருகிறது; ஜன நாயக ஆட்சி வலுப்பெற்று வருகிறது.

அப்படி யிருந்தும், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், எப்படிப் பார்த்தாலும் இந்தியாவுக்குச் சொந்தமான கோவா முதலிய பிரதேசங்களைத் தங்கள் பிடியிலிருந்து விட்டு விட

சுதந்திரத் திருநாள்



இந்த வருஷம் சுதந்திரத் திருநாளை இந்தியாவெங்கும் பொது ஜனங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் குதூகலமாகக் கொண்டாடினார்கள்.

மூடியாத் என்று போர்ச்சுகீசியர்கள் அடம் பிடிப்பது கெடுந் துயில் கொண்ட மூடனின் கதையையே ஞாபகமூட்டுகிறது.

* * *

சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளைக் காட்டிலும் இவ்வருஷம் பாரத நாடு எங்கும் சுதந்திர தின விழா வெகு விமரிசையாகவும் உற்சாகத்துடனும் கொண்டாடப்பட்டது.

உணவுப் பங்கீடும் அதன் விளைவாக எழுந்த ஊழல்களும் மறைந்து சுபிட்சத்துக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்திருப்பதே ஜனங்களின் உற்சாகத்துக்குக் காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பாரத நாடு மகோன்னதமாக விளங்கும் காலம் தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கையும் மக்களின் உற்சாகத்துக்குக் காரணம் ஆகும்.

இந்தியா வெங்கும் மகா ஜனங்கள் சுதந்திர விழாவைக் கொண்டாடுகையில், கோவா முதலிய இட்டுப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மாத்திரம் சுதந்திரமின்றி, அன்னியரின் அடக்கு முறைகளுக்கு இலக்காகி வருவது சகிக்க முடியாத விஷயம் அல்லவா!

அதனாலேயே, சுதந்திர தினத்தன்று புது டில்லியில் பேசிய ஜவாஹர்லால்ஜி கோவா பிரதேசங்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டார்.

மாபெரும் சுதந்திர இந்தியாவில் அன்னிய ஆட்சியின் சின்னங்களான இட்டுப் பிரதேசங்கள் இன்னும் இருந்து வருவது மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது என்று வருந்தினார்.

அந்தத் இட்டுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியம் அடைந்தே தீரும் என்றும் ஜவாஹர்லால்ஜி உறுதி கூறினார்.

"கோவாவில் ஏற்பட்டுள்ள நிலைமை உலகத்தில் உள்ள சகல நாடுகளுக்கும் ஒரு சோதனையாகும். ஏனெனில் ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆட்சி புரிவது நியாயமா? இந்தக் கேள்விக்கு உலக நாடுகள் சந்தேகத்துக்கு இடமின்றியும் தெளிவாகவும் விடை அளிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது."

இவ்வாறு சுதந்திர தினத்தில் பாரதத் தவப் புதல்வரும் உலகத் தலைவர்களில் ஒருவருமான ஜவாஹர்லால்ஜி உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவிலே போர்ச்சுகீசியர்கள் உரிமை கொண்டாடும் இட்டுப் பிரதேசங்களின் மொத்த ஜனத்தொகை ஆறு லட்சம் ஆகும்.

அவர்களில் ஐந்து லட்சத்துத் தொண்ணூறாயிரம் மக்கள் அதாவது, தொண்ணூற்றெட்டு சத விகிதம் பேர் மேற்படி பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதை ஆதரிப்பதாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆட்சி புரிவது இயற்கை நியதிக்கு, உலக நீதிக்கு, ஜனநாயக தர்மத்துக்கு விரோதமாகும்.

அதிலும் மிகப் பெரும்பாலான மக்களின் அபிலாஷைக்கு எதிராகக் கொடுங்கோல் ஆட்சி புரிவது பன்மடங்கு அதிக அக்கிரமம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

காலூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இந்த அக்கிரமம் இனியும் நீடிக்க இடம் கொடுக்கக் கூடாது.

(கோவாவில் முதல் போர்ச்சுகீசியர் 1498-ம் வருஷம் காலடி வைத்தார் என்ற சரித்திர உண்மையை ஞாபகமூட்டுகிறோம்.)

1954 டிசம்பர் மாதம் 31-ந் தேதிக்குள் கோவா விடுதலை பெற்று விடும் என்று 'கோவா தேசிய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பீட்டர் ஆல்வாரிஸ் பத்திரிகை நிருபரிடம் கூறியுள்ளார்.

எனவே, அடுத்த ஆண்டு நடைபெறும் சுதந்திர விழாவின்போது பாரத நாட்டில் உள்ள ஓர் அடி பூமிகூட அன்னியருக்குச் சொந்தமாக இராது என்பது திண்ணம். தனி ஒருவர்கூட அன்னிய ஆட்சியின் கீழ் அல்லல்பட மாட்டார் என்பது நிச்சயம் என்று கூறலாம்.

ஆசிரியர்களின் கோபம்

தகுந்த காரணமில்லாமலே உங்கள் பத்திரிகை சிலருடைய கோபத்துக்குப் பாத்திரமாக நேருகிறது. பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்து எழுதியதனால், அந்த அநீதிகளை இழைத்தவர்கள் நம் மீது மிகவும் கோபித்ததுண்டு; "கல்கி"யைப் பகிஷ்கரித்ததும் உண்டு.

இப்போது ஆசிரியர்கள் சிலர் நம்மீது கோபங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தற்போதைய கல்வி முறையைக் கண்டித்து எழுதுவது தங்களைக் கண்டிப்பதாகும் என்று அவர்களில் சிலர் எண்ணிக் கொள்கிறார்கள். இந்தக் கல்வி முறைக்கு இப்போதுள்ள ஆசிரியர்கள் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்ல.

இதைத் தொடங்கி வைத்த பிரிட்டிஷாரும், இன்னமும் இந்த உபயோகமற்ற கல்வி முறையைக் கட்டிக்கொண்டு அழும் சுதந்திர இந்திய சர்க்காரும் இராஜ்ய சர்க்கார்களுந்தான் பொறுப்பாளிகள். மட்டம் என்று தெரிந்தும் மாற்றுவதற்கு நடவடிக்கை ஒன்றும் எடுக்காமலிருக்கும் பண்டித ஜவாஹர்லால் நேருவையே பிரதம பொறுப்பாளியாக நாம் கருதுகிறோம்.

"அந்தக் கல்வியைப் போதிப்பதில் எத்தனை ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்! ஈடுபட்டிருப்பதுமல்லாமல் 'சம்பளம் போதாது' என்று முறையிட்டுக் கொண்டும் வருகிறார்கள்!" என்று ஆகஸ்டு 1உ "கல்கி" இதழில் நாம் எழுதியிருப்பது பண்டித நேருவின் மனோ நிலை இப்படி இருக்கலாம் என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

ஒரு மட்டமான காரியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் "சம்பளம் போதவில்லை" என்று சொன்னால், அதைச் செவி கொடுத்துக் கேட்க மேலே உள்ளவர்களுக்குப் பொறுமை இராதுதானே! இந்தக் கல்வி முறை மட்டமானது என்று கருதுவதனால்தான் பண்டித ஜவாஹர்லால் போன்றவர்கள் ஆசிரியர்களின் சம்பள விஷயத்தை அநுதாபத்துடன் கவனிப்பதில்லை.

ஆனால் அந்த மட்டமான கல்வி முறையை அப்படியே வைத்திருப்பதற்குப் பொறுப்பாளிகள் ஆசிரியர்கள் அல்ல. நாட்டின் அரசியலை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய தலைவர்கள் தான்.

ஆகையால் அவர்களைக் கல்வி முறையை நல்ல விதத்தில் மாற்றி அமைக்கும்படி தூண்டவேண்டும். பின்னர், ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கும் பலம் ஏற்படும்; அப்போது அரசியல் தலைவர்களும் காது கொடுத்துக் கேட்பார்கள்.

எனவே, கல்வி முறையை நல்லபடி மாற்றி அமைக்க வேண்டும் என்ற கிளர்ச்சியில் மற்றவர்களைக் காட்டிலும் ஆசிரியர் சமூகத்துக்கே அதிக அக்கறை இருக்க வேண்டும்.

ஆசிரியர் தலைவர்களில் சிலர் சிறிது காலமாக நம் கல்வி முறையை மாற்றி அமைப்பதில் சிரத்தை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

சென்னை கிறிஸ்துவக் காலேஜைச் சேர்ந்த ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியர் ஸ்ரீகுருவில்லா ஜேகப் என்பவர் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பியிருக்கிறார். அங்கே யெல்லாம் ஏட்டுக் கல்வியைக் காட்டிலும் தொழிற் கல்விக்கு அதிக முக்கியம் தரப்படுகிறது என்றும், பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் ஏட்டுக் கல்வி கற்றுக் கொண்டு தொழிலாளிகளிடம் தொழில் பயில்கிறார்கள் என்றும் கூறியுள்ளார். நமது கல்வி முறையையும் உடனே மாற்றியமைக்க வேண்டும் என்று கூறிவிட்டு, கைவிடப்பட்ட ராஜாஜி திட்டத்தையும் சிபார்சு செய்திருக்கிறார்!

ஸ்ரீ குருவில்லா ஜேகப் செய்துள்ள சிறிய தவறை மற்ற ஆசிரியர்கள் செய்ய வேண்டியதில்லை. அதாவது 'ராஜாஜியின் திட்டம்' என்று குறிப்பிட வேண்டியதில்லை.

வேறு ஏதேனும் ஒரு பெயரைக் கொடுத்துப் புதிய கல்வி முறையை வகுப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யும்படி ஆசிரியர் சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

'முற்றும் பயனற்ற' (Utterly Useless) கல்வி முறை மாறி, உபயோகமுள்ள கல்வி முறை அமுலுக்கு வந்து விட்டது என்று பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய தலைவர்கள் ஒப்புக் கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தி விட்டால், "ஆசிரியர்களின் சம்பளத்தையும் அந்தஸ்தையும் உயர்த்த வேண்டும்" என்று விரும்பும் நம் போன்றவர்களின் கிளர்ச்சிக்கும் நிச்சயமாகப் பலம் அதிகம் ஏற்படும் அல்லவா!

அரக்கோணத்தில் ராஜாஜி

(பட விளக்கம்)

1. ராஜாஜி அவர்களுக்கு வரவேற்பு.
2. பொதுக் கூட்டத்தில் கூடியிருந்த மக்களில் ஒரு சிறு பகுதி.
3. அரக்கோணம் பஞ்சாயத்துத் தலைவர் ராஜாஜியிடம் காந்தி மண்டப நிதிக்கு 1001 ரூபாய் நன்கொடை வழங்குகிறார்.
4. கொத்தமங்கலம் சுப்புவின் காந்தி மகான் காலக்ஷேபம் நடக்கிறது.
5. ஜைனர் சங்கத்தினர் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கின்றனர்.
6. அரக்கோணம் மக்களின் சார்பாக ரூ. 1001 பண முடிப்பு வழங்கப்படுகிறது.
7. விழாவுக்குத் திரளாக வந்திருந்த பெண்மணிகளில் ஒரு பகுதி.


1
2
3
4

அரக்கோணத்தில் ராஜாஜி

காந்தி மகான் தமது வாழ்நாளில் பல முறை தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார். கடைசி முறையாக அவர் நம் செந்தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது அரக்கோணம் நகரில்தான் தம்முடைய சுற்றுப் பிரயாணத்தை முடித்துப் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தி விட்டுச் சென்றார். அந்த நிகழ்ச்சியை மனத்தில் கொண்டுதானோ என்னவோ, அரக்கோணம் வாசிகள் காந்தி ஞாபகார்த்த மண்டபத்துக்கு உற்சாகமாக நிதி திரட்டி, அதைக் கொடுப்பதற்காக ராஜாஜி அவர்களைத் தங்கள் ஊருக்கு வரவழைத்துப் பெரிய திருவிழாவாகவே நடத்தி விட்டார்கள்.


ஆகஸ்டு 13உ நடந்த இந்த நிதி அளிப்பு விழாவுக்குக் கனம் சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்.


இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்த இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராமானுஜம் அவர்கள் வரவேற்புக் கூறியபின் தாலுக்கா காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், தக்கோலம் கிராம காங்கிரஸ் கமிட்டி, ஜெயின் சங்கம் முதலிய பல ஸ்தாபனங்கள் சார்பாக ராஜாஜி அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. பின்னர் ஆதி திராவிட சங்கத்தின் சார்பில் காந்தி மண்டபநிதிக்கு ஸ்ரீ நாகராஜன் ரூ. 26-4-10 கொண்ட பண முடிப்பைக் கொடுத்தார். பொது மக்கள் சார்பில் ரூ. 1001 கொண்ட பண முடிப்பை ஸ்ரீ ப. ராஜகோபாலன் வழங்கினார். ஜைனர் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ கன்யாலால் சௌகார் ரூ. 501 அளித்தார். ஹிந்து ஹைஸ்கூல், மாணவர்கள் உபாத்தியாயர்கள் சார்பாகத் தலைமை ஆசிரியர் ரூ. 109 கொண்ட பண முடிப்பைக் கொடுத்தார். கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் சிலர் பெரும் பிரயத்தனத்துடன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து ராஜாஜியிடம் தங்கள் காணிக்கையைக் கொடுத்து விட்டுப் போனார்கள். ராஜாஜி அவர்கள் காந்தி ஞாபகார்த்த மண்டபத்தின் அவசியத்தைப் பற்றியும் தெய்வ பக்தியின் அவசியத்தைப் பற்றியும் பேசிய போது, பதினையாயிரம் ஜனங்களுக்கு மேல் நெருங்கி உட்கார்ந்திருந்த அந்த மாபெரும் கூட்டத்தில் நிசப்தமும் அமைதியும் நிலவியிருந்தன. ஆரம்பத்தில் அந்த மாபெரும் கூட்டத்தில் இருந்த கலகலப்பைப் பார்த்து "நேருஜி பார்த்து மகிழ வேண்டிய கூட்டம் இது" என்று ராஜாஜி குறிப்பிட்டார்.

முன்னாள் மேயர் திரு ராமசாமி நாயுடுவும் 'கல்கி' ஆசிரியரும் பேசிய பிறகு கொத்தமங்கலம் சுப்புவின் காந்தி மகான் காலக்ஷேபம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்துக்கு முன்னால் அரக்கோணம் பஞ்சாயத்துச் சபையார் ராஜாஜி அவர்களுக்கும் கனம் சிவஷண்முகம் பிள்ளை அவர்களுக்கும் வரவேற்புப் பத்திரங்கள் அளித்து ரூ. 1001 காந்தி மண்டபத்துக்கு நன்கொடை தந்தார்கள்.

அரக்கோணம் அன்று அத்தகைய சிறப்பு அடைவதற்குக் காரணமாயிருந்தவர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.







பரீட்சைக்குப் பரிந்து வருகிறார்!

குளித்தலையிலிருந்து ஆசிரியர் ஒருவர் நாம் தற்போதையப் பரீட்சை முறையைக் கண்டித்து எழுதுவதற்காக நம் மீது மிகக் கோபங் கொண்டு எழுதியிருக்கிறார்.

"இப்படிப் பரீட்சை முறையைக் கண்டித்து எழுதினால், பரீட்சையில் தேறாதபிள்ளைகள் உங்கள் பத்திரிகையை அதிகமாக வாங்குவார்கள் என்ற எண்ணம் போலும்!" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்படி ஆசிரியர் "கல்கி"யைப் புதிதாகப் படிக்கத் தொடங்கியவர் என்று கருத வேண்டியிருக்கிறது. பழைய நேயராயிருந்தால், பெரும்பாலோர் விரும்பாத கட்சிகளை நாம் ஆதரித்து அதனால் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருப்பதை அறிந்திருப்பார். தலைமை ஆசிரியர் ஒருவரின் கட்சியைத் தீவிரமாக ஆதரித்ததின் காரணமாக ஒரு நகர சபை அதன் வாசக சாலைகளுக்குக் "கல்கி" பத்திரிகை வாங்குவதை நிறுத்தி விட்டதையும் அறிந்திருப்பார்.

மேலும், பரீட்சையில் தேறாத மாணாக்கர்களை விடப் பரீட்சையில் தேறும் மாணவர்கள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறார்கள். ஆகையால், பரீட்சை தேறுகிறவர்களைப் பாராட்டி எழுதுவதல்லவா பத்திரிகை விற்பனைக்கு உபயோகமாயிருக்கும்!

பரீட்சையில் தேறாத மாணாக்கர் தற்கொலை புரிந்து கொள்வது பற்றிய செய்திகளை ஒவ்வொரு வருஷமும் ஜூன்–ஜூலை மாதங்களில் நாம் படித்து வருகிறோம்.

ஒரு மாணவன் தற்கொலை செய்து கொண்டான் என்றால், எத்தனை ஆயிரம் இளம் மாணவர்களின் மனம் புண்ணாகி வருந்துவார்கள் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி மனோதைரியம் அளிப்பதற்காக நாம் எழுதுவது குளித்தலை ஆசிரியருக்குப் பொறுக்கவில்லை.

பரீட்சை தேறாத பிள்ளைகளையெல்லாம் வரிசையாக நிறுத்தி வைத்துக் கையிலே பிரம்பு எடுத்துக் கொண்டு சுளீர் சுளீர் என்று அடித்துப் புத்தி கற்பிக்க இந்தக் கருணை நிறைந்த ஆசிரியர் விரும்புகிறார் போலும்!

ஆனால் அவருடைய விருப்பம் நிறைவேறப் போவதில்லை. இப்போதைய பரீட்சை முறையின் இலட்சணத்தைக் கல்வி இலாகா அதிகாரிகளும் மற்றும் பிரபல கல்வித் துறை நிபுணர்களுமே எடுத்துக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

இதைக் கவனியுங்கள். இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் முதலில் மாணாக்கர்களுக்குக் கிடைத்த மார்க்குகளின்படி மொத்தம் 100க்கு 45 வீதந்தான் தேறியிருந்தார்கள். இது ரொம்ப மோசமான நிலைமை என்று கல்வி இலாகா அதிகாரிகள் எண்ணினார்கள். "நூற்றுக்கு 55 விகிதமாவது மாணாக்கர்கள் பரீட்சையில் தேறியாக வேண்டும்; ஆகையால், மார்க்குகளைத் தூக்கிப் போடுங்கள்!" என்றார்கள். அவ்வளவுதான்; சத விகிதக் கணக்குப்படி மார்க்குகளைத் தூக்கிப் போட்டு, பரீட்சையில் தேறிய மாணாக்கர்களின் தொகையை 100க்கு 55 விகிதத்துக்குக் கொண்டு வந்து விட்டார்கள்!

நமது பரீட்சை முறையின் இலட்சணம் இத்தகையதென்பது இதிலிருந்தே தெரியவில்லையா!

இது மட்டுமல்ல; அகில இந்தியத் தலைமை ஆசிரியர்களின் மகாநாட்டிலேயே "இப்போதைய பரீட்சை முறை பயனற்றது" என்று தீர்மானித்திருக்கிறார்கள். பிள்ளைகள் வகுப்புப் பரீட்சையில் அவ்வப் போது வாங்கும் மார்க்குகளை அளவுகோலாக வைத்துக் கொண்டு, மாணாக்கர்களுக்குத் தேர்வு அளிக்கும் உரிமையைத் தலைமை ஆசிரியர்களுக்கே தந்து விட வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

அப்படியிருக்க, தற்போதைய பரீட்சை முறைகளுக்குப் பரிந்து பேச முன்வரும் ஆசிரியர்களும் இருப்பது வியப்பு அல்லவா!

கட்டின்றி விட்டு விடலாமா?

சென்ற வாரத்தில் அகில இந்தியப் பத்திரிகாசிரியர் சம்மேளனத்தை ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு ஆரம்பித்து வைத்தார். அப்போது செய்த பிரசங்கத்தில், "உரிமை என்பது தனியாக ஒன்று இல்லை; பொறுப்புடன் சேர்ந்ததுதான் உரிமை. பத்திரிகையாளருக்கும் அப்படித்தான்!" என்று கூறினார்.

நேருஜியின் இந்தக் கூற்றை நாம் முழுமையும் ஆமோதிக்கிறோம்.

பிரிட்டிஷ் யதேச்சாதிகார ஆட்சி நடந்த காலத்தில் தியாகிகளும் தீரர்களும் சீலத்திற் சிறந்த அறிவாளிகளும் பத்திரிகைகள் நடத்தி வந்தார்கள். அவர்களுடைய காலத்தில் பத்திரிகைகளின் உரிமையே பிரதானமான பிரச்னையாயிருந்தது. அவர்கள் தங்கள் பொறுப்புக்களை நன்கு உணர்ந்திருந்தார்கள்.

ஜனநாயகம் நெருங்க நெருங்க, பத்திரிகைத் துறையில் பல்வேறு நோக்கங் கொண்டவர்கள் வந்து புகுந்தார்கள்.

தனிப்பட்டவர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றிப் பொய்யும் புனைசுருட்டுடன் கலந்த அவதூறுகளை எழுதிப் பணம் சம்பாதிப்பதற்காகவே சிலர் பத்திரிகைகள் தொடங்கி நடத்துகிறார்கள்.

தமிழ் நாட்டில் சினிமாத் துறையிலும் அரசியல் துறையிலும் இம்மாதிரி பல பத்திரிகை முயற்சி தொடங்கினார்கள். ஆரம்பத்தில் ஏதோ இத்தகைய ஆபாசப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கு ஏற்படுவது போலத் தோன்றியது. விரைவிலேயே தமிழ் மக்களிடையே வேரூன்றியுள்ள பண்பாட்டின் காரணமாக இம்முயற்சிகள் தோல்வியடைந்தன.

தமிழ் நாட்டைக் காட்டிலும் வடநாட்டில் இத்தகைய ஆபாசப் பத்திரிகைகளும் அவதூறுப் பத்திரிகைகளும் மலிந்து கிடக்கின்றன.

பத்திரிகைத் தொழிலைக் கெட்டிக்காரத் தனமாக நடத்தக் கூடியவர்களும் இம்மாதிரி கேவலமான காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

மகாத்மா காந்தியின் தவப் புதல்வரும் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்னும் பிரபல ஆங்கில தினசரியின் நிர்வாக ஆசிரியருமான ஸ்ரீ தேவதாஸ் காந்தி சில வருஷங்களுக்கு முன்பு

பத்திரிகாசிரியர் சம்மேளனத்தின் தலைவராயிருந்தார். சம்மேளனம் கூடியபோது, தமது தலைமைப் பிரசங்கத்தில் 'மஞ்சள் பத்திரிகை'களின் வியாபகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

பம்பாயில் நடைபெறும் 'பிளிட்ஸ்' என்னும் பத்திரிகை உடனே மஞ்சள் பத்திரிகைகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு ஒரு பெரிய கிளர்ச்சி தொடங்கியது. ஸ்ரீ தேவதாஸ் காந்தியை வசை மொழிகளினால் அலங்கரித்தது மல்லாமல், அவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியும் மிகக் கேவலமாக எழுதியது.

ஸ்ரீ தேவதாஸ் காந்தி மேற்படி பத்திரிகை மீது அவதூறு வழக்குத் தொடுத்தார். வழக்கு விசாரணைக்கு எடுத்து, விசாரணை முடிந்து, தீர்ப்புக் கூறுவதற்கு நாலு ஆண்டுகள் ஆயின. கடைசியாக, பம்பாய் ஹைகோர்ட் நீதிபதி தேசாய் "பிளிட்ஸ்" எழுதியது அவதூறுதான் என்று முடிவு செய்து, பத்தாயிரம் ரூபாய் நஷ்டஈடும் வழக்கின் செலவு தொகையும் ஸ்ரீ தேவதாஸ் காந்திக்குக் கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

இந்த ஒரு நீதிபதியின் தீர்ப்புக்கு மேலே "பிளிட்ஸ்" பத்திரிகை, பம்பாய் ஹைகோர்ட் 'புல் பெஞ்ச'க்கு அப்பீல் செய்தது.

சென்ற வாரத்தில் மேற்படி அப்பீலை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டது.

ஆகவே, நீதிபதியின் தீர்ப்பின்படி நஷ்ட ஈடும் செலவுத் தொகையும் ஸ்ரீ தேவதாஸ் காந்திக்கு அப்பத்திரிகை கொடுத்தாக வேண்டும்.

** ** **

ஸ்ரீ தேவதாஸ் காந்தி சுமார் நாலு வருஷ காலம் இந்த வழக்கை நடத்துவதற்கு எவ்வளவு சிரமம் எடுத்திருக்க வேண்டும், எவ்வளவு பணம் செலவாகி யிருக்கும் என்று நேயர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். பம்பாய் ஹைகோர்ட்டில் பிரபல வக்கீல்களை வைத்து வழக்கு நடத்துவதில் ஐம்பதினாயிரம் வரையில் செலவாகி யிருந்தாலும் வியப்படைவதற்கில்லை.

உலகம் போற்றிய மகா புருஷரின் புதல்வர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி; அவரும் ஒரு பிரபல தேசத் தலைவர்; இந்தியாவின் மிகப் பிரதான தினப்பத்திரிகைகளில் ஒன்றாகிய "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" ஆசிரியர்; பத்திரிகாசிரியர் சம்மேளனத்தின் தலைவரா யிருந்தவர்.

இவ்வளவு வசதிகளும் இருந்தபடியால் அவர் "பிளிட்ஸ்" பத்திரிகைமீது அவதூறு வழக்குத் தொடுத்து வெற்றி பெறுவது சாத்தியமாயிற்று

இந்த வழக்கைப் பிடிவாதமாக நடத்தி வெற்றி பெற்றதன் மூலம் ஸ்ரீ தேவதாஸ் காந்தி பத்திரிகைத் தொழிலைத் தூய்மைப் படுத்துவதற்குப் பேருதவி புரிந்திருக்கிறார்.

இதே முறையில் சாதாரண மனிதர்களைப் பற்றி அவதூறுகளை எழுதினால், அவர்களுடைய கதி என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவதூறு வழக்கு நடத்தி வெற்றி பெறுவது என்பது சுலபமான காரியமா! அதற்கு எத்தனை அறிவாற்றல் வேண்டும்! எவ்வளவு மனோதிடம் வேண்டும்! எத்தனை பணச் செலவுக்கு ஒருவர் தயாராக இருக்க வேண்டும்!

ஆகையால், பத்திரிகைக்காரர்கள் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று அவர்களுடைய பேனாக்களைக் கட்டவிழ்த்து விட்டு விடுவது ஒரு பெரும் அபாயகரமான காரியமாகும்.

பத்திரிகைக்காரர்கள் முதலில் தங்களுடைய பொறுப்புக்களை உணர வேண்டும். உணர்ந்து அப்பொறுப்புக்களை நிறைவேற்ற வழி வகைகளை வகுக்க வேண்டும். தங்களில் வழி தவறிப் போகிறவர்களைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குத் திறமையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இம்மாதிரி தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றத் தயாராக இருந்தால், ஜனநாயக சர்க்காரிடம் உரிமைகளுக்குப் போராடலாம்.

<u>அட்டைப்பட விளக்கம்</u>

சுபிட்சப் பாதையில் நாம்!

அவனுடைய வண்டி நிறைய நெல் மூட்டைகள் இருக்கின்றன!

அவள் தலையின்மீது பெரிய நெற்கதிர்க் கட்டு இருக்கிறது!

அவர்கள் இருவர் உள்ளங்களிலும் நிறைய உவகை ததும்பி நிற்கிறது!

உழவர் குடும்பத்தில் பிறந்த அவர்களுக்கு நிலம் நன்றாக விளைந்தால் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழியக் கேட்பானேன்!

அந்த மகிழ்ச்சியில் அவன் பெருமிதம் கொண்டு பாடுவதைச் சற்றுக் கேளுங்கள்:

நெல்லுமணி யில்லாத
நீள் நிலத்தில் காசுபணம்
கல்லும் மண்ணும்
அல்லவா ......!

(நெல் விடு தூது)

ஆம்; ஒரு தேசத்தின் உண்மையான செல்வம், பூமாதேவி அளிக்கும் செல்வம்தான்!

சுதந்திரம் அடைந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு எட்டாவது சுதந்திர தின விழாவில், "உணவு விஷயத்தில் நமது சுய தேவை இன்று பூர்த்தி செய்து கொண்டதோடல்லாமல், பிற நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலைமையில் இருக்கிறோம்" என்று ஜவாஹர்லால்ஜி பெருமிதத்துடன் கூறினார்.

ஆம், நாம் சுபிட்சப் பாதையில் ஓர் அடி எடுத்து வைத்திருக்கிறோம் என்பதே இதன் பொருள் அல்லவா?

இந்த நிலைக்குப் பாரதத் தாயைக் கொணர்ந்த உழவர் சமுதாயத்துக்கு நமது நன்றியை, தேசத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த காதலர் இருவரே இவ்விதம் அட்டையை அலங்கரிக்கிறார்கள்.

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

SRI KANCHI KAMAKOTI PITHADHIPATI

Jagadguru Sri SANKARACHARYA SWAMIGAL MUTT,

Camp :—KANCHEEPURAM.

No. Dated 29-6-1954.

தங்கள் "ஜாதக பரிவர்த்தனை" சம்பந்தமான
ஏற்பாடுகள் செய்திருக்கும் விவரத்தை ஸ்ரீமஹா
ஸன்னிதானத்தில் விக்ஞாபனம் செய்ததில்
மேல்கண்டவாறு [illegible] சாஸ்திரஸம்மதத்தை
யுடன் லோகோபகாரத்தையும் அனுசரித்து பெருந்
தன்மை விவாஹமும் செய்யும் பெற்றோர்களுக்கு
எல்லா விதத்திலும் அனுகூலமாயிருக்கு
மென்று ஸ்ரீமஹாஸன்னிதானத்தில்
அபிப்ராயப்படுகிறார்கள் என்ற விவரம்
தெரிவிக்கலான காரியம்.

[illegible]
29.6.54
பாரிஷத்.

பெண்களின் பெற்றோர்களே!

உங்கள் பெண்களுக்கு உங்கள் யோக்யதாம்சத்திற்குத் தகுந்த வரன்கள் சேர்ந்து வராமல் பணம் செலவுசெய்தும் பயனில்லாது மனக்கவலையும் கஷ்டமும் அடைகிறீர்கள்.

பிள்ளைகளின் பெற்றோர்களே!

நீங்களும் இதே போல், ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமல் கவலைப் படுகிறீர்கள். கல்யாணப் பருவத்திலுள்ள யுவர்கள் யுவதிகளுக்கு விவாகத்திற்கு தாமதமாவதால் பலவித கஷ்டங்களும் தோஷங்களும் ஏற்படக் கூடியதே!

இந்த மாதிரியான கஷ்டங்களை நீக்குவதற்கெனவே இந்த ஜாதகப் பரிவர்த்தனை காரியாலயம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மேல்கண்ட ஸ்ரீமுகம் உங்களுக்கு இந்த சேவையில் நம்பிக்கை உண்டாக்கக் கூடியதே! உங்கள் பிள்ளை அல்லது பெண்களுக்கு தகுந்ததான ஜாதகங்களை நீங்கள் எப்பொழுதும் இங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம். **இந்த சேவையில் உங்களுக்கு திருப்தி ஏற்பட்டால் நீங்கள் அதற்காக ஒரு சிறிய கட்டணம் தான் செலுத்த வேண்டி யிருக்கும்.** உங்கள் தேவைகளுக்கு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு உங்கள் பெண் அல்லது பிள்ளையின் ஜாதகத்துடன் முழுவிபரங்களையும் எழுதவும்.

HOROSCOPE EXCHANGE, Post Box 1834, MADRAS-1

இதன் சேவைக்காக நல்ல பாண்டித்யமுள்ள சிறந்த ஜோஸ்யர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்

உயர்நிலைப் பள்ளி! உயர்தரக் கல்வி!!

பகீரதன்

நம் கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் கற்பிக்கப்பட்டு வரும் கல்வி முறையைப் பற்றிக் "கல்கி"ப் பத்திரிகையின் கருத்துக்கள் பலரும் அறிந்ததே. கல்வி முறையைப் பற்றிக் குறை கூறுவது தங்களைக் குறை கூறுவதாக எண்ணிக் கோபப்படும் பள்ளிக்கூட ஆசிரியர்களும் நிர்வாகிகளும் உண்டு. அவ்விதம் கோபப்படாமல் தத்தம் பள்ளிக்கூடங்களில் நடைபெறும் ஆண்டுவிழா முதலிய வைபவங்களுக்குக் "கல்கி" ஆசிரியரை வற்புறுத்தி அழைப்பவர்களும் உண்டு.

ஆனால் அத்தகைய அழைப்புகளை ஒப்புக் கொள்வதில் "கல்கி" ஆசிரியர் தர்ம சங்கடத்துக்கு உள்ளாக நேரிடும். பள்ளிக்கூட விழாக்களில் கலந்து கொண்ட பிறகு, உபசாரத்துக்காக "எல்லாம் பிரமாதமாயிருக்கிறது!" என்று சொல்லி விட்டு வருவது உண்மைக்கு மாறாயிருக்கும். "ஒன்றும் சரியாக இல்லை; நீங்கள் கற்பிக்கும் கல்வி எல்லாம் வீண்" என்று சொல்லிவிட்டு வருவது பண்பாட்டுக்கு விரோதமாயிருக்கும். ஆகையால் பள்ளிக்கூட ஆண்டு விழாக்களுக்கும் திறப்பு விழாக்களுக்கும் வரும் அழைப்புகளுக்குத் "தயவு செய்து மன்னிக்கவும்" என்று பதில் கூறவே தோன்றும்.

ஆனால் ஸ்ரீ எஸ். கே. வேலாயுத முதலியார் அவ்விதம் மன்னித்து விட்டுவிடத் தயாராக இல்லை. தென்னாற்காடுஜில்லாவில் குறிஞ்சிப்பாடி என்னும் கிராமத்தில் அவருடைய பெயராலும் அவருடைய நிர்வாகத்திலும் நடக்கும் உயர்தரப் பள்ளிக்கூடத்தின் முதல் ஆண்டு விழாவுக்குக் "கல்கி" ஆசிரியரைத் தலைமை வகிக்கும்படி அழைத்தார். ஆசிரியர் வழக்கமான பதிலைச் சொன்னதற்கு "அதெல்லாம் மன்னிக்க முடியாது; வந்தே தீர வேண்டும்" என்று வற்புறுத்தினார். "உங்களை அழைத்து வந்தால்தான் பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழா நடத்தப்படும் என்கிறார் எங்கள் தலைமையாசிரியர்!" என்றும் கூறினார்.

"அப்படியா!" என்று "கல்கி" ஆசிரியர் வியப்புடன் கேட்டார். அத்தகைய தலைமையாசிரியரைப் பார்க்க வேண்டும் என்று அருகிலிருந்த எனக்கே ஆசை உண்டாகி விட்டது.

பிறகு, ஸ்ரீ எஸ். கே. வேலாயுத முதலியார் குறிஞ்சிப்பாடியில் உயர்தரப் பள்ளிக்கூடம் ஆரம்பித்த வரலாறு பற்றியும், அதற்குச் சர்க்கார் கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெறுவதற்காகத் தாம் பட்ட பாடுகளைப்பற்றியும் எடுத்துக் கூறினார்.

அவற்றைக் கேட்ட பிறகு, "கட்டாயம் உங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்துதான் தீருவோம்" என்று சொல்லத் தோன்றியது.

கடைசியாக, ஸ்ரீ எஸ். கே. வேலாயுத முதலியார் ஒரு பெரிய அஸ்திரத்தைப் பிரயோகித்தார். "காந்தி ஞாபகார்த்த மண்டப நிதிக்குக் கொஞ்சம் பணம் வசூலித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறோம்" என்று சொன்னார்.

"கல்கி" ஆசிரியர் என்னைப் பார்த்து, "சரி! உடனே டிக்கட் வாங்கிவிடு!" என்றார்.

** ** **

குறிஞ்சிப்பாடி என்னும் கிராமம் கடலூரிலிருந்து பதினைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு ஆகஸ்டு மீ 4வ ஸ்ரீ எஸ். கே. வேலாயுதம் உயர்தரப் பள்ளியின் ஆண்டுவிழா நடைபெற்றது.

விழாவுக்குக் குறிப்பிட்டிருந்த நேரத்துக்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே "கல்கி" ஆசிரியரும் நானும் பள்ளிக் கூடத்துக்குப் போய் விட்டோம். ஆண்டு விழாவில் கலந்து கொள்ளுவதைக் காட்டிலும், பள்ளிக்கூடத்தைப் பார்த்து அதன் நடைமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமே எங்களுக்கு அதிகமாயிருந்தது.

பள்ளிக்கூடத்துக்குள் பிரவேசிக்கும் போதே ஒருபுதிய உற்சாகமான உலகத்துக்குள் பிரவேசிக்கிறோம் என்ற உணர்ச்சி உண்டாகியது. பள்ளியின் பிரதான வாசலில், சாரணர் உடைதரித்த மாணவர்கள் கையில் நீளமான குச்சிகளைத் துப்பாக்கி போல் பிடித்துக் கொண்டு வரிசையாக அணிவகுத்து நின்று வரவேற்பு அளித்தனர். அவ்விதம் நின்ற பிள்ளைகளின் ஆஜானுபாகுவான தோற்றம் மகிழ்ச்சி தருவதாயிருந்தது.

உள்ளே சென்றால் சுமார் ஐந்து ஏக்கரா நிலத்தின் மத்தியில் எஸ். கே. வேலாயுதம் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தின் முக்கியமான கட்டிடம் கம்பீரமாக நிற்கிறது. ஒரு பக்கத்தில், பல்வேறு வகுப்புகளுக்கான கூரைக் கட்டிடங்கள் வரிசையாக இருக்கின்றன. அவைகள் பழைய பாரதநாட்டில் இருந்ததாக இதிகாசங்களில் கூறப்படும் குருகுலத்தை ஞாபகப் படுத்துகின்றன.

கூரைக் கட்டிடங்களில் பள்ளி வகுப்புகளை நடத்தி வரலாம், அவற்றைக் கலையழகு பொருந்தியதாய் அமைக்கலாம், தூய்மையாகவும் வைத்திருக்கலாம் என்பதற்குச் சிறந்த உதாரணங்களாக அவை விளங்கின.

அந்தப் பள்ளியில் குழந்தைகளுக்கு அளிக்கும் கல்விப் பயிற்சி, விவசாயப் பயிற்சி, தேகப் பயிற்சி எல்லாம் போலிப் பயிற்சிகள் அல்ல என்பதை அங்கு நேரில் கண்டோம்.

பள்ளிக்கூடத்தில் பாட புத்தகங்களைப் படித்த நேரம் போக மற்றப் பொழுதை மேற்கண்டவாறு தோட்டப் பண்ணை முதலிய விவசாயப் பயிற்சியில் உண்மையான உடல் உழைப்புடன் ஈடுபடும் பிள்ளைகளின் மனத்திலேதான் படித்த படிப்பு நன்றாகத் தங்கி ஜீரணமாகும் என்பதையும், அத்தகைய பிள்ளைகள்தான் நல்ல உடல் நலத்துடன் கம்பீரமாக விளங்குவார்கள் என்பதையும் அங்கே காண முடிந்தது.

கடலூர் சாரணர் படைத் தலைவரான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி பள்ளிக்கூடத்தை யொட்டித் தோட்டப் பண்ணையைத் திறந்து வைத்தார். முதல் ஆண்டு விழாவின் சின்னமாகக் "கல்கி" ஆசிரியர் அப் பண்ணையில் மாங் கன்று ஒன்றை நட்டார். அப்படி நடும் போது அங்கே ஒலிபெருக்கியில் "மரம் வளர்ப்போம்" என்று பாடிய பாடல் காற்றிலே மிதந்து வந்து அங்கு கூடியிருந்த எல்லாருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்த இசைத்தட்டுப் பாடல் காதில் விழுந்து கொண்டிருக்கும் போதே, "கல்கி" ஆசிரியர் "இந்த மாங்கன்று நிச்சயமாக வளருமா! அல்லது......" என்றார்.

"அல்லது வனமகோற்சவத்தில் நடும் கன்றுகளின் கதி நேருமா என்றுதானே கேட்கிறீர்கள்?- நிச்சயமாக வளர்ந்தே தீரும். இது மரமாகிப் பழம் பழுத்ததும், முதற் பழத்தை உங்களுக்கே

அனுப்புவோம். வன மகோத்சவத்தில் நடும் செடிகளைப் போல் ஆகிவிடாது!'' என்றார் ஒருவர். அவர்தான் அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் ஸ்ரீ ரங்கநாதன் என்று தெரிந்துகொண்டோம்.

''கல்கி'' ஆசிரியர் மேற்கண்டவாறு சந்தேகப்பட்டதற்காகத் தலைமையாசிரியர் ஸ்ரீ ரங்கநாதன் சரியான தண்டனை அவருக்குக் கொடுத்தார். பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த ஐந்து ஏக்கரா நிலத்திலும் அவரை இழுத்துச் சென்று பார்க்கும்படி செய்தார். அங்கங்கே வளர்ந்திருந்த கறிகாய்ச் செடிகளையும், வேலி ஓரங்களில் நட்டிருந்த தேக்கு மரச் செடிகளையும் காட்டினார்.

அந்தச் செடிகளின் செழுமையைப் பார்த்த ''கல்கி'' ஆசிரியர் ''இந்தச் செடிகளுக்கெல்லாம் யார் தண்ணீர் விடுகிறார்கள்!'' என்று கேட்டார்.

''பள்ளிக்கூடத்து மாணவர்கள்தான் தங்கள் கைகளாலேயே இந்தச் செடிகளுக்குத் தண்ணீர் விடுகிறார்கள். இந்தக் கத்திரிச் செடிகளில் நிறைய கத்திரிக் காய்கள் காய்க்கின்றன. அந்தத் தக்காளிச் செடிகளில் தக்காளி காய்க்கிறது. இன்னும் பல வகைக் காய்கறிகளையும் பயிரிட்டு வருகிறோம். இதன் மூலம் மாணவர் இல்லத்துக்கு வேண்டிய காய்கறிகள் எல்லாம் கிடைத்து மீந்தும்விடுகிறது. அப்படி எஞ்சியதை விற்று அதில் வரும் வரும்படியைக் கொண்டு ஏழை மாணவர்களுக்கு உதவுகிறோம். சென்ற ஆண்டில் இருநூறு ரூபாய்க்குக் கறிகாய்கள் விற்றோம். மாணவர்களுக்கு விவசாயப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், பள்ளிக்கூடத்துக்கும் இதனால் நல்ல லாபம் கிடைக்கிறது'' என்று கூறினார்.

அவர் அப்படிக் கூறும்போது சில ஆண்டுகளுக்கு முன்பு இதே தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்துக்குக் 'கல்கி' ஆசிரியர் அவர்களுடன் சென்றிருந்த ஞாபகம் வந்தது. அந்தப் பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளுக்கு விவசாயப் பயிற்சி அளித்து வருவதாகச் சொன்னார்கள். விவசாயப் பயிற்சிக்கென்று மூவாயிரம் ரூபாய்ச் செலவில் தண்ணீர் இறைக்கும் இயந்திரமும், ஒரு ஜோடி காளை மாடும் வாங்கி வைத்திருந்தார்கள். அவைகளைப் பார்த்த ''கல்கி'' ஆசிரியர் ''விவசாயத்தின் மூலம் சென்ற ஆண்டில் என்ன வருமானம் கிடைத்தது!'' என்று கேட்டு வைத்தார். அதற்கு அவர்கள் சொன்ன பதிலைக் கேட்டு எல்லாரும் திகைத்துப் போனோம். ''தண்ணீர் இறைக்கும் இயந்திரம் கெட்டுப்போய் ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன. இதைப் பற்றி ஜில்லா போர்டுக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை. காளை மாடுகளுக்குத் தீனி போட்டுக் காப்பாற்றி வருகிறோம்'' என்றார்கள். இந்தச் சம்பவத்தைப் பற்றி அந்தச் சமயத்திலேயே இப் பத்திரிகையில் தலையங்கம் எழுதியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தப் பள்ளிக்கூட நிகழ்ச்சியுடன் குறிஞ்சிப்பாடி பள்ளிக்கூடத்தையும், அதைத் திறமையுடன் நடத்தி வரும் தலைமையாசிரியரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ''யார் இந்த அதிசயமான ஹெட்மாஸ்டர் ரங்கநாதன்?'' என்று கேட்கத் தோன்றியது!


ஸ்ரீ என். ரங்கநாதன் எம். ஏ. பி. டி. அவர்கள் பல ஆண்டுகள் தலைமை ஆசிரியராகத் தொண்டாற்றிவிட்டுச் சென்ற யுத்தத்தின்போது கப்பற்படையில் சேர்ந்து பணியாற்றி உலகம் சுற்றியவர். அப்படி உலகம் சுற்றிய அனுபவத்தை நல்ல முறையில் பயன்படுத்த விரும்பி மீண்டும் தலைமை ஆசிரியர் பொறுப்பேற்றுத் தொண்டாற்ற விரும்பினார். அதற்குச் சர்க்கார் பள்ளிக்கூடங்களை விடத் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிதான் சிறந்தது என்று கண்டு தாம் பெற

ஆண்டு விழாவில் மாறுவேடம் புனைந்து நடித்த மாணவர்கள்




S.K. VELAYUTHAM HIGH SCHOOL





ஆண்டு விழாக் காட்சிகள்

○★○

1. வேலாயுதம் உயர்நிலைப் பள்ளியின் கம்பீரமான கட்டிடத்துக்கு முன் ஆண்டு விழாவுக்காக மக்கள் சூழ்ந்து நிற்கின்றனர். 2. தலைவர்கள் பாண்டு வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். 3. ஸ்ரீ எஸ்.எஸ். ராமசாமிப் படையாட்சி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், ஓமந்தூர் ரெட்டியார் முதலியோர்களை ஸ்ரீ எஸ். கே. வேலாயுதம் மேடைக்கு அழைத்து வருகிறார். 4. கல்வி ஆசிரியர் மாங் கன்றை நட்டு விட்டுத் தண்ணீர் விடுகிறார். 5. ஸ்ரீ எஸ். கே. வேலாயுதம் முதலியார் மந்திரிக்கு வரவேற்புரை வாசித்துக் கொடுக்கிறார். 6. கடலூர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பள்ளியின் தோட்டப் பண்ணையைத் திறந்து வைக்கிறார். 7. பிரார்த்தனைக் கீதம் பாடப்படுகிறது. 8. விழாவுக்குத் திரளாக வந்திருந்த மாபெரும் கூட்டத்தில் ஒரு பகுதி. —போட்டோ : எம். டி. கணேஷ்



வேண்டிய சம்பளத்தை விடக் குறைந்த சம்பளத்துக்கு எஸ். கே. வி. உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பிரஜா உரிமைப் பயிற்சியில் தனிப் பயிற்சி பெற்று நூற்றுக் கணக்கான பள்ளி ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்திருக்கிறார். கிராமத்துக் குழந்தைகள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், பொறுப்புள்ள பிரஜைகளாகவும் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தையே மனத்தில் கொண்டு நாளெல்லாம் பாடுபட்டு வருகிறார்.

“இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்து வெளியேறும் மாணக்கன் எவனும், ‘வேலை எங்கே கிடைக்கும்!’ என்று தேடி அலைய மாட்டான். அவனுடைய கைத் திறமையைக் கொண்டே பிழைத்துக் கொள்வான்!” என்று ஸ்ரீ ரங்கநாதன் உறுதியாகச் சொன்னதை நாங்கள் இன்னமும் எண்ணி எண்ணி மகிழ்கிறோம்.

** ** **

ஆண்டு விழாக் கூட்டம் ஆரம்பமானதும் மேடை மீதிருந்து சபையைப் பார்த்த போது அப்படியே ஆச்சரியத்தால் மூக்கில் விரலை வைக்கும்படி இருந்தது. சபையில் குதூகலத்துடன் கூடியிருந்த மாணவ மாணவிகளையும், தாய் தகப்பன்மார்களையும் இன்னும் ஊரே திரண்டு வந்ததுபோல் நின்ற மக்களையும் பார்த்து, “பள்ளிக்கூட ஆண்டு விழாவா இது!” என்று ஆச்சரியப்படத்தான் வேண்டியிருந்தது. அந்த மாபெரும் கூட்டம் எஸ். கே. வி. உயர்நிலைப் பள்ளியும், அதன் நிர்வாகிகளும் மக்களின் அபிமானத்தை எவ்வளவு தூரம் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாக இருந்தது.

திரு எஸ். கே. வேலாயுதம் முதலியார் அவர்கள் பொங்கி வரும் உற்சாகத்துக்கு இடையில் வரவேற்புரை நிகழ்த்திய பிறகு ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் எஸ். எஸ். ராமசாமிப் படையாட்சியார் துவக்கவுரை நிகழ்த்தினார்.

“நான் இந்த மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறேன். அங்கெல்லாம் தங்கள் ஊரில் பள்ளிக்கூடம் திறக்க வேண்டும் என்று கேட்கின்றனர். ஆனால் குறிஞ்சிப்பாடியிலோ ஒன்றுக்கு இரண்டாக உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இப்படி இரண்டு பள்ளிக்கூடங்கள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு நடப்பது மக்களுக்கும் கல்வி வளர்ச்சிக்கும் நல்லது தானே!” என்றார்.

“ஆமாம்! நல்ல முறையில் கல்வி வளர வேண்டும் என்று போட்டி போட்டால் நல்லதுதான். வெறும் வீம்புக்குப் போட்டி போடலாமா! எஸ். கே. வி. உயர்நிலைப் பள்ளி இவ்வளவு நல்ல முறையில் நடைபெறும்போது, இதே இடத்தில் ஒரு சில மாணவர்களை வைத்துக் கொண்டு ஜில்லா போர்டு பள்ளி நடத்துவானேன்! இந்தப் போட்டி நல்லதா! எத்தனையோ கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லை என்கிறாரே மந்திரியார், அங்கே ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தை நடத்துவதுதானே!” என்று என் அருகில் இருந்தவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். இது மந்திரியின் காதிலும் விழட்டுமே என்றுதான் இங்கே குறிப்பிட்டேன்.

விழாவில் தலைமை ஆசிரியர் படித்த ஆண்டு அறிக்கையில் பரீட்சையில் தேறும் மாணவர்கள் அதிக மார்க்குகள் வாங்கித் தேறுகிறார்கள் என்றும், படிப்புடன் கூட மாணவர்களுக்குப் பல தொழிலும் கற்றுக் கொடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது. பள்ளியின் வளர்ச்சிக்காக இந்த ஆண்டில் மட்டும் திரு எஸ். கே. வேலாயுதம் அவர்கள் ரூ. 56,183 நன்கொடை அளித்திருப்பதாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த “கல்கி” ஆசிரியர் அப் பள்ளிக்கூடத்தில் அன்று தாம் பார்த்தவைகளைப் பற்றித் தமது மகிழ்ச்சியை வெளியிட்டார். ஸ்ரீ எஸ். கே. வேலாயுதம் குடும்பத்தினர் பெருந் தொகை நன்கொடை அளித்திருப்பதைப் பாராட்டினார். “இவ்வளவு நன்கொடையும் நல்ல முறையில் பயன்படுவதற்குத் திறமையுள்ள தலைமை ஆசிரியர் கிடைத்திருப்பது தான் விசேஷம். இதை ஸ்ரீ வேலாயுதம் முதலியார் குடும்பத்தாரின் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்!” என்றார்.

ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் காந்தி மகானின் உருவப் படத்தைத் திறந்து வைத்து அம் மகான் காட்டிய வழியில் அனைவரும் நடக்க வேண்டும் என்று கூறினார். சுவாமி சுத்தானந்த பாரதியார் ஐரோப்பாவில் தமது அநுபவங்களைப் பற்றி உரைத்து, அனைவருக்கும் ஆசி கூறினார். திருத்தணிப் போர்த் தளபதி ஸ்ரீ கே. விநாயகம் எம். எல். ஏ. தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

விழா முடிவில் பண்ருட்டி லக்ஷ்மி விலாஸ் பாங்கு ஏஜண்டு திரு ராமச்சந்திரனின் புதல்வி பேபி ரமணி என்னும் எட்டு வயதுச் சிறுமியின் இசைக்கச்சேரி பக்க வாத்தியங்களுடன் நடந்தது. அந்தச் சிறு பெண் குழந்தை நல்ல இசை ஞானத்துடன் அருமையாகத் தமிழ்ப் பாடல்களைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தாள்.

ஆண்டு விழாவில் அடுத்த முக்கியமான நிகழ்ச்சி பள்ளி மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் நடத்திய “கட்டபொம்மன்” நாடகம்.

கட்டபொம்மன் நாடகத்தில் வந்த எல்லா மாணவர்களும் “கணீர்!” “கணீர்!” என்று பேசி நடித்தனர். மாணவர்களின் நடிப்பும் தோற்றமும் அவர்கள் கனலைக் கக்கிக் கொண்டு வரும் அம்புகளைப் போல் பேசிய பேச்சுடன் போட்டியிட்டுத் தோற்றுப் போய் விட்டன! தமிழ் மக்களின் சிறந்த பண்பாட்டுக்கு உகந்த முறையில் மாணவர்களுக்கு வசனங்களை அமைத்துத் தமிழைச் சக்தியுடன் கையாளும்படி செய்திருந்த ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும்.

** ** **

குறிஞ்சிப்பாடி மக்கள் தங்கள் எஸ். கே. வி. உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவை மிகச் சிறந்த திருவிழாவாகவே நடத்தினார்கள். ஊர் அலங்காரம், மேடை சிங்காரம், ஊர்வலம், பாண்டு வாத்தியம், சாரணச் சிறுவர்கள் அணி வகுப்பு எல்லாம் பிரமாதமாக இருந்தன. தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும் விழாவுக்கு வந்து சிறப்பித்திருந்தார்கள்.

தமிழகத்தில் நல்ல காரியங்களுக்கு எப்போதும் ஆதரவு உண்டு என்பதைக் குறிஞ்சிப்பாடி மக்கள் அந்த விழாவில் நிரூபித்தார்கள். திரு எஸ். கே. வேலாயுதம் அவர்கள் காந்தி ஞாபகார்த்த மண்டப நிதிக்கு ரூபாய் அறுநூற்று அறுபது பண முடிப்பைக் “கல்கி” ஆசிரியரிடம் வழங்கினார்கள். அப்போது எழுந்த கரகோஷ ஆரவாரம் காந்தி மகானிடம் மக்களுக்கு உள்ள பக்திக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

குறிஞ்சிப்பாடி கிராமத்தில் நடந்த இந்த வைபவங்கள் தமிழ் நாட்டின் ஒவ்வொரு கிராமத்துக்கும் சிறந்த வழிகாட்டித் திகழட்டும்!



சோர்வு மேலிட்டு
தினசரி வேலை
வேம்பாகத்
தோன்றும் பொழுது
புத்துணர்ச்சியைப் பெற
ஒரு தேக்கரண்டி க்ளுகோவிடா சாப்பிடுங்கள்.
Glucovita
GLUCOSE-D
க்ளுகோவிடாவில் அடங்கியுள்ள டெக்ஸ்ட்ரோஸ், கால்ஷியம், பாஸ்பரஸ், விடமின் டி முதலான பொருள்கள் நீங்கள் இழந்த சக்தியை சீக்கிரமே ஈடு செய்கின்றன. ஒவ்வொரு தடவையும் உங்களுக்குப் பிரியமான பானத்தை அருந்தும் பொழுது ஒரு தேக்கரண்டி க்ளுகோவிடாவை சேர்த்துச் சாப்பிட்டால் உங்களை நாள் முழுவதும் வலிமையோடிருக்கச் செய்கிறது.
க்ளுகோவிடா
உடலுக்குகந்த உணவு
காரன் ப்ராடக்டஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 994, பம்பாய் 1
தபால் பெட்டி நெ. 882, கல்கத்தா 1

மலைக்கள்ளனில்....


குதிரைக்கு ஏன் 'பங்களா' போடக்கூடாது? சில வீடு களில் சொறி நாய்க்கு 'பங்களா' போடுகிறாங்க!!
இவர் பெரிய அறிவுக்களஞ்சியம்! 'ஐடியா' கொடுக்க வந்துவிட்டாரு!!
மலைக்கள்ளன் நம்பள்கி தோஸ்து!
உர்.ர்..குன்னும்! மலைக்கள்ளனுக்கு பங்களா வேறயா?
பேசுகிறது புதிய விஸ்லேயே. என்ன பேசுகிறீர் கள்?
தமிழ்!

மலைக் கள்ளன்

ஸோமாஸ்

வீரம், தீரம், வாள் யுத்தம், மல் யுத்தம், காதல், பகைமை, பரோபகாரம், ஆபத்து, எதிர்பாராத உதவி, மிரட்டல், உருட்டல், கொலை, அஞ்ஞாத வாசம், ஒருவர் பல வேஷங்களில் தோன்றுதல், இப்படிப் பலதரப்பட்ட விஷயங்களை ஒருங்கே கொண்ட ஒரு களிப்பூட்டும் படம் பார்க்க வேண்டுமானால், கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோஸ் தயாரித்திருக்கும் "மலைக் கள்ளன்" படம் பார்க்க வேண்டும்.

மலைக்காட்டில் மறைந்து வாழும் கள்ளனாக வாழ்ந்து வந்த மலைக்கள்ளன், ஒரு பொதுநல ஊழியன்! கனிவும் கசிவும் கொண்ட இதயம் படைத்த அதிசயக் கள்ளன் அவன். ஏழைகளின் தோழனாகவும், பாட்டாளி மக்கள் படும் பாட்டை அறியாத பணக்காரர்களுக்குப் பரம விரோதியாகவும் அவன் இருந்து வந்தான்; துஷ்டர்களை அடக்கும் முயற்சியில் துணிகரச் செயல்களைச் செய்து, அவன் இந்தப் படத்தில் பல பல திடுக்கிடும் சம்பவங்களைப் புகுத்தி யிருக்கிறான்.

பனை மரத்தின் கீழிருந்து கொண்டு பாலைப் பருகினாலும், உலகம் எப்படி அதைப் பாலென்று ஒப்புக் கொள்ளும்? மலைக் காட்டில் மர்ம மனிதனாக வாழ்ந்த மலைக் கள்ளன் மேல் பல கொலை, கொள்ளைக் குற்றங்கள் சுமத்தப்பட்டன. நாளடைவில், மலைக் கள்ளன் என்ற பெயரைக் கேட்டால் மக்கள் பயந்து நடுங்கும் அளவுக்கு வந்து விட்டது.

இந்த மர்ம வாழ்வையும், மலைக் கள்ளனையும் வெளிப்படுத்திக் கொடுப்பதற்குக் கதாநாயகி பூங்கோதை வருகிறாள். அவள், விஜயபுரி மிராசுதாரான சொக்கேச முதலியாரின் ஒரே மகள்; அவள் அழகிலே அல்லி மலர்; அஞ்சா நெஞ்சத்தில் அல்லி ராணி.

இந்த இருவரையும் ஒன்று சேர்த்து வைப்பதற்கு அயோக்கிய சிகாமணியாகிய வீரராஜன் வருகிறான்!

வெள்ளை வேஷ்டியின் தூய்மையையும் அழகையும் எடுத்துக் காட்ட அதற்குக் கறுப்புக் கரை வேண்டியிருக்கிறது. அதுமாதிரி, நல்லவர்களின் நல்ல குணத்தை எடுத்துக் காட்ட நாசகாரர்களின் உதவி தேவையாயிருக்கிறது. மலைக்கள்ளனின் நல்ல குணாதிசயங்களை எடுத்துக் காட்டுவதற்கு, வீரராஜனின் கொடிய செயல்கள் உதவியா யிருக்கின்றன. அவனும் அவனுடைய சகாக்களும் இல்லையென்றால், மலைக்கள்ளன் தன் மர்ம வாழ்க்கையை மாற்றிக் கொண்டிருக்க முடியாது; பூங்கோதை ஒருநாளும் ஒரு கள்ளன் தன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள இடம் தந்திருக்க மாட்டாள்; கள்ளனுடைய மாளிகையில் நடனமாடி யிருக்க மாட்டாள்; காட்டுப் பாதையில் அவனுடன் நிர்ப்பயமாகப் பாட்டுப் பாடியிருக்கவும் மாட்டாள்.

வீரராஜனின் இச் செயல்களுக்கு, காற்று நெருப்புக்கு உதவி செய்வது போல், குட்டிப் பட்டி ஜமீன்தார் பேருதவியா யிருக்கிறார்; கொள்ளைக்காரக் காத்தவராயன் தன் கூட்டத்தினருடன் உறுதுணையா யிருக்கிறான்.

ஒருநாள், பூங்கோதையின் தகப்பனார் சொக்கேச முதலியார் தம் மகளுக்கு வரன் தேடும் நிமித்தம் வெளியூருக்குப் போகிறார். அந்தச் சமயம் பார்த்து, வீரராஜன் காத்தவராயனின் உதவியால் நள்ளிரவில் பூங்கோதையைத் தூக்கி வரும்படி செய்கிறான். இதை எப்படியோ அறிந்த மலைக் கள்ளன், காத்தவராயனின் ஆட்களிடமிருந்து தந்திரமாகப் பூங்கோதையைத் தப்புவித்து, பல சாகசச் செயல்கள் புரிந்து தன் மலை மாளிகைக்கு அழைத்துச் செல்கிறான்.

மலைக்கள்ளன் வீட்டில், (மன்னிக்கவும், மாளிகையில்!) பூங்கோதை மிகவும் அன்புடன் நடத்தப்படுகிறாள். முதலில், மலைக்கள்ளனுக்குத் தன் மனத்தில் இடம் கொடாமல், மலைப்பாறையாக மனத்தை வைத்துக் கொண்டிருந்த பூங்கோதை, நாளடைவில் அவன்பால் கனிவும் கசிவும் கொள்கிறாள்; கொற்றம் கொண்ட அவன் வெற்றிப் புயங்களில் மயக்கம் கொள்ளுகிறாள். மலைக்கள்ளன் பூங்கோதையின் விருப்பப்படி, தன் நண்பர் அப்துல் ரஹீமின் கோச்சு வண்டியில் அவளை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான். பூங்கோதையை எப்படியும் கவர்ந்து சென்று விடுவது என்னும் நோக்கத்துடன் காத்திருந்த காத்தவராயனது ஆட்கள் கண்களில் மண்ணைத் தூவும் திட்டமும் அத்துடன் நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

மலைக்கள்ளனாக நடிக்கும் ஸ்ரீ எம். ஜி. ராமச்சந்திரன் இப் படத்தில் மூன்று தோற்றங்களில் தோன்றி மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். பூங்கோதையை மலைப்பாதையில் அழைத்துச் செல்லும் போது சுமார் அறுபது வயதுக் கிழவனாக, தத்ரூபமாக நடித்திருக்கிறார். பிறகு மலைக்கள்ளனாக, அழகும் ஆண்மையும் கொண்ட இளைஞனாக, நன்கு நடித்திருக்கிறார். இந்தப் படத்திலேயே மிகவும் சோபையுள்ள பாத்திரம் அப்துல் ரஹீம்

சாஹிப்தான். "ஹரே, நீ சும்மா இருக்கிறான்- கம்பள்கி தோஸ்த் மலைக்கள்ளன் கையிலே சொல்லிப் பார்க்கிறான்!" என்று இப்படி ரஞ்சகமான பாஷையில் பாவத்தோடு பேசி எல்லாரையும் திணற அடிக்கிறார், அந்த சாஹிப். அந்தப் பாத்திரத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் நடை, உடை, பாவனை, குரல் எல்லாவற்றிலும் பிரமாதமாக விளங்கி "வஹ்வா, பஹூத் அச்சா!" என்று பாராட்டும்படி செய்து விட்டார்.

அவர் ஒரு கட்டத்தில் வசவுகளையும் சாபங்களையும் வாங்கிக் கட்டிக் கொள்கிறார். மலைக்கள்ளன்தான் அப்துல்ரஹீம் சாஹிப் என்பதை அறியாத பூங்கோதை, தன் கரம் பற்றிய சாஹிபுவைக் கண்டபடி ஏசித் தன் பலம் கொண்ட மட்டும் கெட்டித் தள்ளி விடுகிறாள். பூங்கோதையின் அத்தை, ஒரு சாஹிபு பூங்கோதையுடன், உறவாடுவதாக நினைத்துக் கூகூவென்று கதறி, திட்டி, அழுது அமர்க்களம் செய்து விடுகிறாள். அவ்விடம் வந்த பூங்கோதையின் தகப்பனார், சாஹிபுவைக் கன்னா பின்னாவென்று பேசுகிறார். இத்தனை கலாட்டாக்களுக்குப் பிறகு அப்துல் ரஹீம் சாஹிபுவின் தாடி அவிழ்ந்து விழுந்து அவரையே மலைக்கள்ளன் என்று வெளிப்படுத்துகிறது.

சொக்கேச முதலியார் சிறை வைக்கப்பட்டிருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு, அப்துல் ரஹீம் சாஹிபுவின் உதவியினால் தகுந்த ஏற்பாடுகளுடன் சென்று போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர், சொக்கேச முதலியாரை மீட்டு, வீரராஜன், குட்டிப்பட்டி ஜமீன்தார், காத்தவராயன் ஆகியவர்களைக் கைது செய்கிறார். இந்தக் கட்டம் மிகவும் பரபரப்புடன் செல்லுகிறது.

இந்தப் படத்தில் ஹாஸ்யச் சுவையை நிரப்புவதற்கு, எட் கருப்பையா உறுதுணையாயிருக்கிறார். அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் ஸ்ரீ டி. எஸ். துரைராஜ் சக்கைப் போடு போட்டிருக்கிறார். ஸப் இன்ஸ்பெக்டருக்குப் பல சமயங்களில் 'ஐடியா'க்கள் கொடுத்து, அவர் மூளையைக் குழப்பி, படம் பார்ப்பவர்களைச் சிரிப்பாய்ச் சிரிக்க அடிக்கிறார். அவர் தோற்றம், பேச்சு, பாட்டு எல்லாம் ஒரு தனிப் பாணியாக அமைந்து ஹாஸ்ய விருந்து அளிக்கின்றன.

கதாநாயகி பானுமதியைப் பற்றி நாம் விசேஷமாக எதுவும் சொல்லத் தேவையில்லை. அவரால் நன்றாகத்தான் நடிக்க முடியும்; பாவ பூர்வமாகத்தான் பேச முடியும்.

காத்தவராயனின் ஆட்களிடம் சிக்கி, கள்ளிரவில், கட்டிலோடு தூக்கிச் செல்லப்படும்போது அவர்கள் மயக்கம் தரும் பூண்டை அவள் முகத்துக்கு நேரே காட்டி உணர்விழக்கச் செய்கின்றனர். உண்மையில், அப்போது பூங்கோதை உணர்வை இழக்கவில்லை. உணர்வை இழந்துவிட்டவள் மாதிரி நடிக்கிறாள். அந்த ஒரு கண நேர நடிப்பில், தமது பேசும் விழிகளின் மூலம் பானுமதி விஷயத்தைப் படம் பார்ப்பவர்களுக்கு மட்டும் புரிய வைக்கிறார்!

படம் பார்த்து முடிந்து வெளியே, வந்து பார்த்தால், ஜன நெருக்கடி காரணமாக, திகைப்பே உண்டாகி விடுகிறது. 'நமக்கும் ஒரு மலைக்கள்ளன் தோஸ்தாக இல்லையே! இருந்தால் இந்த மாபெரும் கூட்டத்திலிருந்து 'ஜிவ்' வென்று நம்மைத் தூக்கிச் சென்று பஸ்ஸில் ஏற்றி விடுவானே!' என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தப் படம் பார்க்கிறவர்கள் பின்னால் கேட்கக் கூடாத கேள்விகள் சில இருக்கின்றன. அவை,

அந்த கனாந்தகாரமான வனாந்திரப் பிரதேசத்தில் எப்படி அந்த அற்புதமான மாளிகை எழும்பியது! அந்த மாளிகைக்குப் போகும் ஆகாசக் கம்பிப் பாதையை அத்தனை காலம் போலீஸார் எப்படிக் கண்டு பிடியாமல் இருந்தார்கள். பூங்கோதை வருவாள், வந்தால் நடனமாடுவாள் என்பதை முன்கூட்டியே அறிந்து நடன மேடை தயாரிக்கப் பட்டிருந்ததா! என்பவை போன்ற கேள்விகள்தான்.

ஹோட்டலுக்குப் போனால் பாதம் ஹல்வா வரவழைத்துச் சாப்பிடுகிறோம். மிகவும் ருசியாயிருக்கிறது. சரி, அத்துடன் நிறுத்திவிட வேண்டும். அதை விட்டு விட்டு, இந்த பாதம் ஹல்வாவில் உண்மையிலேயே பாதம் பருப்பு கலந்திருக்கிறதா! இது அசல் நெய்யில் தயாரிக்கப்பட்டது தானா! இது என்றைக்குச் செய்யப்பட்டது! இம் மாதிரி விசாரணையில் இறங்கினால் ஹல்வாவின் ருசி கெட்டு விடும். அதே மாதிரிதான் படம் பார்க்கப் போகுமுன் மனத்தைச் சில விஷயங்களில் திடம் பண்ணிக் கொண்டு போகவேண்டும். அநாவசியமான கேள்விகள் கேட்பதில்லை என்று மனத்தைத் திடம் பண்ணிக் கொண்டால், அது படம் பார்க்கப் பெருதவியா யிருக்கும்.

* * *

நாமக்கல் கவிஞர் எழுதியுள்ள சுயசரிதத்தில், அவரைப் பல கட்டங்களில் துரதிர்ஷ்டம் விடாமல் தொடர்ந்தது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய சுயசரிதத்தைப் பூர்த்தி செய்து எழுதும் போது, அதிர்ஷ்டம் தொடர்ந்த அத்தியாயம் ஒன்றும் எழுத வேண்டியதாயிருக்கும். "மலைக்கள்ளன்" என்ற கதையை டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு படம் எடுக்க முன் வந்தது கவிஞரின் அதிர்ஷ்ட சிகரம் என்று சொல்ல வேண்டும். டாக்டர் டாகூர், பங்கிம் சந்திரர், ஸ்ரீ கே. எம். முன்ஷி முதலிய பிரபல ஆசிரியர்களுக்கு இத்தகைய அதிர்ஷ்டம் கிட்டவில்லை. அவர்களுடைய பிரசித்தி பெற்ற கதைகள் வெள்ளித் திரையில் சோபிக்காமல் போய் விட்டன.

டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு எடுக்கும் படங்கள் எல்லாவற்றையும் 'பாமர' ரஞ்சிதமாகவும், 'படித்தவர்கள்' குறை சொல்ல முடியாத வகையிலும் எடுப்பதென்று உறுதி கொண்டு, அதைச் செயலில் நிறைவேற்றி வருகிறார்.

சில காலத்துக்கு முன்பு 'டப்பா சங்கீத'த்தைப் பற்றி ஒரு கிளர்ச்சி நடந்து வந்ததல்லவா! அச்சமயம் மற்ற ஸினிமாக்காரர்கள் அக் கிளர்ச்சியின் பேரில் கோபமா யிருந்தபோது, டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு எடுத்த படத்தில் அந்த டப்பா சங்கீதத்தின் தலையிலேயே ஒரு போடு போட்டு விட்டார். "பக்த துகாராம்" படம் எடுத்ததிலிருந்து கர்னாடக சங்கீதத்துக்கே அவர் படங்களில் முக்கிய ஸ்தானம் கொடுத்து வந்திருக்கிறார்.

இந்த "மலைக் கள்ளன்" படத்திலும் கர்னாடக சங்கீதம் முதன்மை வகிப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். கர்னாடக சங்கீதத்தைப் போலவே பரத நாட்டியமும் இந்தப் படத்தில் சிறப்பாக இடம் பெற்றிருக்கிறது. "நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி!" என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடலுக்கு ஸ்ரீமதி பானுமதி நல்ல முறையில் அபிநயம் பிடித்து ஆடி யிருக்கிறார்.

டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு இம்மாதிரியே இன்னும் பல உயர்தரப் படங்களைப் பாமர ரஞ்சகமாகவும் படித்தவர் மெச்சும்படியும் எடுத்து வெற்றி அடைவாராக.

வட்ட மேஜை

பரிகாரம்

நம் நாட்டில் எத்தனையோ பேர்கள், தங்களிடம் பணம் இருந்தும், தங்கள் குழந்தைகளுக்குப் படிக்க அவா இருந்த போதிலும், எஸ். எஸ். எல். ஸி. யுடன் அவர்கள் படிப்பை நிறுத்தி வேலைக்கு அனுப்புகின்றனர். இக்காரியம் இரண்டு பகுதியினரைப் பாதிக்கிறது. முதலில், அவர்கள் குழந்தைகளையே பாதிக்கிறது.

பணம் படைத்த பெற்றோர்களின் குழந்தைகளை தங்களுக்குப் பதினெட்டு வயது நிரம்பும் முன்னேயே "வேலை தேடும் படல"த்துக்குத் தயார் செய்து கொள்கின்றனர் என்றால் ஏழைகளின் பாடு என்னவென்று சொல்ல வேண்டுமா!

ஒரு காரியாலயத்தில் சுமார் பத்து ஆட்கள் வேண்டுமென்றால், வருவது பத்தாயிரம் மனுக்கள். கடைசியில், சிபாரிசு கொண்டு வரும் பணக்கார மாணவர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது.

ஆகவே வேலை கொடுக்குமுன், அரசாங்கத்தார் உட்பட எல்லோரும், ஒருவனுடைய யோக்கிய தாம்சங்களைப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், அவனுடைய பொருளாதார நிலையையும் பார்ப்பார்களேயானால், ஏழைகளின் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஒரு பரிகாரம் ஏற்படலாம்.

இதனால் தங்களுக்கு மேல் படிப்புப் படிக்க வேண்டுமென்று அவா இருந்தும், பணம் நிறைய இருந்தும், அவர்கள் அவா ஈடேறுமலிருக்கும் பல சகோதரர்களின் ஆசைக்கும் ஒரு வழி பிறக்கலாம்.

புது டில்லி
2—8—54

டி. எஸ். சங்கரன்

○●○

என்ன பயன்?

இந்திய அரசாங்கத்தில் சில ஸ்தாபனங்கள் அவை எந்த நோக்கத்துடன் எதற்காக ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த நோக்கங்கள், லக்ஷ்யங்கள் நிறைவேறுத முறையில் நடந்து கொண்டு வருவது நான் கண்ட உண்மை. இவ்விதத்திலேயே சர்வீஸ் கமிஷன், எம்ப்ளாய் மெண்டு எக்ஸ்சேஞ் ஸ்தாபனங்கள் இருந்து வருகின்றன.

நானும் எஸ். எஸ். எல். ஸி. படித்துத் தேறி சர்வீஸ் கமிஷன் பரீக்ஷையையும் 1950ல் எழுதினேன். கண்ட பலன் பணச் செலவுதான்.

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்துக்குச் சென்று பதிவும் செய்து கொண்டேன். அவர்கள் டைப் ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட் படிக்கச் சொன்னார்கள். படித்து முடிந்து விட்டது. நான் லோயர் கிரேட் பாஸ் செய்த போதிலும் மேற்படி ஸ்தாபனம் ஹையர் கிரேட் படித்துத் தேறும்படி சொல்கிறது.

நிற்க. இந்த ஸ்தாபனம் உண்மையில் வேலை செய்யும் விதத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். ஏதாவது ஒரு ஆபீஸிலிருந்து உதாரணமாய் ஒரு வேலை காலி என்று தகவல் எழுத்து மூலம் வந்தவுடன் குறைந்தது பத்து பேருக்காவது கார்டு அனுப்புகிருர்கள். இந்தக் கார்டில் எந்தத் தேதியில் எத்தனை மணிக்கு வேலை தரும் ஸ்தாபனத்துக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் வரவேண்டும் என்று எழுதியிருக்கும். வரவேண்டிய தேதிக்கு அல்லது ஒரு நாள் முன்னதாகவோ, அதே தேதியிலோ மறுநாளோதான் இந்தக் கார்டு நமக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படும்.

இந்த 'இண்டர்வ்யூ'வில் சில விசேஷ அம்சங்கள் குறிப்பிடத் தக்கவை. ஒவ்வொருவரும் தமது சொந்தச் செலவிலேயே போய் வர வேண்டும். போய் வந்தாலும் வேலை கிடைக்கும் என்று நம்ப முடியாது. 'இண்டர்வ்யூ' கார்டில் குறிப்பிட்ட தேதியில் போகாமல் இருந்தால் கண்டிப்பாய்ப் பத்து நாட்களுக்குள் ஒரு கார்டு வந்து விடும். அதில், "நீர் இந்தத் தேதி இத்தனை மணிக்கு வராததற்குத் தகுந்த முகாந்திரம் காட்டி இந்த ஆபீஸுக்கு ஒரு வாரத்துக்குள் எழுதாவிட்டால் நீர் இந்த ஆபீஸிலிருந்து உத்தியோகத்துக்கு எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவில்லை என்று நினைத்து உமது பெயரைக் கவனிக்கப்பட மாட்டாது" என்று எழுதியிருக்கும். இவைகளைத் தவிர, கார்டை இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை புதுப்பித்து அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். இதற்கு ரிப்ளை கார்டு அனுப்ப வேண்டும். கார்டு புதுப்பித்தலை மட்டும் தவறாமல் நடத்திக் கொடுக்கும் விஷயத்தில் இதுமாதிரி ஸ்தாபனத்தை வேறு எங்கும் பார்க்க முடியாது.

உபாத்தியாயர் வேலைக்குப் போதனு முறைப் பயிற்சி பயின்று ஏதாவதோர் பள்ளியின் தலைமை உபாத்தியாயர், அல்லது மானேஜ்மெண்டாரைக் கெஞ்சிக் கூத்தாடி உபாத்தியாயர் வேலை வாங்கி விடலாம் என்றதோர் நம்பிக்கை இருந்து வந்தது. 25-6-54 தேதியில் இனி உபாத்தியாயர்களை வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம்தான் எடுக்க வேண்டுமென்று செய்தி வெளியாகியிருக்கிறது. இதனால் பயன் அடையப் போகிறவர் யாவர்?

எம்ப்ளாய் மெண்டு எக்ஸ்சேஞ்சுகள், சர்வீஸ் கமிஷன்கள் எப்பொழுது நாட்டை விட்டுத் தொலைகின்றனவோ அன்றே நமது நாடு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்த சுபிட்ச நாடாக மாறும்.

மானமதுரை
2—8—54

ச. ரா. வெங்கட்டராமன்

○●○

மக்களின் அதிருப்தி

உடன்குடியிலிருந்து மெய்ஞ்ஞானபுரம் மார்க்கமாகத் தூத்துக்குடிக்கு பஸ் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. இந்த வழி உடன்குடியிலிருந்து தூத்துக்குடிக்குத் திருச்செந்தூர் மார்க்கமாய்ப் போவதைவிடப் பதினைந்துமைல் குறைவாகவும் நேரத்தில் ஒரு மணி குறைவாகவும் கட்டணத்தில் ஐந்து அணுக்கள் குறைவாகவும் இருக்கிறது.

மேற்படி பஸ் ஜூலை 28 தேதியிலிருந்து வேறு பஸ் கம்பெனிக்காரர்கள் ஏதோ நடவடிக்கைகள் நடத்தி அதன் காரணமாகத் திடீரென நின்றுவிட்டது. தினசரி 74 பிரயாணிகள் சௌகரியமாகப் பிரயாணம் செய்து வந்தார்கள். வேறு ஒரு கம்பெனியின் நலத்திற்காக நிறுத்தி விட்டது. மக்களிடையே பெரிய அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கிறது.

சென்னை சர்க்கார் உடனே இதைப் பரிசீலனை செய்து மீண்டும் உடன்குடியிலிருந்து மெய்ஞ்ஞானபுரம் மார்க்கமாகத் தூத்துக்குடிக்குப் பஸ் ஓட ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திருச்செந்தூர்
30—7—54

ஜி. நாராயணன்
காரியதரிசி, தாலுகா காங்கிரஸ் கமிட்டி.

சக்கரவர்த்தித் திருமகன்

19. கூனியின் போதனை

அது வரையில் ராமனைத் தன் வயிற்றில் பிறந்த குழந்தையாகவே பாவித்து வந்த கைகேயி இப்போது மந்தரையின் உபதேச வலையில் சிக்கிக் கெட்டுப் போனாள்.

"பயமாக இருக்கிறது. என்ன செய்யலாம் சொல், மந்தரா! கௌசல்யைக்கு அடங்கி நான் அவள் வேலைக்காரியாகப் போவதா? ஒரு நாளும் முடியாது. பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தே தீர வேண்டும். நீ சொல்லுவதே சரி. ராமனை வனத்துக்கு அனுப்பிவிட வேண்டும் என்பது நிச்சயம். இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? சொல், நீதான் சாமர்த்தியசாலி" என்று மந்தரையைச் சரணமடைந்தாள். அந்தச் சமயம் கைகேயியின் கண்களுக்கு மந்தரையின் கூன் வடிவம் கூட மிகச் சௌந்தாயமாகக் காணப்பட்டது. இது வெறும் ஹாஸ்யம் அல்ல, சூட்சமமான மனோ தரும ரகசியம்.

"கைகேயி! இது என்ன விந்தை? உபாயம் என்னையா கேட்கிறாய்? உனக்கு ஏன் இவ்வளவு மறதி வந்து மூடிக் கொண்டது? அல்லது வேஷம் போடுகிறாயா? நானே சொல்ல வேண்டுமென்றால் சொல்லுகிறேன், கேள்" என்றாள் மந்தரை.

இதைச் சொல்லி விட்டுக் கொஞ்சம் நிறுத்தினாள்.

"சொல், சொல், எப்படியாவது பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும், ராமனுக்கு அபிஷேகம் நடக்காமல் செய்ய வேண்டும்" என்றாள் கைகேயி, பரபரப்பாக.

"சொல்லுகிறேன், அவசரப்படாதே. முன்னொரு காலத்தில் உன் புருஷன் தசரத சக்கரவர்த்தி தெற்கே சம்பரனோடு யுத்தம் செய்தது நினைவு இருக்கிறதா? நீயும் கூட இருந்தாயே? இந்திரனுக்கு உதவியாகப் போனான் அல்லவா உன் புருஷன்? வைஜயந்தி நகரத்துச் சம்பரனை இந்திரன் சமாளிக்க முடியாமல் தசரதனுடைய உதவியை நாடினான். தசரதன் சென்று சண்டையிட்டு உடம்பெல்லாம் காயப்பட்டு நினைவிழந்து போனான் அல்லவா? அப்போது அவனுடைய தேரை நீயே நடத்திச் சாமர்த்தியமாக யுத்தகளத்திலிருந்து வெளியே கொண்டு போய், அரசன் உடலில் பாய்ந்திருந்த அம்புகளையெல்லாம் மெதுவாக எடுத்து நினைவு தெளியச் செய்து அவன் உயிரைக் காப்பாற்றினாய். மறந்து விட்டாயா?

அப்போது அவன் உனக்கு என்ன சொன்னான்? 'இரண்டு வரங்களைக் கேள்; எதைக் கேட்டாலும் நான் தருவேன்' என்று அவன் சொல்ல, 'எனக்கு வேண்டும்போது கேட்கிறேன், இப்போது வேண்டாம்' என்று நீ சொல்ல, 'அப்படியே' என்று அவன் கூறினான் அல்லவா? நீயே எனக்கு இதைச் சொல்லியிருக்கிறாய். நீ மறந்து விட்டாய், நான் மறக்கவில்லை. அதை வைத்து இப்போது காரியத்தைச் சாதிக்கலாம். ராம பட்டாபிஷேகத்தை நிறுத்தி பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய் என்று உன் புருஷனைக் கேள். இரண்டு வரத்தில் முதலாவதாக அதைக் கேள். இரண்டாவதாக ராமனைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று கேள். பாபம் என்று தயங்காதே! பயப்பட்டு நடுங்காதே! நான் சொல்வதைக் கேள். அப்படி ராமனைக் காட்டுக்கு அனுப்பி விட்டால்தான், ஜனங்கள் அவனிடம் வைத்திருக்கும் அபார அன்பும் பற்றும் நாளாவட்டத்தில் மறைந்து போய், உன் குமாரனுடைய யுவராஜ பட்டம் ஊர்ஜிதப்படும். போய், கோபாக்கிரஹத்தில் தரையில் படுத்துக் கொள். பழைய துணி உடுத்திக் கொண்டு தரையில் கிட! அரசன் வந்தபோது பேச வேண்டாம். கண்ணெடுத்தும் பார்க்க வேண்டாம். உன் துயரத்தை அவன் சகிக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும்.

ராஜாஜி

நம்முடைய காரியம் வெற்றியுடன் முடியும்'' என்ருள் மந்தரை.

''அரசன் என்ன வெல்லாமோ ஆசை காட்டுவான். அதற்கு உட்படாதே! கேட்ட இரண்டு வரமே வேண்டும் என்று பிடிவாதமாக இரு. சத்தியத்துக்குப் பயந்த அரசன் கட்டாயம் வழிக்கு வருவான். உன்னிடம் அவன் வைத்திருக்கும் காதலின் வேகம் எனக்குத் தெரியும். உனக்காக உயிரைக் கொடுக்க வேண்டுமானுலும் கொடுப்பான். நெருப்பில் விழச் சொன்னுலும் விழுவான். நான் சொன்னபடி செய், பயப்பட வேண்டாம். ராமனை வனத்துக்கு அனுப்பினுலொழிய உன் காரியம் சாதக மாகாது. ராமன் வெளியேற்றப்பட வேண்டும். அப்போதுதான் பரதனுக்கு நீ சம்பாதித்துத் தரும் பதவி ஸ்திரமாகும். இல்லாமற் போனுல் பெற்ற பதவி கனவாக மறைந்து போகும். இதை நினைவில் வைத்துக் கொள். இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்காதே! ஜாக்கிரதை!'' என்ருள் மறுபடியும்.

கூனியின் இந்த உபதேசத்தைப் பெற்றதும் முதலில் பயத்தில் மூழ்கிய கைகேயியின் முகம் பிறகு மலர்ந்தது. ''உன் புத்தி கூர்மையை நான் என்ன வென்று சொல்லுவேன், மந்தரா! என்னைக் காப்பாற்றினுய்!'' என்று சொல்லிக் குதிரைக் குட்டியைப் போலத் துள்ளிக் குதித்தாள்.

''தாமதம் செய்யாதே, செய்யவேண்டியதை உடனே செய். கரை உடைந்து போன பிறகு ஏரிக்கு அணை கட்ட முடியாது. சொன்னதை யெல்லாம் கவனத்தில் வை. பிடிவாதமாக இருக்க வேண்டும். நிச்சயமாக உன் காரியம் சித்தியாகும்'' என்று ராமனை வனத்துக்கு அனுப்புவதைப் பற்றி மறுபடியும் வற்புறுத்திச் சொன்னுள்.

கைகேயி ''சந்தேகப் படாதே. நான் உறுதியாக இருப்பேன். இதோ, பார்!'' என்று அப்போதே கோபாக்கிரஹத்துக்குள் நுழைந்து தன் ஆபரணங்களையெல்லாம் சிதறி யிறைத்து விட்டு, துணியை மாற்றிக் கொண்டு தரையில் படுத்துக் கொண்டாள். படுத்தவள் அழுத குரலில் மந்தரைக்குச் சொன்னுள். ''மந்தரா! என் தந்தை கேகய ராஜனிடம் நீயே போய்ச் சொல்லுவாய். பரதனுக்குப் பட்டாபிஷேகம் என்ருே, அல்லது கைகேயி இறந்தாள் என்ருே, இரண்டில் ஒன்று நீயே போய்ச் செய்தி சொல்லி விடு, என் மந்தரையே!'' இவ்வாறு சொல்லி உண்மையிலேயே தசரதன் செய்ததெல்லாம் மோசம் என்று எண்ணி அவன்மேல் கடுங்கோபத்தோடு தரையில் படுத்தாள்.

அப்போதும் அவள் அழகு குறையவில்லை. சிரித்தாலும் அழகு, கோபித்தால் அதுவும் ஒரு அழகு அல்லவா அழகைப் பெற்ற பெண்ணின் முகம்?

* * *

பாப எண்ணம் நன்ருகப் புகுந்து விட்டது. கைகேயியினுடைய சுபாவம் முற்றிலும் மாறிப் போயிற்று. தன்னுடைய வாழ்க்கை அடிமை வாழ்க்கையாகப் போகும், பரதன் உயிருக்குப் பெரிய ஆபத்து அருகில் வந்து விட்டது என்கிற திகில் பிசாசு போல் அவள் உயிரைப் பிடித்துக் கொண்டு விட்டது. இதுவரையில் என்றும் செய்யாத வேலை.



புருஷனை ஒரு பெரிய விஷயத்தில் நிர்ப் பந்திப்பதில் ஏற்படக் கூடிய கூச்சமும், ராமனைக் காட்டுக்கு அனுப்பு என்று கேட்கப் புகுவதில் உண்டாகும் வெட்க மும், பாப பயமும் அனைத்தையும் உடனே மனத்தில் வெள்ளோட்டம் நடத்தி விட்டாள். உள்ளத்தைக் கல் லாக்கிக் கொண்டு விட்டாள்.

மிகப் பெரிய துக்கம் மேலிட்டவளாக உயிர்த்தும், வியர்த்தும், கண்களை மூடி யும் நாக கன்னிகையின் அழகைப் பெற்ற கைகேயி கூந்தலை விரித்துத் தூசி படிந்த தரையில் கிடந்தாள். ஒரு அழகிய பறவை வேடனுடைய அம்பால் தாக்கப் பட்டுக் கீழே திடீரென்று விழுந்ததுபோல் தரையில் கிடந்தாள். அவளுடைய உடலை அலங்கரித்த புஷ் பங்களும் சகல திவ்விய ஆபரணங் களும் இங்கு மங்கும் கருத்த ஆகாயத் தில் நட்சத்திரங்களைப் போல் பிர காசித்துக் கொண்டு ஊடல் அறையில் சிதறிக் கிடந்தன.

20. சத்தியம் தவறுதீர்!

சபையில் காரியங்களை யெல்லாம் முடித்து விட்டு, பட்டாபிஷேக மகோற் சவத்துக்காகச் செய்ய வேண்டியதை யெல்லாம் பூர்த்தியாக உத்தரவிட்டு, ஒரு கவலையும் இனி இல்லை என்று சந்தோஷ மடைந்து தசரதன் தன் காதல் மனைவி கைகேயி தேவியினுடைய அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான். அரசியல் காரியங்களில் கிரமப்படி கேட்க வேண்டியவர்களை யெல்லாம் கேட்டுச் சம்மதம் பெற்றுப் பட்டாபி ஷேகத் தீர்மானம் முடிந்து விட்டது. ஒரு பெரிய பாரம் தீர்ந்து கவலையற்று ஓய்வு ஏற்பட்டால் உடலின் பசு தர்மம் தலை எடுப்பது இயற்கை. உடனே போய்த் தன் அழகிய காதல் மனைவி யோடு விஷயங்களைச் சொல்லிச் சல்லாப சுகம் அடையலாம், பொழுது விடிந்ததும் உற்சவம், அதுவரையில் ஆசை தீரப் போகத்தில் மூழ்கலாம் என்கிற எண் ணத்தோடு வெள்ளை மனத்துத் தசரதன் அந்தப்புரத்தில் புகுந்தான்.

எப்போதுமே இளைய மனைவியின் அரண்மனை விசேஷமான அழகு வாய்ந் தது. ரமணியமான தோட்டமும் வாவி களும் மேலே பறக்கும் பறவைகளும் நீரில் விளையாடும் பறவைகளும் சித்திரத் தோகைகளை விரித்தாடும் மயில்களும் மரங்களி லெல்லாம் விதம் விதமான புஷ்பங்கள் மலர்ந்து பிரகாசிக்கும் காட்சியுமாக அந்த அந்தப்புரம் எப் போதையும் விட அன்று அதிக அழகு பெற்று விளங்குவதாக எண்ணினான் தசரதன். ஆகாயத்தில் ராகுக் கிரகம் விழுங்கக் காத்துக்கொண் டிருக்கிற நாளில் அதை யறியாத சந்திரன் பய மின்றிப் பூரண கலையுடன் உதயமாவது போல் முகத்தில் மகிழ்ச்சி ஜொலிக்கத் தசரதன் கைகேயியின் அழகிய இல்லத் தில் பிரவேசித்தான். அங்கே என்ன காத் திருக்கிறது என்று அவன் அறியவில்லை!

அரண்மனையில் வாசனைத் திரவி யங்கள் பான விசேஷங்கள் வழக்கம் போல் எல்லாம் அந்த அந்த இடத்தில் வைக்கப் பட்டிருந்தன. அவனுடைய பிரகிருதி வேகம் அதிகரித்தது. ஆச னங்களை யெல்லாம் பார்த்தான். அவ னுடைய காதலியைக் காணவில்லை.

இன்பத்துக்கென்றே தனியாக அமைக் கப் பெற்ற மனைவியாவாள் கைகேயி. அவள் ராஜ விவகார விஷயங்கள் எதி லும் தலையிடுவ தில்லை. அவளுடைய அந்தப்புரம் நுழைந்ததுமே அரசனுக்கு உள்ளம் முழுதும் காதல் வேகம் பொங் கும். எப்போதும் அரசன் வரும் சமயம் அவள் காத்திருந்து எதிர் கொண்டு அணைத்துக் கொள்ளுவாள். இன்று ஏன் அவள் காணப்படவில்லை? அரசன் கொஞ்சம் திகைத்தான். படுக்கைகள் ஆசனங்கள் எல்லாம் மறுபடி உற்றுப் பார்த்தான். விளையாட்டுக்காக ஒளிந்து கொண்டிருக்கிறாளோ என்று எண்ணி மகிழ்ச்சி யடைந்து திரும்பத் திரும்பக் கவனித்துப் பார்த்தான். என்றும் இப்படி இருந்தது இல்லையே, என்ன காரணம் என்று யோசித்து அங்கிருந்த ஒரு காவல் பெண்ணைக் கேட்டான். அவள் கை கூப்பி "சுவாமி, தேவியார் மிகக் கோபங் கொண்டு உள்ளே போய் விட் டார்கள்" என்றாள்.

அரசன் பயந்தான். உள்ளே சென்று ஊடலறைக்குள் நுழைந்தான். கொஞ்ச மும் எதிர்பாராத விபரீதக் காட்சியைக் கண்டான்.

* * *

கைகேயி அரசனைக் கண்ணெடுத் துப் பார்க்கவில்லை. அப்பாவி அரச னுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எவ்

வாறு விளங்கும்? கல்மஷம் என்பது கொஞ்சமும் அவன் உள்ளத்திலில்லை. கைகேயினுடைய உள்ளத்திலோ பாபம் நிறைந்து அடைத்துக் கொண்டிருந்தது. இவன் வயதோ அதிகம். அவளோ இன்னும் சிறு வயது. காதல் உணர்ச்சியோ அரசனுக்கு அதிக வேகத்தி லிருந்தது. இந்த நிலையில் அவனுக்கு ஒன்றும் விளங்காமல் பைத்தியக்காரனைப் போல் நடந்து கொண்டான்.

கீழே கிடந்த அவளருகில் இவனும் தரையில் உட்கார்ந்து அவள் தலையை மெதுவாகத் தூக்கித் தன் மடியின் மேல் வைத்துக்கொண்டு தடவிக் கொடுத்தான்.

"உனக்கென்ன வாயிற்று? உடம்பில் என்ன? எங்கேயாவது வலியா? எனக்கு சேவை செய்யச் சிறந்த வைத்தியர்கள் இல்லையா? உடனே வரவழைக்கிறேன். எதுவாயிருந்தாலும் சரிப்படுத்தி விடுவார்கள். நீ பயப்பட வேண்டாம்" என்றான்.

கைகேயி பெருமூச்சு விட்டாள்; பேசவில்லை.

"உன்னை யாராவது அரண்மனையில் அவமதித்துப் பேசி விட்டார்களா? யாராவது ஏதாவது தவறு செய்திருந்தால் எனக்குச் சொல், கடுந்தண்டனை விதித்து விடுவேன். யாராவது உன்னை அலட்சியம் செய்து உனக்குக் கோபம் உண்டாக்கினார்களா? அல்லது உனக்கு ஏதாவது வேண்டுமாயிருந்து என்னையறியாமல் அதை நான் கவனிக்காமல் விட்டு விட்டேனா, சொல்!"

இவ்வாறெல்லாம் சாதாரணமாகப் பெரிய வீட்டு நிருவாகத்தில் ஏற்படக் கூடிய குறைகளை எல்லாம் கேட்டுப் பார்த்தான்.

கைகேயியோ இதையெல்லாம் ஒன்றும் கவனிக்காமல் பிசாசு பிடித்தவள் போல் பேசாமல் கிடந்தாள்.

"உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். யாரைத் தண்டிக்க வேண்டும்? தண்டிப்பேன். யாரைத் தண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டும்? உடனே கொலையாளியாக இருந்தாலும் விட்டு விடுவேன்!—" இப்படியெல்லாம் காம மோகத்தால் பிடிக்கப்பட்டு, கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

"எனக்கு உள்ள சர்வாதிகாரம் உனக்குத் தெரியாதா? யாருக்கு என்ன கொடுக்க வேண்டும்? எந்த தேசத்தில் யாரை என்ன செய்ய வேண்டும், சொல் அதை உடனே செய்து விடுவேன்" என்றான் மறுபடியும்.

கைகேயி எழுந்து உட்கார்ந்தாள். அரசனுக்கு உடனே சந்தோஷமாய் விட்டது. கைகேயி பேச ஆரம்பித்தாள் :

"என்னை யாரும் அலட்சியமாகப் பேசவில்லை, யாரும் நிந்திக்கவில்லை, அவமானப் படுத்தினதில்லை. அரசனே, உம்மால் ஆகவேண்டிய காரியம் இருக்கிறது. அதை நீர் செய்து தரவேண்டும். செய்து தருகிறேன் என்று நீர் சத்தியவாக்குத் தரவேண்டும். தந்தால் சொல்லுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் அப்பாவியான தசரதனுக்கு மனம் பூரித்து விட்டது. எது வேண்டினும் அதைச் செய்யும் சக்தி எனக்கிருக்க, இனி என்ன கவலை என்று தைரியம் அடைந்தான். முகம் மலர்ந்து, "கைகேயி! உடனே சொல், உனக்கு என்ன வேண்டும்? அதைச் செய்கிறேன். எதன் மேல் ஆணையிட்டுச் சொல்ல வேண்டும்? எனக்கு மிகப் பிரியமானது எது? பெண்களுக்குள் நீதான் என் அன்பின் உச்சிக்கோடு. ஆண்களுக்குள் ராமசந்திரனை விட எனக்கு வேறு யாரும் பிரியமில்லை. அந்த ராமன் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீ எது வேண்டுமென்கிறாயோ அதைச் செய்வேன். இது உறுதி," என்றான்.

பாபம் முற்றிக் கொண்டு வந்தது. "ராமன் மேல் ஆணை" என்றதுமே கைகேயிக்குத் தைரியம் பிறந்தது.

"அப்படியா? ஆனால் சரி, ராமன் மேல் ஆணையிட்டுச் சொல்வீர். நான் கேட்பதை மறுக்காமல் தருவதாக மறுபடியும் சபதம் செய்வீராக" என்றாள்.

"என் காதல் அரசி! அப்படியே! இதோ சபதம் செய்கிறேன். என் அன்புக்குரிய ராமன் மேல் ஆணை. நான் அடைந்த சகல புண்ணியத்தின் மேலும் ஆணை; நீ என்ன விரும்புகிறாயோ, அதைச் செய்வேன், இது சத்தியம்" என்றான் அரசன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கைகேயிக்குத் தன் மகா பாப எண்ணத்தைக் கருதி ஓரளவு சந்தேகம் உண்டாயிற்று. ஒருவேளை 'மாட்டேன், இது மகா பாபம், ஆணையும் சபதமும் இத்தனை பெரிய பாபம் செய்யும்படி இடம் தராது' என்று சொல்லி விடுவானோ என்று பயம் ஏற்பட்டது. எழுந்து நின்று கைகள் கூப்பி நான்கு திசைகளும் பார்த்து உரத்த

குரலில் "ஓ தேவர்களே! என் புருஷன் செய்த சபதத்திற்கு நீங்கள் எல்லாரும் சாக்ஷியாவீர்கள். ஏ! சூரிய சந்திராதி கிரகங்களே, நீங்களும் சாக்ஷி. ஏ! பஞ்ச பூதங்களே, நீங்களும் சாக்ஷி. சத்யம் தவறாத என் புருஷன் செய்த சபதத்திற்கு நீங்கள் எல்லாரும் சாக்ஷியாவீர்கள்!" என்று சொன்னாள்.

மகிழ்ச்சி மலர்ந்த முகத்தோடு தசரதன் கண் கொட்டாமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். காம மோகத்தால் அரசன் மதியிழந்து வலையில் சிக்கினான் என்று நிச்சயம் செய்து கொண்டாள். அதன் மேல் தைரியமாக ஆரம்பித்தாள்:

"அரசனே, நினைவிருக்கிறதா? முன் நாளில் யுத்த பூமியில் காயப்பட்டு உயிரிழக்கும் தறுவாயில் நீர் இருந்தபோது இருட்டில் ரதத்தை நானே மெள்ளச் செலுத்தி, அப்புறப்படுத்தி, உம்முடைய உடலில் பாய்ந்திருந்த அம்புகளையெல்லாம் எடுத்துச் சுகப் படுத்தினேன். மூர்ச்சை தெளிந்ததும், 'பகைவர்கள் என்னைக் கொன்றிருப்பார்கள்; நீ எனக்கு உயிர் கொடுத்தாய். உனக்கு வேண்டிய வரங்கள் இரண்டு கேள்' என்றீர். நான் 'இப்போது வேண்டாம், பிறகு வேண்டும் போது கேட்கிறேன். இப்போது நீர் உயிர் தப்பியதே எனக்குப் பெரு மகிழ்ச்சி' என்று சொன்னேன் அல்லவா? நினைவிருக்கிறதா?" என்றாள்.

"நன்றாக நினைவிருக்கிறது! இரண்டு வரங்களையும் கேள். இப்போதே தருகிறேன்" என்றான் தசரதன்.

"சபதம் செய்திருக்கிறீர். ராமன் மேல் ஆணையிட்டுச் சபதம் செய்திருக்கிறீர். தேவர்களும் பஞ்ச பூதங்களும் சாக்ஷியாக இருக்கிறார்கள். இதோ கேட்கிறேன். சத்தியத்தைக் காப்பாற்றுவீர். உம்முடைய முன்னோர்கள் வழியில் நின்று நல்ல கதியடைவீர். வாக்குத் தவறாதீர். இப்போது அமைத்து வைத்திருக்கும் பட்டாபிஷேக சாமக்கிரியைகளைக் கொண்டு பரதனுக்குப் பட்டங் கட்டுவீராக. முதல் வரமாக இதை வேண்டுகிறேன். இரண்டாவது வரம் நான் கேட்பது. உம்முடைய மகன் ராமனைப் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யும்படி உடனே தண்டகாரண்யம் அனுப்புவீர். செய்த பிரதிக்ஞையைப் புறக்கணிக்காதீர். உம்முடைய குலத்தின் புகழையும் புண்ணியத்தையும் காப்பாற்றுவீர்!" என்றாள்.



3. கடும் போர்!

கருங்காட்டு ராணி, "ஆ! என்னுடைய முயற்சி வீணாகவில்லை. என் குட்டியைக் கடைசியில் கண்டு பிடித்து விட்டேன்!" என்று மகிழ்ச்சியினால் கூவிக் கொண்டே குடிசை அருகில் சென்றது.

குடிசை வாசலில் ஏதோ சத்தம் கேட்பதை யறிந்து புலிக்காட்டு ராஜகுமாரி வெளியே வந்து பார்த்தது.

கருங்காட்டு ராணி நிற்பதைக் கண்டதும், "வருக! வருக! கருங்காட்டு ராணிக்கு ஏழையின் குடிசை எப்படித் தெரிந்தது? கரடி தம்பட்டம் கொட்ட, குரங்கார் கட்டியம் கூற வரவேண்டியவள் தனித்துவரக் காரணம் என்ன? நீங்கள் எல்லாம் ஏழையின் குடிசைக்கு வருவீர்களா?" என்று பலபடியாகக் கேலியாகக் கேட்டது புலிக்காட்டு ராஜகுமாரி.

"போதும்! உன் விளையாட்டு. நீதானா என் குட்டியைக் கவர்ந்து கொண்டு வந்தது? ராட்சதப் பறவையை அனுப்பி என் அருமைக் குட்டியைப் பறித்து வந்தது நீதானோ? நம் நட்புக்கு இதுதான் அழகோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டது சிங்க ராணி.

"பேஷ்! உனக்கும் புத்திசாலித் தனமாகப் பேசத் தெரிகிறதே? கருங்காட்டு மன்னன் உனக்குக் கற்றுத் தந்தானோ?" என்று எக்காளமாகக் கேட்டது புலிக்காட்டு ராஜகுமாரி.

"நாம் ராட்சதனிடம் இருக்கும்போது எவ்வளவு ஒற்றுமையாக இருந்தோம்! நாம் மூவரும் சகோதரிகளாகப் பழகி வந்தோமே? அதையெல்லாம் மறந்து தோழிக்கே தீங்கு செய்து விட்டாயே?" என்று இடித்துரைத்தது சிங்க ராணி.

"கருங்காட்டு மன்னன் என்னையும் செங்காட்டு ராஜகுமாரியையும் இழிவு படுத்தினான். எங்களை மணந்து கொள்ளாமல் ஒரு அசட்டுச் சிங்க ராஜகுமாரியைத் தேர்ந்தெடுத்தான். அவனைப் பழிக்குப்பழி வாங்கவே உன்னுடைய குட்டியைக்கவர்ந்துகொண்டு வந்தேன்!"

"நீ குட்டியைக் கவர்ந்து கொண்டு போனாய்! செங்காட்டு ராஜகுமாரி என் கணவரையே போருக்கு அழைத்தாள். உங்கள் நட்பெல்லாம் தாமரை இலைத் தண்ணீர் போல் ஆகிவிட்டது!" என்று கூறியது சிங்கராணி.

"போரிலே மலைக்காட்டு மன்னனை உன் கணவன் தோற்கடித்து விட்டான். செங்காட்டு ராஜகுமாரியும் போரில் மடிந்து போனாள்!" என்றது புலிக்காட்டு இளவரசி.

"அப்படியா? செங்காட்டு ராஜகுமாரிக்குச் சரியான பாடம் கற்பித்து விட்டார் கருங்காட்டு மன்னர். என் குட்டியைத் தராவிட்டால் உனக்கும் சிங்க ராஜா சரியான தண்டனை கொடுப்பார்!" என்று எச்சரித்தது சிங்க ராணி.

"அது நடக்காத காரியம். நான்தான் கருங்காட்டு மன்னனுக்குத் தக்க தண்டனை கொடுத்து விட்டேனே!" என்று பதிலளித்தது புலிக்காட்டு ராஜகுமாரி, கலகல வென்று நகைத்துக் கொண்டே.

"நீ சொல்வதெல்லாம் சுத்தப் பொய். நான் அதை நம்பத் தயாராயில்லை. முதலில் என் குட்டியைக் கொடு!"

"கொடுக்க மாட்டேன். என்ன செய்து விடுவாய்?" என்று ஏளனம் செய்தது புலிக்காட்டு ராஜகுமாரி.

"பார்க்கலாமா?" என்று கூறிவிட்டுக் கருங்காட்டு ராணி பாய்ந்தோடித் தன்னுடைய குட்டியைத் தூக்கிக் கொள்ளப் பிரயத்தனப் பட்டது.

புலிக்காட்டு ராஜகுமாரி "என்னிடம் உன் எண்ணம் பலிக்காது. உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று கூறித் தன் மந்திரக்கோலினால் கருங்காட்டுச் சிங்க ராணியைச் சிலையாக்கி விட்டது.

சிங்கராணியின் சிலை அதன் குட்டிக்கே விளையாட்டுப் பொம்மையாக அமைந்து விட்டது. தினம் சிங்கக் குட்டி அதன் மேல் ஏறிக் குதித்து விளையாடும். இந்தக் காட்சி

மந்திரவாதி புலிக்காட்டு ராஜகுமாரிக்கு வேடிக்கையாக இருக்கும்.

நாட்கள் பல சென்றன. புலிக்காட்டு ராஜகுமாரியின் குடிசையிலே வாழ்ந்த சிங்கக் குட்டி பெரிதாக வளர்ந்து கொண்டு வந்தது. சுற்றிலும் நடக்கும் காரியங்களையெல்லாம் அது எளிதில் தெரிந்து கொள்ளும் அறிவைப் பெற்றது.

அன்று புலிக்காட்டு ராஜகுமாரி காட்டில் உணவு தேடச் சென்றிருந்தது. சிங்கக்குட்டி மட்டும் குடிசை வாசலில் விளையாடிக் கொண்டிருந்தது. புலிக்காட்டு ராஜகுமாரி வளர்த்த ராட்சதப் பறவையும் அதனுடன் விளையாடத் தரையில் வந்து உட்கார்ந்தது. அவ்வளவுதான்; சிங்கக் குட்டி பயந்து போய்க் குடிசையினுள் பாய்ந்தது. ராட்சதப் பறவையும் அதைப் பின் தொடர்ந்தது. பயத்தினால் மூலையில் கிடந்த ஒரு கோலை யெடுத்து ராட்சதப் பறவை மீது வீசியெறியக் குறிபார்த்தது. அதற்குள் ராட்சதப் பறவை பறந்து குடிசைக்கு வெளியிலிருந்த ஒரு பெரிய மரத்தில் போய் உட்கார்ந்து கொண்டது.

சிங்கக் குட்டி கையில் கோலுடன் குடிசைக்கு வெளியே வந்தது. ராட்சதப் பறவை காணாததால் அது தைரியமாகச் சிங்கச் சிலையின் மீது வந்து அமர்ந்து கொண்டது. கோலினால் சிங்கச் சிலையை 'ஹை! ஹை!' என்று அடித்துச் சவாரி செய்தது. கோல் அடிபட்டதும் சிங்கச்சிலை நிஜமாகவே நகர ஆரம்பித்து விட்டது. சிங்கக் குட்டிக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"நீ யார்? எங்கிருந்து வந்தாய்?" என்று திகிலுடன் வினவியது சிங்கக்குட்டி.

"நான் உன்னுடைய தாயார். நீ என்னுடைய அருமைக் குமாரன்" என்று மகிழ்ச்சியுடன் கூறியது சிங்கராணி. தன்னுடைய குட்டியினாலேயே தன் உயிர் காப்பாற்றப் பட்டதைக் கண்டு கருங்காட்டு ராணிக்கு அளவில்லா மகிழ்ச்சி!

"அப்படியானால் இந்தக் குடிசையிலுள்ள பெண் சிங்கம் என்னுடைய தாய் இல்லையா?" என்று வியப்புடன் வினவியது சிங்கக் குட்டி.

"அது உன்னுடைய தாய் இல்லை. உன்னைக் கள்ளத் தனமாக இந்தப் பெண் சிங்கம் அபகரித்து வந்து விட்டது!" என்று கூறியது சிங்க ராணி.

இந்தச் சமயத்தில் இடிமுழக்கக் குரல் கேட்டது. சிங்க ராணி பயந்து கொண்டே,



"ஐயோ! புலிக்காட்டு ராஜகுமாரி வந்து விட்டதே! நாம் எப்படி அதனிடமிருந்து தப்புவது? பேச்சு சுவாரஸ்யத்தில் நாம் இங்கிருந்து ஓடாமலிருந்து விட்டோமே?" என்று புலம்பியது. தன் குட்டியை நன்றாக அணைத்துக் கொண்டது.

"அட! நீ எப்படி உயிர் பெற்றாய்? எனக்குத் தெரியாமல் இந்தப் பெரும் தவறைச் செய்தது யார்?" என்று காடே கிடுகிடுக்கும்படி கர்ஜனை புரிந்தது புலிக்காட்டு ராஜகுமாரி.

"போதும், உன் மிரட்டல். என்னிடம் பலிக்காது. நான் தான் என் தாய்க்கு உயிர் கொடுத்தேன்! என்ன செய்து விடுவாய்?" என்று பதிலளித்தது சிங்கக்குட்டி சிறிதும் பயப்படாமல்.

"உன் தாய்தான் இவள் என்பதை எப்படித் தெரிந்து கொண்டாய்? இவள் பொய் சொல்லி உன்னை ஏமாற்றப் பார்க்கிறாள்! நீயும் அவள் வார்த்தையில் மயங்கி விட்டாயே!" என்றது புலிக்காட்டு ராஜகுமாரி.

"அட சாகசக்காரி! என் குட்டியை என்னுடையதல்ல என்று சொல்ல உனக்கு எப்படி மனம் வந்தது? மந்திர வித்தைகளால் மயக்குவதுபோலப் பேச்சினால் என் குட்டியை நிலைதடுமாறச் செய்யப் பார்க்கிறாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டது சிங்க ராணி.

"பயப்பட வேண்டாம், அம்மா! அவள் பசப்பு வார்த்தைகளில் நான் மயங்கிப் போய் அவள் வலையில் விழுந்து விட மாட்டேன்!" என்று கூறியது சிங்கக் குட்டி.

புலிக்காட்டு ராஜகுமாரிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை.

"ஓஹோ! பயப்பட மாட்டாயா?...... அடடே! என் மந்திரக்கோலை எப்படி எடுத்தாய்? உன்னை மரத்தில் கட்டி வைத்துத் தோலை உரித்து விடுகிறேன்!" என்று கர்ஜித்துக் கொண்டே சிங்கக் குட்டியின் மேல் பாய்ந்தது புலிக் காட்டு ராஜகுமாரி.

குட்டிக்குத் தீங்கு ஏற்படாமலிருப்பதற்காகச் சிங்கராணி தன் குட்டியை மறைத்துக் கொண்டு நின்றது.

புலிக்காட்டு ராஜகுமாரி முதலில் குறுக்கே நின்ற சிங்க ராணியின் மீது ஆக்ரோஷத்துடன் விழுந்து தாக்கியது. அவை இரண்டும் போட்ட சண்டையில் காடே கிடுகிடுத்தது. அவை சண்டை யிட்ட பொழுது எழுந்த சத்தத்தைக் கேட்டுப் பறவை இனங்கள் கூட்டினுள் கதிகலங்கிப் போய்ப் பதுங்கிக் கொண்டன. (தொடரும்)


பயர்ஸ்டோன் ஸ்தாபனம் ஒன்றிலேயே கையாளப்படும்
சூப்பர் கம் - டிப்பிங்
முறையால் டயர்கள் எவ்வித அதிர்ச்சியையும் தாங்கக்கூடியதாக கார் பொடி 60 சதவிகிதம் அதிக வலுவுள்ளதாவதுடன் சூட்டினால் ஏற்படும் சிறுப்பு நூல் பிரிதல் முதலியவையும் தவிர்க்கப் படுகிறது.
Firestone
பயர்ஸ்டோன்
இன்று சிறந்தது - நாளை இன்னும் சிறந்தது

இரண்டு உதாரணங்கள்

எங்களூர்ப் பஞ்சாயத்து-உசிலம்பட்டி மேஜர் பஞ்சாயத்து. உசிலம்பட்டி பஞ்சாயத்து சென்னை ராஜ்யத்திலேயே பல விஷயங்களில் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கடந்த இருபது வருட காலத்தில் ஒரு தடவை கூடத் தேர்தல் நடந்து, அதன் முழு ஆயுள்காலம் ஜீவித்திருந்ததில்லை எங்களூர்ப் பஞ்சாயத்து!

சர்க்காரால் கலைக்கப்பட்டு விசேஷ அதிகாரி போடப்பட்டுப் பாக்கியுள்ள காலத்தைக் கழிக்கும்!

இப்படி ஒரு பஞ்சாயத்து தமிழ் நாட்டில் வேறு எங்கேனும் உண்டா!

முதலில் தேர்தல் சண்டையில் ஊர் இரண்டு படும். பணம் தண்ணீராகச் சிந்தப்படும். போட்டியிட்டவர்களில் ஒருவர்தானே ஜெயிப்பார்! அதன் பின் நீதி மன்றங்களில் வழக்கு! சர்க்காரிடம் காவடி! இதற்கிடையில் நடைபெறும் பஞ்சாயத்துக் கூட்டங்களில் தகராறு; சண்டை! அங்கத்தினர்கள் கட்சி சேர்த்தல்—அதன் பயனாகப் பஞ்சாயத்து வேலைகள் நன்கு நடைபெறாமல் பணம் மட்டும் பாழாகும் விந்தை! பிறகு சர்க்கார் தலையிட்டுப் பஞ்சாயத்துச் சபையைக் கலைத்து விசேஷ அதிகாரியைப் போடுவார்கள்!

தேர்தல் விநோதங்களில் எங்களூரை மிஞ்சி வேறு எந்த ஊரும் இருந்திருக்க முடியாது! ஒரு தடவை நடைபெற்ற தலைவர் தேர்தலில், மொத்தம் பன்னிரண்டு அங்கத்தினர்களில் ஏழு மெம்பர் வைத்திருந்தவர் தோல்வியடைந்து, ஐந்து மெம்பர் வைத்திருந்தவர் ஜெயித்துத் தலைவரான அதிசயத்தை எங்களூர் கண்டது! (அங்கத்தினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் அது.)

எங்களூர்ப் பஞ்சாயத்து எத்தனை பேர்களைத் தேர்தலில் பணத்தைச் செலவழிக்க வைத்து மூலையில் உட்கார வைத்து விட்டது என்பதை எண்ணவே முடியாது!

எங்களூர்ப் பஞ்சாயத்தில் அப்போதைக்கப்போது ஏற்படும் தகராறுகள் காரணமாக, நமது ராஜ்யத்தில் பஞ்சாயத்துச் சட்டத்திலே பல திருத்தங்கள், புதிய ஷரத்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்றால், எங்களூர்ப் பஞ்சாயத்தின் பெருமையை அளவிட்டுக் கூற முடியுமா?

ஒவ்வொரு காலத்திலும் பதவிக்கு வருபவர்கள், அவரவர்களுக்கு வேண்டியவர்களிடத்தில் வரி வசூலிக்க மாட்டார்கள்! இதனால் சிலரிடம் பத்து வருடத்து வரி பாக்கி நிற்கிறது.

இப்படியாகச் சண்டையிலேயே இந்தப் பஞ்சாயத்து கிடந்துழல வேண்டியதுதானா! பகவானே! இந்த ஊருக்கு விமோசனமே கிடையாதா!

புதிய முறைப்படி பஞ்சாயத்துத் தேர்தல் வந்தது. முன்பெல்லாம் குறைந்த வோட்டர்களை வைத்துக் கொண்டு நடக்கும் தேர்தல். பணத்தால் வோட்டுக்களை விலைக்கு வாங்க முடிந்தது! இப்போது வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் நடக்கப்போகும் தேர்தல்; அதிலும் தலைவராக வரவேண்டியவர் ஊர் முழுதும் தேர்தலுக்கு நிற்க வேண்டும். ஏராளமான வோட்டர்கள். பணத்தால் வோட்டுகளை வாங்க இயலாது. யாராவது நல்லவர் ஒருவர்தான் மக்களிடம் வோட்டுகளை வாங்கிவர முடியும் என்றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டனர்.

சென்ற ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தலைவர் ஸ்தானத்துக்கு ஏழெட்டுப் பேர் போட்டியிட்டனர். கடைசியாக இருவர் மிஞ்சி நின்றனர். போட்டி என்றால் சாதாரணப் போட்டியில்லை. ஊரே கிடுகிடுத்தது. காலித்தனம் கட்டவிழ்த்து ஓடியது! கார்கள் கணக்கின்றி நடமாடின! பெட்ரோல் தண்ணீராகச் சிந்தப்பட்டது! தேர்தலில் வேலை செய்யும் கூட்டம் காலை டிபன் ஒரு முகாமில்; மத்தியானச் சாப்பாடு ஒரு முகாமில்! இப்படியாக இங்கும் அங்குமாக உருண்டனர்!

தேர்தல் நடைபெற்றது. இறந்தவர்கள், ஊரில் இல்லாதவர்கள் எல்லாரும் வந்து வோட்டளித்த விசித்திரத்தைக் கண்டோம்!

முடிவில் ஊருக்கு நல்லதைச் செய்வேன் என்று உறுதி கூறியவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பொது வாழ்வில் இதுவரை ஈடுபடாதவர். எந்த அரசியல் கட்சியிலும் சேராதவர். ஆகவே அவர் காலத்திலாவது எங்களூர்ப் பஞ்சாயத்து நிர்வாகம் சரிவர நடைபெறும் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் நடந்தது என்ன! கடந்த பதினைந்து மாதங்களுக்குள் நிர்வாக அதிகாரிகள் மூன்று பேர் மாறி விட்டனர். ஊரில் எந்தவித மாறுதலோ, அபிவிருத்தியோ தென்படவில்லை!

எங்களூர்ப் பஞ்சாயத்தின் வருட வருமானம் சுமார் அறுபதாயிரம் ரூபாய். இந்த ரூபாய் எப்படியோ வசூலாகி, எப்படியோ செலவாகித் தான் வருகிறது! ஆனால் ஊரில் மட்டும் அபிவிருத்தி ஏற்படவில்லை!

ரஸ்தாக்கள் சீராக்கப்படவில்லை. கக்கூஸ் வசதிகள் அறவே கிடையாதென்று கூறலாம். ஒரு பூங்கா, ஒரு வாசக சாலை எதுவுமே கிடையாது. ஒரு ரேடியோ உண்டு. அதையும் பஞ்சாயத்துச் சபைக் காரியாலயத்தில் வைத்து, அங்குள்ள சிப்பந்திகள் கேட்டு ரஸித்துக் கொள்கின்றனர். பஞ்சாயத்துக் காரியாலயத்திலேயே வாசகசாலை இருக்கிறதாம். அதில் சுமார் மூன்னூறுக்கு மேற்பட்ட புத்தகங்கள் இருப்பதாகப் பட்டியல் கூறுகிறது. ஆனால் புத்தகங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பள்ளிக்கூடம் வைத்துவிடவில்லை எங்கள் பஞ்சாயத்து! ஆஸ்பத்திரி கட்டிவிடவில்லை எங்கள் பஞ்சாயத்து!

வருமானத்தை உண்டாக்கிக் கொள்ள ஒரு தினசரிச் சந்தை கூட இன்னும் ஏற்படுத்தவில்லை.

தண்ணீர் வசதிக்கு ஆங்காங்கு 'போரிங்' குழாய்கள் இருப்பதாக ஓடிந்து செயலற்றுக் கிடக்கும் சில குழாய்கள் அறிவிக்கின்றன!

சுமார் மூவாயிரம் ரூபாய் செலவில் ஒரு 'ஸெப்டிக் டாங்க்' கக்கூஸ் கட்டினார்கள். அது திறக்கப் படாமலே ஒரு வருடமாகக் கிடக்கிறது. அதற்கு முன் அந்த இடத்தில் இருந்த சாதாரண கக்கூஸ் பெண்களுக்கு உபயோகமாக இருந்தது. அதையும் அடைத்து விட்டார்கள்!

எங்களூர் இன்னும் மின்சார வெளிச்சத்தைக் கண்டதில்லை. சில இடங்களில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு உண்டு. பல இடங்களில் 'கல் லாந்தர்' உண்டு. ஆனால் அவைகளில் இரவு பூராவும் சில விளக்குகள் மட்டும் மனம் வைத்து எரியும்!

இப்படிப்பட்ட எங்களூர்ப் பஞ்சாயத்துக்கு மேலும் அதிக அதிகாரத்தைக் கொடுத்து விட்டு என்னத்தைச் செய்வது!

அப்படியும் சொல்ல முடியவில்லை! சமீபத்தில் தென்காசிக்குச் செல்லும்படி நேர்ந்தது. அந்த ஊர்ப் பஞ்சாயத்து அற்புதமாக வேலை செய்கிறது

என்பது அந்த ஊரைப் பார்த்தவுடனேயே தெரிந்தது. நகரெங்கும் சுத்தமாக இருந்தது. முன்பு சென்றிருந்த போது பார்த்த ஓர் பாழடைந்த இடம், இப்போது பளிச்சென்று அழகுற, வ. உ. சி. பூங்கா என்ற புகழ்மிக்க பெயருடன் திகழ்கிறது. அடுத்து ஓர் அழகிய கட்டிடம் நிமிர்ந்து நிற்கிறது. வ. உ. சி. வாசகசாலை அது. பஞ்சாயத்துச் சபையார் ஏற்படுத்தியதுதான். ஊரெங்கும் 'ஸெப்டிக் டாங்க்' கக்கூஸ் நாற்பது கட்டியிருக்கிறார்கள்.

அந்த ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவரைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் பெயர் ஸ்ரீ ஜே. என். சங்கரநாராயணன். விவசாயத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவரும், அந்தப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியும் தினந்தோறும் காலையில் ஊரை ஒரு சுற்றுச் சுற்றி வருகின்றனர். நகருக்கு என்ன தேவை? மக்களுக்கு என்ன வேண்டும் என்று கண்டறிகின்றனர்.

தென்காசி பஞ்சாயத்தில் தலைவர் தேர்தலில் ஆறு பேர் போட்டியிட்டனராம். நகரப் பிரமுகர்கள் கூடித் தாங்கள் கூறும் ஒருவர்தான் தலைவராகவும், தாங்கள் கூறுபவர்களே அங்கத்தினர்களாகவும் வரவேண்டுமென்று கூறினார்களாம். அதைப் போட்டியிட்ட அபேட்சகர் அனைவரும் ஒப்புக் கொண்டனராம். அதன்படி தலைவரும் அங்கத்தினர்களும் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

'செக் பெஹர்மெண்ட்' ஜில்லா பஞ்சாயத்து அதிகாரியிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதால் அநேக வேலைகள் தடைப்படுவதுடன் தாமதமடைவதாகவும் சொல்லி வருத்தப்பட்டார், தென்காசி பஞ்சாயத்துத் தலைவர்.

ஒரு பெரிய தண்ணீர்த் திட்டம் போட்டுப் பல மாதங்களாகிறது. சர்க்கார் உதவி செய்யக் காலதாமதம் செய்கிறார்களே என்று அங்கலாய்த்தார். மூன்று லட்ச ரூபாய்த் திட்டமாம் அது!

தென்காசி பஸ் ஸ்டாண்ட் தரையெல்லாம் ஸிமிண்ட் போட்டு அழகாக இருக்கிறது.

ஒரு கணம் உசிலம்பட்டி பஸ் ஸ்டாண்டை நினைத்துப் பார்த்தேன்.

கோழிக் கூடுபோல், பெரிய நீண்ட பஸ்கள் நுழையவும் முடியாமல், வெளியேறவும் முடியாமல் படும் அவஸ்தை; நுழைவாசலை ஒட்டிப் பெண் குழந்தைகள் பள்ளிக்கூடம். வெளி வாசலை ஒட்டி ஆண் குழந்தைகள் பள்ளிக்கூடம். குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பிவிட்டு நாளெல்லாம், தங்கள் குழந்தைகள் பஸ்ஸில் அடிபடாமல் வந்து சேர வேண்டுமே என்று தவமிருக்கும் எங்களூர் பெற்றோர்கள் யாவரும் என்னுடைய மனக்கண் முன் வந்தனர்.

உசிலம்பட்டி
10—7—54 கே. வி. முருகன்

கள்ளர் பயம் இல்லை!

பட்டுக்கோட்டை தாலூக்காவில் இருக்கும் பெருமகளூர்ப் பஞ்சாயத்துச் சபை நிர்வாகம் மற்ற பஞ்சாயத்துகளுக்கு ஒரு வழி காட்டியாக உள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. பெருமகளூர் கிராமமும் மற்றும் கல்யாண ராமநாதபுரம், பட்டங்காடு, குப்பத்தேவன், கலக்கமங்கலம் ஆகிய ரெவின்யூ கிராமங்களும் இந்தப் பஞ்சாயத்து நிர்வாக எல்லைக்குள் இருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவரும் மற்றும் ஆறு அங்கத்தினர்களும் இந்தச் சபையில் உள்ளனர். இவர்கள் அனைவரும் சென்ற தேர்தலில் போட்டியில்லாமல் மக்களால் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இந்தத் தாலுக்காவிலேயே போட்டியில்லாமல் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல் இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தப் புது நிர்வாகத்தில் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. பஞ்சாயத்து சபையினரால் கல்யாண ராமநாதபுரம், பட்டங்காடு, கலக்கமங்கலம் ஆகிய இடங்களில் இக்கிராமங்களின் நீண்ட நாள் தேவையான குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. நடைபாதைகளும் குளங்களும் சரிவரப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமான இடங்களில் கக்கூஸ்கள் கட்டப் படுகின்றன. தெருக்கள் தோறும் விளக்குகள் ஏற்றுவதற்கு இரண்டு சிப்பந்திகளும், தெருக் கூட்டுவதற்கு இரண்டு சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தப் பஞ்சாயத்திலுள்ள ஒரு விசேஷம் என்னவென்றால் பஞ்சாயத்து எல்லை தெற்கு வடக்காக மூன்றரை மைல்களும் கிழக்கு மேற்காக நான்கு மைல்களும் விஸ்தரித்திருப்பதால் தொலைவிலுள்ள தெருக்களில் அந்தந்த வட்டாரத்துவாசிகள் சிப்பந்திகளை எதிர்பாராமல் பஞ்சாயத்துச் சபையிலிருந்து வாரந்தோறும் தேவையான மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொண்டு அவரவர்கள் தெரு விளக்குகளை அவரவர்களே ஏற்றிக் கொள்ளுகிறார்கள். எங்கள் பஞ்சாயத்துத் தலைவர் நல்ல கண்ணியமுள்ள விவசாய குடும்பத்தில் பிறந்தவர். பொது நலத் தொண்டில் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டவர். நிர்வாகத் திறமையுள்ளவர்.

பஞ்சாயத்துச் சபை கம்போஸ்டு உரம் தயாரித்து வருகிறது. பொது அறிவைப் பேணி வளர்க்க எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து வாசகசாலையை இந்த வருஷம் சீர்திருத்தியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் உள்ள எழுத்தாளர்களின் முந்நூறு புத்தகங்கள் இந்த வாசக சாலையில் உள்ளன.

பஞ்சாயத்துக் காரியாலயத்தில் புகார்ப்புத்தகம் ஒன்று வைக்கப் பட்டிருக்கிறது. பொது மக்கள் தங்கள் குறைகளை அதில் எழுதலாம். இந்தப் புத்தகத்தைப் பிரதி தினமும் பஞ்சாயத்துத் தலைவர் பார்வையிட்டுக் குறைகள் எவையேனும் இருந்தால் அவற்றை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும் தலைவர் அவர்கள் பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். குடியரசு தினம், சுதந்திர தினம் ஆகிய விசேஷ நாட்கள் பஞ்சாயத்துக் காரியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப் படுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுதற்குரியன. சமீபத்தில் மரம் நடு விழாவும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஊர்ப் பாதுகாப்பு கமிட்டியும் பஞ்சாயத்துத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெறுவதால் பஞ்சாயத்து எல்லைக்குள் கள்வர் பயம் இல்லை.

வேனிற் காலங்களில், முசுக் கட்டைப் பூச்சிகள் உற்பத்தியாகிச் சாலைகளிலும், குளங்களிலும் விழுந்து மக்களுக்கும், கால் நடைகளுக்கும் தாங்கொண்ணாத் தொல்லை உண்டாக்குகின்றன. இப் பூச்சிகள் உற்பத்திக்கு மூலகாரணம் பூவரச மரங்கள்தான். இவற்றைத் தடுக்கப் பூச்சி மருந்துகளை உபயோகித்து உடனடியாக நிவாரணம்

கிடைக்காவிட்டால், ஜனங்கள் குடியிருப்பிலிருக்கும் பூவரச மரங்களையாவது உடனடியாக வெட்டி அப்புறப்படுத்த, தலைவருக்கு அதிகாரம் வேண்டும். மூகக்கட்டைப் பூச்சிகள் விழுந்து இறந்த தொட்டித் தண்ணீரைக் குடித்ததால் சென்ற வருஷம் ஏற்பட்ட கால்நடை மரணம் அதிகம். அடுத்தபடியாக ரூ. 250/-க்கு மேற்படாத பராமரிப்பு வேலைகளை முன் அனுமதியின்றிச் செய்யத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும், கால் நடைப் பவுண்டுகளை பஞ்சாயத்துச் சபைகள் வசம் சர்க்கார் ஒப்புவிக்க வேண்டும். இதனால் பஞ்சாயத்துக்கு வருமானம் பெருக ஏதுவாகும்.

எங்கள் பஞ்சாயத்திலுள்ள முக்கியமான குறை எங்களுக்குச் சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாததுதான். புகை வண்டி நிலையம் இங்கிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ளது. இந்த எட்டு மைலும் மணற் பாங்கான ரஸ்தாவாக இருப்பதால் வண்டிப் போக்கு வரத்தோ, சைக்கிள் பிரயாணமோ அவ்வளவு சுலபமல்ல. பஸ் நிலையத்துக்கோ வெனில், பெருமகளூருக்குத் தெற்கே மூன்று மைல் தொலைவில் உள்ள திருவப்பாடிக்குச் செல்ல வேண்டும். அதிர்ஷ்டவசமாகப் பெருமகளூரையும் திருவப்பாடியையும் இணைக்கும் ரஸ்தாவைத் தற்போது சர்க்கார் புதுப்பித்து வருகிறார்கள். இதற்குப் பஞ்சாயத்துத் தலைவர் அவர்களது பெரு முயற்சி காரணமாகும். இதற்காகத் திட்டமிட்ட தொகை ரூபாய் பதினாயிரத்தில் பொதுமக்கள் ரூபாய் ஐயாயிரமும் பஞ்சாயத்து சபை ரூபாய் இரண்டாயிரமும் பாக்கி ரூபாய் ஏழாயிரம் அரசாங்கமும் ஏற்றுக் கொண்டு வேலை நடந்து வருகிறது.

பெருமகளூர்
12-7-54

எஸ். மோகனசுந்தரம்



தெய்வம் தந்தது!

கி. ரங்கராஜன்

அன்று பிற்பகல் மணி நாலு இருக்கும். ராமபத்ரன் அப்போதுதான் வெளியே போவதற்காகச் சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பினான். வாசற்படியை விட்டுக் கீழே இறங்கி நாலு அடிகள் நடந்திருப்பான். எதிரே தந்திச் சேவகன், அந்தத் தெருவுக்குள் சைக்கிளில் வேகமாக வருவதைக் கவனித்துச் சற்று நின்றவனாய் "தந்தி யாருக்கு அப்பா?" என்று கேட்டான்.

"பத்தாம் நம்பர் வீடு எது, ஸார்?" என்று கேட்டான் தந்திச் சேவகன்.

"ஏன், நான் பத்தாம் நம்பர் வீடுதான். யாருக்குத் தந்தி?" என்று அவனிடம் கேட்டான் ராமபத்ரன் குளறலுடன்.

"ராமபத்ரன் என்பவர் யார் ஸார், இங்கே?" என்றபடி கீழே இறங்கினான் தந்திச் சேவகன்.

"ஏன், நானேதான்!" என்று சொல்லிக்கொண்டே அவன் சமீபம் நெருங்கிச் சென்றான் ராமபத்ரன்.

தந்திச் சேவகன் கொடுத்த தந்தியை விரைந்து வாசித்தான்.

"லக்ஷ்மிக்கு அபாயம்! உடனே புறப்படவும்" என்று அதில் எழுதியிருந்தது.

ராமபத்ரன் பொறி கலங்கிப் போனான். சென்னையிலிருந்து அவன் மாமனார் அனுப்பியிருந்தார் அந்தத் தந்தியை. அவன் மனைவி லக்ஷ்மி பிரசவத்துக்காகப் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். அது மூன்றாம் பிரசவம். போன வாரம் அவளிடமிருந்து வந்த கடிதத்தில், தான் சௌக்கியமாக இருப்பதாகவும், அவன் உடம்பைச் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியாகவும், இன்னும் என்ன வெல்லாமோ எழுதியிருந்தாள். அப்படி இருக்க இப்படித் திடீரென்று ஒரு தந்தி வருவானேன்? ராமபத்ரனுக்கு நம்பிக்கைப் படவில்லை. திரும்பத் திரும்பத் தந்தியைப் படித்தான். அதிலேயிருந்த அந்த நாலு வார்த்தைகள் அவனுக்கு அர்த்தமே ஆகவில்லை போல் இருந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் மயங்கிப் போய்த் திண்ணையில் உட்கார்ந்து விட்டான். ஐந்து நிமிஷம் கழித்து மனம் ஒரு நிதானத்துக்கு வந்தது. இரவு ஏழரைக்கு ரயில். இடையில் இன்னும் மூன்று மணி நேரம்தான் அவகாசம் இருக்கிறது. அதற்குள் பணத்துக்கு ஏதாவது ஏற்பாடு பண்ண வேண்டும். ஆபீஸுக்கு இரண்டு நாள் லீவ் போட வேண்டும்.

லீவு கிடைத்து விடும். ஆனால் பணம்? அவனுடைய அப்போதைய பொருளாதாரம் அணு காலத்தில்தான் இருந்தது. போக வர ரயில் செலவுக்குப் பதினொரு ரூபாயாவது வேண்டும். எதற்கும் கையில் முப்பது ரூபாய் வேண்டும். ஆனால் அந்த முப்பது ரூபாய்க்கு அவன் எங்கே போவான்?

கடன்தான் வாங்க வேண்டும். யாரைக் கேட்கலாம் என்று யோசித்தான்.

கல்யாணராம ஐயரைத்தான் கேட்க வேண்டும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவர்தான் கொடுப்பார் என்று நினைத்தான். இரண்டு நாட்களுக்கு முன் அவருக்கு ஒரு தந்தி வந்தது. பம்பாயில் நடந்த ஏதோ ஒரு லாட்டரியில், பெரிய தொகையொன்று அவருக்கு முதல் பரிசாகக் கிடைத்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, பரிசுத் தொகையை நேரில் வந்து பெற்றுக் கொள்ளும்படியும் அதில் கண்டிருந்தது. தந்தி வந்த அன்றைக்கே, அவர் பரிசு பெற்ற விவரம் அந்த ஊர் முழுவதும் பரவியிருந்தது.

அவருக்குத் தெரிந்த நண்பர்களில் பலர் அவரைப் பாராட்டிப் போயிருக்கிறார்கள்.

அப்படிப் பாராட்டியவர்களில் ராமபத்ரனும் ஒருவன். அவன் அவர் வீட்டுக்கு ஒரு வீடு தள்ளி அடுத்த வீட்டில் குடியிருந்தான்.

கல்யாணராமய்யர் சாதாரணமாக நல்ல பணக்காரர். பணக்காரர் என்றால் பரம்பரைப் பணக்காரர் அல்ல. சொந்த முயற்சியால் ஏதோ ஒரு தொழில் நடத்திப் பணக்காரர் ஆனவர். பணம் படைத்தவர்களைத்தானே மேலும் மேலும் பணம் தேடிக் கொண்டு போகும்? லட்சத்தோடு இன்னும் ஒரு பெருந் தொகை சேருகிறது. கேட்பானேன்! மனிதர் துள்ளித்தான் குதித்தார்.

இந்தச் சமயத்தில் அவரைப் போய்க் கேட்டால் நிச்சயமாக உதவுவார் என்று நினைத்து அவர் வீட்டுக்குப் போனான், ராமபத்ரன்.

அவன் போன சமயம் ஐயர் வீட்டில் இல்லை. குடும்பத்துடன் கோயிலுக்குப் போயிருப்பதாயும், அங்கே அவர் அம்பாளுக்கு விசேஷமாக அபிஷேகம் செய்கிறார் என்றும் வேலையாட்கள் சொன்னார்கள்.

"கோவிலுக்குத்தானே போயிருக்கிறார்? நானும் அங்கேயே போகிறேனே. சுவாமி தரிசனம் செய்ததாகவும் இருக்கட்டும்" என்று நினைத்துக் கோவிலுக்கு ஓடினான்.

"தாயே, ஜகதம்பிகே! மங்களாம்பா! நீதான் என் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும். உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். நீதான் என் குழந்தைகளுக்குத் தாயைக் கொடுக்க வேண்டும். என்னை மோசம் செய்து விடாதே, தாயே" என்று அம்பாளைப் பிரார்த்தித்துக் கொண்டே ஓடினான். அம்பாள் ஸன்னிதியில் அபிஷேகம் பிரமாதப்பட்டுக் கொண்டிருந்தது. அன்று ஏகாம்பரக் குருக்களுக்கு யோக ஜாதகமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டணாவுக்கும், நாலணாவுக்கும் மன்றாடிக் கொண்டிருப்பவருக்கு முழுசாக ஐந்து ரூபாய் கிடைப்பது என்றால் அது அதிர்ஷ்டமல்லவா?

அபிஷேகம் எல்லாம் முடிந்து, கல்யாணராம ஐயர் வீட்டுக்கு வருவதற்கு, குறைந்த பட்சம் இன்னும் இரண்டு மணியாவது ஆகும் என்பது தெரிந்தது. அப்படியானால் அடுத்த ரயில் போட் மெயிலுக்குத்தான் போக வேண்டும் என்று நினைத்தவனாய், ராமபத்ரன் அங்கேயே நின்றான். அவன் கண்கள் அம்பிகைக்கு அபிஷேகம் ஆவதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. வீட்டிலோ, ஆஸ்பத்திரியிலோ அவதிப்படும் அவன் அருமை மனைவி லக்ஷ்மியைத்தான் மானஸீகமாகச் சுற்றிக் கொண்டிருந்தன. எப்பொழுது அபிஷேகம் முடியும், எப்பொழுது கல்யாணராம ஐயர் புறப்படுவார் என்று நினைத்து நெருப்பின் மேல் நிற்பது போலத் துடித்துக் கொண்டிருந்தான்.

பத்து மணிக்கு அபிஷேகம் முடிந்தது. கர்ப்பக்கிருகத்தைவிட்டு ஐயரும் அவர் மனைவி மக்களும் வெளியே வந்தார்கள். ராமபத்ரன் ஒதுங்கி நின்றபடி அவருக்கு ஒரு கும்பிடு போட்டான். அதை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. வாசலில் நின்ற காரியஸ்தரிடம், ஐயர் அமர்த்தலாக "எங்கே ஐயா கவனிக்கிறீர், நீர் இங்கேயே இருந்து பிரஸாதங்களை வீட்டுக்குக் கொண்டு வாரும்" என்று கட்டளை இட்டு விட்டுப் பள பள வென்ற தம் புத்தம் புதிய காரில் ஏறிக் கொண்டு போய் விட்டார்.

ராமபத்ரன் கூடவே ஓடினான். அவர் வீட்டு வாசலை மிதிப்பதற்கும், கல்யாணராம ஐயர் ஸில்க் ஷர்ட்டும், மடிப்புக் கலையாத அங்க வஸ்திரமுமாக உள்ளேயிருந்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. ராமபத்ரன் அவருக்குப் பணிவாக ஒரு கும்பிடு போட்டுக் கொண்டே அவரை அணுகினான். ஐயர் சற்று நகர்ந்து கொண்டு என்ன வேண்டும் என்று கேட்கும் பாவனையில், ராமபத்ரனை நிமிர்ந்து வெறித்துப் பார்த்தார்.

ராமபத்ரன் சுருக்கமாகத் தான் வந்த காரியத்தைச் சொன்னான். "இப்ப எங்கே ஐயா அதற்கெல்லாம் அவகாசம்! மற்றொரு சமயம் ஆகட்டும் போம். நான் இப்பொழுது வெளியூர் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வாசலில் தயாராக இருந்த காரில் ஏறிக் கொண்டு போய் விட்டார்.

ராமபத்ரனுக்கு அப்பொழுதுதான் தான் ஒரு ஏழை சர்க்கார் சிப்பந்தி என்ற நினைவு வந்தது. அவன் நெஞ்சிலே என்னமோ திடு திடு வென்று குதித்தாற் போல இருந்தது. முதுகில் யாரோ கத்தியால் குத்தியமாதிரி இருந்தது. முதுகைத் தடவி விட்டுக் கொண்டான். முதுகில் ஒன்றும் இல்லை. நெஞ்சில் தான் ஒரு முள் ஆழமாகப் பதிந்து விட்டதை அவன் உணர்ந்தான்.

"மற்றொரு சமயம் ஆகட்டும் என்று சொன்னான்? என்ன திமிர், என்ன திமிர்? என் மனைவி இன்னொரு முறை உயிருக்குப் போராடும் போது உதவுகிறேன் என்று தானே அதற்குப் பொருள்? அவனைச் சொல்லி என்ன? நான் ஏன் அவனைப் போய்ப் பணம் கேட்டேன்?" என்றெல்லாம் நினைத்தான், வருந்தினான், ஏங்கினான்.

அவன் கண்ணும் மனமும் கலங்கின. ஒன்றும் தோன்றாமல் வீட்டுக்குப் போய், படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டு விட்டான். கண்ணை மூடிக் கொண்டு தூங்க முயன்றான். தூக்கம் வரவில்லை. இரவில் எத்தனை நேரம் தவித்தானோ விடியற்காலம் நாலு மணிக்கு அவனை அறியாமல் அவன் தூங்கி விட்டான்.

பொழுது விடிந்து காலை ஆறு மணி இருக்கும். கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. இயந்திரம் போல் நடந்து வந்து கதவைத் திறந்தான்.

என்ன ஆச்சரியம்! எதிரிலே கல்யாணராம ஐயர் நின்று கொண்டிருந்தார்.

"நீர் நேற்று ஊருக்குப் போகவில்லையா?" என்று கேட்டார் ஐயர்.

"ஆமாம், போகவில்லை. போக முடியவில்லை!" என்றான் ராமபத்ரன்.

தன வணிகத் தொண்டர்

மலாய் நாட்டைச் சேர்ந்த சிரம்பானில் இரண்டாவது முறையாக நாட்டுக் கோட்டை செட்டியார்கள் வர்த்தக சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஸ்ரீ அ. பழ. பழனியப்ப செட்டியார் இந்தியர் சமூகத்துக்குச் சிறந்த தொண்டு புரிந்து புகழ் பெற்றவர். அவர் மலேயா இந்தியர் காங்கிரஸின் சிரம்பான் கிளை ஸ்தாபனத்தின் தலைவராக இருந்து அரும்பணி புரிந்துள்ளார். ஸ்ரீ பழனியப்ப செட்டியார், ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள ஆவினிப்பட்டியில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் விவேகானந்தர் கல்விக் கழகத்தின் ஸ்தாபகர் என்பதும் குறிப்பிடத் தக்கது.



"நான் நினைத்தேன், நீர் போயிருக்க முடியாது என்று. இதோ நீர் கேட்ட முப்பது ரூபாய். அடுத்த வண்டிக்குப் புறப்பட்டுப் போம்!" என்று கூறிக் கொண்டே மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை அவனிடம் நீட்டினார் கல்யாணராம ஐயர்.

ராமபத்ரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் கொடுத்த ரூபாய்களை வாங்கிக் கொண்டே, "நேற்றிரவு நீங்கள்கூட எங்கோ போவதாக இருந்தது இல்லையா?" என்றான்.

"ஆமாம், போவதாகத்தான் இருந்தேன். டிக்கெட் கூட வாங்கி விட்டேன். பிளாட்பாரத்தில் ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, என்னுடைய கார் திரும்பவும் ஸ்டேஷனுக்கு வருவதை 'ஹாரன்' சத்தத்தால் அறிந்து வெளியே வந்தேன். என்னுடைய மனைவி திடீரென்று மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டதாகவும் ரயில் கிடைத்து நான் புறப்படாமல் இருந்தால், என்னைத் திரும்ப அழைத்துக் கொண்டு போக வந்ததாகவும் டிரைவர் சொன்னான். நல்லவேளையாக ரயில் ஒரு மணி தாமதம், உரிய சமயத்தில் வந்திருந்தால் நான் நாலைந்து ஊர்களைத் தாண்டியிருப்பேன். வாங்கின டிக்கெட்டைத் திரும்பக் கொடுக்கக்கூட நினைக்காமல் வீட்டுக்கு விரைந்தேன். என் மனைவிக்கு இது ஆறுமாதம். என்ன இசைகேடு நேரிட்டு விட்டதோ என்று பயந்து விட்டேன். அம்பாள் கிருபையால் அப்படி ஒன்றும் நேரிடவில்லை, மடத்துத் தெரு டாக்டர் கொடுத்த மருந்தினால் அனுகூலம் ஏற்பட்டது. பிராண பயம் இல்லை என்று தெளிவாகத் தெரிந்த போது பளிச் சென்று கூடவே உம்முடைய நினைவும் வந்தது. ஊரில் உம்முடைய மனைவிக்கோ, யாருக்கோ உடம்பு சௌகரிய மில்லாமல் இருப்பதாக நேற்று நீர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. நான் தவித்த தவிப்பை நீரும் தவித்திருப்பீர் இல்லையா? 'ஆகா! உபகாரம் செய்யாமற் போனேனே!' என்று நினைத்தேன். என் மனைவிக்கு ஏற்பட்ட அசௌகரியத்தாலோ, வேறு எதனாலேயோ, ரயில் கூடத் தாமதித்து வந்தது. அதனால் என் பிரயாணமும் தடைப் பட்டது. நான் அவள் சமீபத்தில் இருந்து ஆவன செய்து அவளைக் காப்பாற்றினேன். நான் காப்பாற்றினேன் என்பது தவறு. ஆண்டவன் காப்பாற்றிக் கொடுத்தார். அதே ஆண்டவன் உம்முடைய மனைவியையும் காப்பாற்றிக் கொடுப்பார். புறப்பட்டுப் போம்!" என்று அவர் சொல்லி விட்டுப் போய் விட்டார்.

ராமபத்ரன் கண்களில் நீர் துளித்தது.

"இந்த முப்பது ரூபாய்ப் பணத்தை இந்த மனிதர் நேற்றிரவே கொடுத்திருந்தால் எனக்கு எவ்வளவு சௌகரியமாக இருந்திருக்கும் நான் இந் நேரம் சென்னையில் இருப்பேனே! இப்பொழுது கொடுத்து விட்டுப் போகிறாரே. இனிமேல் சாயங்காலம்தானே வண்டி? அதுவரைக்கும் அவள் உயிரோடு இருக்கிறாளோ அன்றி—" மேலே சென்ற நினைவை அடக்கிக் கொண்டான்.

வாசலில் சைக்கிள் வந்து நின்ற சத்தம் கேட்டது. முதல் நாள் வந்த அதே தந்திச் சேவகன் உள்ளே வருவதைக் கண்டதும் அவனுக்குப் பகீர் என்றது. பரபரப்புடன் தந்தியை வாங்கிக் கொண்டான்.

அதைப் பிரித்துப் பார்த்தவுடன் அவன் உடலில் மின்சாரம் பாய்ந்த சுறுசுறுப்புத் தோன்றியது. குதித்துக் கொண்டு கல்யாண ராமய்யர் வீட்டுக்கு ஓடினான்.

அதேசமயம் ஐயரும், "கையில்என்ன ஐயா, தந்தி?" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

"என் மனைவிக்கு இப்போது சற்று குணமாம். விவரமான கடிதம் தொடர்கிறது என்று மாமனார் தந்தி அனுப்பியிருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டே தந்தியை அவர் கையில் கொடுத்தான்.

கல்யாண ராமய்யர் அதைக் கையில் வாங்கிப் பார்த்து விட்டு, "ராமபத்ரா, கடவுள் அருள் புரிந்தார்" என்றார்.

"தாயே, மங்களாம்பிகே! உன் திருவுள்ளக் குறிப்பை நான் அறிய முடியவில்லையே" என்று சொல்லிக் கொண்டே தேவியின் கோவில் அங்கிருந்தபடியே திசை நோக்கித் தொழுதான் ராமபத்ரன்.

உயர் பதவிக்கு உகந்தவன்




ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்

பணம் மிச்சமாகிறது. டக்கான தோற்றம்.
க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை.
வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

7 o'clock BLADES



14. அடங்கிய புயல்!

சிலருடைய முகத் தோற்றம் மகிழ்ச்சி வெறியில் மிதக்கும் பொழுது பார்க்கச் சகிக்காமல் விகாரமாக மாறி விடுவது இயல்பு என்பது யாவரும் அறிந்த விஷயமே. அப்படியிருக்கும்பொழுது அழகு என்பது என்ன என்பதையே அறியாத லால்ஜியின் முகம் அப்படி விகாரமாகத் தோற்றமளித்ததில் ஆச்சரியம் என்ன? இருந்தாலும் அவருடைய மனைவியான விஜயலக்ஷ்மிக்கு அவருடைய அந்த விகாரமான தோற்றம் தாங்கவொண்ணாத அருவருப்பை அளித்தது. எனவே, அவர் முகத்தைப் பார்க்கச் சகிக்காமல் அவள் தன் கண்களைத் திருப்பிக்கொண்டாள். அவள் என்ன திருப்பிக் கொண்டு என்ன, அவளுடைய கண்களுக்கு விடுதலை கிடைத்தால்தானே? எதிரே ஒரு பெரிய நிலைக் கண்ணாடி வைத்திருந்தது. விளக்கு வெளிச்சத்தில் அவளுடைய உருவமும் லால்ஜியின் உருவமும் அதில் பளிச்சென்று தெளிவாக விழுந்திருந்தன. இருவருடைய பிரதி பிம்பங்களையும் ஏக காலத்தில் ஒரே கண்ணாடியில் கண்ட அவளுக்கு மனத்தை என்னவோ செய்தது. அவள் அளவிட முடியாத அருவருப்பில் ஆழ்ந்தாள். அவள் யார்? லால்ஜி ஸேட்டின் சொந்த மனைவி யல்லவா? சொந்த மனைவி தன் கணவனிடம் குறைபாடுகளைக் கண்டு அப்படி யெல்லாம் அருவருப்புப் பாராட்டலாமா? அதை நினைத்துப் பார்க்கவே அவளுக்கு மனம் கூசியது. அப்போது தான் அவளுக்கு மனைவி என்னும் சொல்லின் முழுப்பொருளும் தெள்ளென விளங்கியது.

மனைவி என்பவள் என்ன, கேவலம் ஒரு விளையாட்டுக் கருவி தானா? கணவனின் கைப் பொம்மைதானா? இட்ட வேலையைச் செய்யும் ஏவலாளாக, வீட்டை அலங்கரிக்கும் சிங்காரப் பொருளாக இருக்கவா மனைவி என்பவள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறாள்? அறுசுவை உண்டி தயாரித்து, அன்புடன் படைத்து அதற்கும் மேன்மையான தொரு சுவையாகத் தானும் ஆகித் தன் கரம் பற்றிய கணவனுக்கு இன்பம் தரமட்டுமேயா மனைவி படைக்கப்பட்டிருக்கிறாள்? காற்றாடப் போய் வரக் கார், வெளியிலே வீதி உலா போய் வர வாகனம் என்பதுபோல் வீட்டில் கொலுவிற்றிருக்கவா பெண் படைக்கப்பட்டிருக்கிறாள்? மனைவி என்பவள் வீட்டில் அடைந்து கிடக்க வேண்டும் என்பதற்காகத் தான் கிருஹலக்ஷ்மி, இல்லாள் என்பது போன்ற பட்டப் பெயர்களைப் பெற்றாளா? தேவையான பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது போல ஆடவன் தனக்கென்று ஒரு மனைவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அந்த மனைவி அவனுடைய விருப்பு வெறுப்புக் கேற்றவாறு அடங்கி நடக்க வேண்டும். ஆனால் அவளுக் கென்று ஒரு தனி விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாது. அப்படி யிருந்தால் அதற்கு ஒரு மதிப்பும் கிடையாது. ஒருத்தி ஒருவனுக்கு மனைவி என்று ஆகிவிட்டால், அவன் இஷ்டத்தைத் தான் அவள் தனது இஷ்டமாகக் கொள்ள வேண்டுமே யொழியத் தன் இஷ்டமென்று தனியாக ஒன்று வைத்துக் கொள்ளக் கூடாது. இது எந்த ஊர் நியாயம்?

கணவனுடைய வாழ்க்கையில் மனைவிக்கு உள்ள பங்கு என்ன? அந்தஸ்து எத்தகையது? இந்தக் கேள்விக்கு இடம் ஏது? நிழல் போலக் கணவனின் காலடிகளைப் பின்பற்



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய்


றிச் செல்வது தானே இல்லற வாழ்வை மேற்கொள்ளும் இல்லாளின் கடமை? ஆமாம், அதை யார் மறுத்தார்கள்? அவளுக்கென்று ஒரு தனி சுதந்திரம் உண்டா? உண்டென்றால் அதற்கு ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டா? அவள் சொல்லுக்கும் செவி சாய்க்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் இரண்டொருவராவது இந்த உலகத்தில் இருப்பார்களா? இருக்க மாட்டார்கள் என்றால் அப்படியாவது அந்தத் தாம்பத்திய வாழ்க்கையை வாழ்ந்து தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் என்ன வேண்டிக் கிடக்கிறது? அத்தகைய அடிமை வாழ்வு வாழ்வதைக் காட்டிலும்......

விஜயலக்ஷ்மி அதற்குமேல் யோசிக்கவே அஞ்சினாள். ஆனால் அவளுடைய சிந்தனை அவள் அச்சத்துக்கு அஞ்சினால் தானே? அது பாட்டுக்கும் தன் இஷ்டத்துக்குத் தன் போக்கில் சுழன்று கொண்டிருந்தது.

அவளுக்குத் தன் கணவர் தனக்கு உகந்தவராகத் தோன்ற,வில்லை. கணவரைப் பற்றி நினைத்தாலே அவள் உள்ளத்தில் ஒரு வித அருவருப்பும் வெறுப்பும் குடி கொண்டு எரிச்சலை உண்டு பண்ணின; அடக்கமாட்டாத ஆத்திரத்தைக் கிளறி விட்டன; எதற்காகத் திருமணம் என்னும் இந்தக் கட்டுப்பாடு சமூகத்துக்குள் புகுந்து சமூகத்தை இப்படிக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குகிறது என்றே அவளை எண்ணத் தூண்டின. ஆயினும் திருமணம் என்னும் கட்டுப்பாட்டுக்குள் ஒரு தடவை கட்டுண்டு விட்ட பின் அதிலிருந்து விடுபட்டு வெளி வருவது என்பது இலேசுப்பட்ட காரியமா? எதற்கடா வீணில் இந்தத் திருமணச் சடங்கில் சிக்கிக் கொண்டோம் என்று மனம் வெதும்பலாமே தவிர அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு வழி வகை ஏதாவது உண்டா?

மானிட சாதி எத்தனை சீக்கிரம் அரசாங்கத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி அமைத்துக் கொள்ள முன் வருகிறதோ, அத்தனை சீக்கிரம் மணச் சடங்கு சம்பந்தமான மாறுதல்கள் விஷயத்தில் அது தன்னை மாற்றி அமைத்துக் கொள்ள முன்வருவதில்லை. அப்படியே முன் வந்து அதற்காக முயன்றாலும் அதனால் அவ்வளவு சீக்கிரமாக முடிவதில்லை. அரசாங்கத்துக் கெதிராகத் துரோகம் நினைத்தால் அதற்குச் சட்டத்தில் எத்தனையோ தண்டனைகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அவை பார்ப்பதற்குத் திருமண விஷயத்தில் இழைக்கப்படும் துரோகங்களைக் காட்டிலும் பெரிதானவையாகவும், பயங்கரமானவையாகவும் தோன்றுகின்றன. ஆனால் எழுத்து உருவில் வடிக்கப்படாத சமூகத்தின் சட்ட திட்டங்கள் திருமண விஷயத்தில் செய்யப்படும் துரோகங்களை மிகவும் பயங்கரப் படுத்தித்தான் காட்டுகின்றன. அரசாங்கத்துக் கெதிராக ஒருவன் துரோகம் இழைத்தால், அவன் பெரிய தேசத் தொண்டனாகவும் தேச பக்தனாகவும் மதிக்கப்படுகிறான். ஆனால் திருமண விஷயத்தில் ஒருவன் துரோகம் இழைத்தால் இழி குணத்துக்கு இருப்பிடமானவனாகக் கருதப்படுகிறான்; ஏளனத்துக்கும் எள்ளி நகையாடுவதற்கும் ஏற்றவனாக எண்ணப்படுகிறான். அவனிடம் அதிகமாகத் தாராளம் காட்ட யாருமே முன்வருவதில்லை. அப்படி வந்தாலும் அவர்கள் வேண்டுமானால் அவனுக்காகப் பரிதாபப்படலாம்; இரக்கப்படலாம்; தயவு தாட்சண்யம் காட்டலாம்; கருணை புரியலாம்; வேண்டும் என்றால் நான்கு அநுதாப வார்த்தைகளையும் உதிர்த்து வைக்கலாம். ராஜாங்கத் துரோகியிடம் காட்டும் மட்டு-மரியாதையை அவனிடம் காட்ட யாரும் முன் வருவதில்லை. யோசித்துப் பார்க்கப் போனால் அரசாங்கச் சட்டத்தைக் காட்டிலும் திருமண சம்பந்தமான சட்ட திட்டங்கள் இன்னும் சற்றுக் கடுமையாகவே இருக்க வேண்டும் என்றுதான் எண்ணத்





தோன்றுகிறது. அதுவும் ஆண்களைப் பொறுத்தவரை அது எவ்வளவுக் கெவ்வளவு கடுமையாகவும் கொடூரம் வாய்ந்ததாகவும் ஆகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது என்றேகூடச் சொல்ல வேண்டும்.

ஆனால் ஹிந்துப் பெண்மணிகளைப் பொறுத்தவரை திருமண சம்பிரதாயங்களும் முறைகளும் வெகு கடுமையானதாகவும் கொடுமை நிறைந்ததாகவும் இருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். மற்ற சாதிகள் விஷயத்தில் பெண்களுக்கு இத்தகைய இரும்புக்காப்புகள் போடப்படவில்லை. இதை விஜயலக்ஷ்மி நாளடைவில் நன்கு புரிந்து கொண்டு விட்டாள்.

ஐம்பது பிராயத்தைத் தாண்டி விட்ட ஐரோப்பிய மாது ஒருத்தி இருபது வயதுகூட நிரம்பாத இளைஞனை மணம் புரிந்து கொண்டாள் என்னும் செய்தியைப் படித்துவிட்டு விஜயலக்ஷ்மி வாய்விட்டுக் 'கலகல' வென்று கெக்கலி கொட்டி நகைத்திருக்கிறாள். தன் கணவன் மூலம், தான் விரும்பிய அளவு தனது காதல் கைகூடவில்லை என்பதற்காக ஒரு அமெரிக்கப் பெண்மணி விவாக ரத்துக் கோரி வழக்குத் தொடுத்து வெற்றியும் கண்டாள் என்னும் விவரத்தைப் பத்திரிகையில் படித்துவிட்டு விஜயலக்ஷ்மி உள்ளூறச் சிரித்திருக்கிறாள். திருமணத்தை ஒரு ஆராய்ச்சிக் கூடமாகக் கருதி ஆஸ்திரேலிய நாட்டு விதவை ஒருத்தி ஒருவருக்குப் பின் ஒருவராக எட்டு ஆடவர்களை மணந்திருக்கிறாள் என்னும் செய்தியைப் படித்த விஜயலக்ஷ்மி அதை வெகு இழிவாகக் கருதிக் குறுநகை புரிந்திருக்கிறாள். காரணம் என்ன? அவள் பாரத நாட்டில் பிறந்து பாரதப் பண்பில் ஊறித் திளைத்த ஒரு ஹிந்துப் பெண்மணி என்பதனால்தான்.

ஆனால் ஒரு ஹிந்துப் பெண்மணிக்கே வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டு மனத்தில் அதிருப்தி நிலவினால் என்ன ஆவது? என்ன ஆவதா? பழைய பழக்க வழக்கங்களிலும் பண்டைய சம்பிரதாயங்களிலும் பற்றுக் கொண்ட ஆண்மகன் இதைக் கேட்டு என்ன சொல்வான், தெரியுமா?

அப்படி ஒரு பெண் அதிருப்தி கொள்வாளேயானால், அவள் ஒரு ஹிந்துப் பெண்மணியாக இருக்க முடியாது என்று குமுறுவான்; கூச்சல் போடுவான். ஒருத்தி உண்மையான ஹிந்துப் பெண்மணியாக இருந்து அவள் கணவன் இறந்து விட்டால், அவனுடன் கூடவே அவளும் உடன்கட்டை ஏறி விடுவாள் என்று ஆதார பூர்வமாகப் பல சான்றுகள் எடுத்துக் காட்டுவான்.

தனக்குப் பின் தன்னோடு தன் மனைவி உடன் கட்டை ஏறி உயிர் துறக்க வேண்டும் என்று ஒரு கணவன் எண்ணுவானேயாகில், அவனிடம் அவளுடைய உள்ளத்தில் அத்தகைய பிரேமையையும் பாசத்தையும் வளர்க்கும் திறனும் தகுதியும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு மனைவி உள்ளன்



புடனும் அந்தரங்க சுத்தத்துடனும் அவனோடுகூடவே உடன்கட்டை யேறுவாள்.

அந்தத் திறனும் தகுதியும் ஒருவனிடம் இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் ஒரு குணம் மட்டும் கட்டாயம் இருக்கிறது. அதாவது வாழ்நாள் முழுவதும் எரிகின்ற கொள்ளியிலே இல்லாளைப் போட்டு வாட்டி வதக்கும் திறன் மட்டும் அள்ள அள்ளக் குறையாத வகையில் அமைந்திருக்கிறது. கணவனின் அந்தத் திறனைத் தனக்கு உறுதுணையாகக் கொண்டு உடன்கட்டை ஏறும் வன்மையை எத்தனை பெண்களிடத்தில் எதிர்பார்க்க முடியும்? உயிரற்ற சடலமாக ஓடியாடி வளையவரும் பெண்களிடத்தில் அத்தகைய நெஞ்சுறுதியைக் காண முடியாதுதான். எனவே, அவர்களை ஒருபுறமாக ஒதுக்கி வைத்துவிட்டுப் பார்ப்போமானால், வேறுவகையான சிலபெண்களும் இந்த உலகத்தில் வளைய வருகிறார்கள் என்பது தெரியவரும். அவர்களில் பலர் அன்னிய ஆடவர்களுடன் ஓடிய இளம் விதவைகளாக இருக்கலாம். வாழும் வகையறியாமல் தாய் தந்தையர்களைத் தஞ்சம் அடைந்தவர்களாகச் சிலர் இருக்கலாம். வயிற்றுப் பாட்டுக்காக வேண்டி வழக்காடி நியாய ஸ்தலத்தில் நீதி பெறலாம் என்ற நோக்கத்துடன் நியாயஸ்தலத்தின் படியேறியவர்களாகப் பலர் இருக்கலாம். பின்னைப் பேறுபெறவில்லை என்பதற்காக மலடிப் பட்டம் சூட்டப்பட்டுக் கரம் பற்றிய கணவர்களாலேயே விரட்டியடிக்கப் பட்டவர்களாகவும் பலர் இருக்கலாம். இவர்களெல்லோரும் இன்று வரை ஹிந்து சமூகத்தின் தயைக்குப் பாத்திரர் களாகவில்லை; இரக்கத்துக்கு உரியவர்களாகவில்லை. ஆனால் அதற்கு நேர் எதிரிடையாக இழிவுக்கும் ஏளனத்துக்கும் உகந்தவர்களாக, அவச்சொல்லுக்கும் அவமானத்துக்கும் ஆளானவர்களாகவே தான் மதிக்கப்படுகிறார்கள்.

விஜயலக்ஷ்மியும் இன்றுவரை இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எல்லாம் தன் அருவருப்பையும் அலட்சிய மனோபாவத்தையும் தான் அத்தகையவர்களிடத்தில் காட்டி வந்திருக்கிறாள். ஏனெனில் அவளும் பாரதப் பண்பாட்டுக்கு இயைந்த நற் குணங்கள் படைத்தவள் அல்லவா? அப்படியானால் இப்படியாவானேன்? அவள் மனம் பேதலிப்பானேன்? திருமணத் தொடர்பு பற்பல வேண்டாத கட்டுப்பாடுகள் நிறைந்ததாகத் தோன்றுவானேன்? இத்தகைய தீய நோக்கங்கள் அவள் உள்ளத்தில் இடம் பெறுவானேன்? பாவச் செயல்கள் பல உருப்பெறுவானேன்? அவள் உள்ளத்தை அப்படி என்ன துயரம் ஆட்டி விட்டது? அவள் தன் வாழ்க்கையில் அப்படி என்ன பெருங் குறையைக் கண்டு விட்டாள்? எதற்காக அவள் இப்படியெல்லாம் வீணில் மனச் சங்கடப் பட்டு வருந்த வேண்டும்?

அவள் தன் கணவரைப் பற்றியே தன் மனத்துள் சிந்திக்கலானாள். அவரிடத்தில் அவள் என்ன குறைவைக் கண்டு விட்டாள்? எதற்காக அவர் நினைவை விட்டு அவள் மனம் மாற வேண்டும்? பொருள் சேர்க்கும் விஷயத்தில் அவருக்கு உள்ள அகட விகட சாமர்த்தியத்தைப் பார்த்தால், அவரை அசடு என்றோ, முட்டாள் என்றோ சொல்லிவிட முடியாது. அவளுக்குத்தான் அவர் எத்தனை எத்தனை இன்பங்களை அநாயாசமாக அளித்து வந்தார்? இந்த உலகத்தில் எத்தனை ஆடவர்கள் தங்கள் தங்கள் மனைவிமார்களுக்கு அவரவர்கள் விரும்பிய பொருளை வாங்கி அளித்திருக்கிறார்கள்? இவ் விஷயத்தில் யாருமே லால்ஜி சேட்டுக்கு ஈடு இணையாக முடியாது. இதில் சிறிதும் சந்தேகமே இல்லை.

மக்களிடையே அவள் கணவருக்கு உள்ள மதிப்புக்கும் மரியாதைக்கும் கூட ஒரு இழுக்குக் கற்பிக்க முடியாது. அவரைப் பொறுத்தவரை மக்களிடையே நல்ல பெயர்தான் நிலவி வந்தது. அரசாங்க சபை அங்கத்தினராகவும் அவர் ஆகிவிட்டால், அவருக்கு உள்ள மதிப்பு இன்னும் எத்தனை பங்கு அதிகமாக உயர்ந்து விடும்?

ஆகா! அவர்தான் என்மேல் எப்படி உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறார்?

இதுபோன்ற எண்ணங்கள் விஜயலக்ஷ்மியின் உள்ளத்தில் எழுந்து முந்தி உதித்த எண்ணங்களை அடித்து விரட்டின. அதன் பலனாக அவள் தனக்குக் கிடைத்துள்ள சுக சாதனங்களை யெல்லாம் மதிப்பிட்டுப் பார்க்கலானாள். தன் குடும்பத்தில் இருந்த வண்டி, கார் போன்ற வாகன வசதிகள் வேறு அவள் கண்களெதிரே வந்து நின்றன. எத்தனை கணவன்மார்கள் இவரைப்போல் தங்கள் சொத்தை அநுபவிக்கும் விஷயத்தில் தங்கள் மனைவிமார்களுக்கும் பங்கு போட்டுக் கொடுக்க முன் வருகிறார்கள்? அல்லது பங்கு போட்டுக் கொடுக்கக் கூடிய சக்தியைத் தான் பெற்றிருக்கிறார்கள்? அப்படியிருக்கும் பொழுது அவள் தன் கணவரிடத்தில் பெருமை அல்லவா கொள்ள வேண்டும்?

இதை எண்ணிய விஜயலக்ஷ்மியின் நினைவு சட்டென்று கோகிலாவின் மீது தாவியது.

தூரப் போவானேன்? கோகிலாவையே தான் பார்ப்போமே! அவள் கணவன் ஜகதீஷ் சும்மா கையைக் கட்டிக் கொண்டு வேலை வெட்டியின்றி உட்கார்ந்திருக்கிறான். கோகிலா தன் கணவன் ஜகதீஷையும் சேர்த்துக் கவனித்துக் கொள்கிறாள். கோகிலா ஒருத்தி இல்லா விட்டால் ஜகதீஷாவது, குடும்பம் நடத்தி உருப்படவாவது?

ஆனால்......

கோகிலாவும் ஜகதீஷும் சிந்தனைத் திரையில் இடம் பெறவே, விஜயலக்ஷ்மி சற்றுத் தயங்கினாள்.

ஜகதீஷிடம் உள்ள குறையை குறையாகக் கருதாமல் நாம்தான் இட்டு நிரப்புகிறோம் என்ற எண்ணம் கோகிலாவின் உள்ளத்தில் எப்பொழுதாவது இடம் பெற்றிருக்குமா? இடம் பெற்றிருந்தால் கோகிலா இப்படி நடந்து கொள்வாளா? அவனிடம் அலட்சியமாக நடந்துகொள்ள மாட்டாளா? அவள் அலட்சியமாக நடந்து கொள்ளாததிலிருந்து என்ன தெரிகிறது? அவள் அவனுடைய குறையைக் குறையாகக் கருதவில்லை என்றுதானே? அப்படி அவள் அவனிடம் குறையைக் காணாமல் நல்லவிதமாக நடந்து கொள்வதற்கு என்ன காரணம்? அவள் குறையைக் குணமாகக் கொள்வதற்கு ஜகதீஷிடம் அப்படி என்ன அபார வசீகர சக்தி குடி கொண்டிருக்கிறது? கோகிலா எதற்காகச் சிறிதும் மனம் கோணாமல் அவனுடன் சேர்ந்துகொண்டு துயரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும்? என்ன யோசித்தும் அவளால் அதற்கு விடை காண முடியவில்லை.

விஜயலக்ஷ்மி இரவு வேலைகளை யந்திரம் போல் செய்து முடித்தாள். பிறகு தன் கணவருக்கு அருகில் வந்து உட்கார்ந்து சிறிது நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாள். லால்ஜி சேட் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது என்று கூறிப் படுத்து உறங்கச் சென்று விட்டார்.

கண் மூடிக் கருத்து உறங்கியதுதான் தாமதம்; அவர் கனவில் அரசாங்க சபையின் அழகிற் சிறந்த கட்டிடம் காட்சி அளித்தது. கனவில் கற்பனை சுரந்து அவரை எங்கெங் கெல்லாமோ இனந் தெரியாத இடத்துக்கெல்லாம் இழுத்துச் சென்று இன்பத்தை அளித்தது.

ஆனால் விஜயலக்ஷ்மிக்குத் தூக்கமே வரவில்லை. அவள் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்தாள். 'ஜகதீஷிடம் அப்படி என்ன யாருக்கும் தெரியாத வசீகர சக்தி குடிகொண்டிருக்கிறது? கோகிலா மன மகிழ்ச்சியுடன் அவனோடு அவனுடைய துயரங்களை யெல்லாம் தானும் பங்கு போட்டுக் கொண்டு வாழ்கிறாளே!' என்ற முந்திய கேள்வியே

மறுபடியும் விட்ட குறை தொட்ட குறையாக அவளைச் சூழ்ந்து கொண்டது.

ஜகதீஷின் முகத் தோற்றத்தில் ஒரு பொலிவு தாண்டவமாடுவதை அவள் கண்டிருந்தாள். அப்படிப் பார்க்கப் போனால் பெரும்பாலான ஆடவர்கள் தங்கள் தங்கள் மனைவிமார்களின் கண்களுக்கு அழகிற் சிறந்த மன்மதனாகத்தான் காட்சி அளிக்கிறார்கள். ஆயினும் ஜகதீஷை அப்படிச் சொல்லி விடுவதற்கில்லை. உண்மையிலேயே அவன் அழகு வாய்ந்தவனாகத்தான் இருந்தான். அவன் அழகு ஒன்றில் மட்டும் மயங்கியா கோகிலா அவனுடன் இவ்வளவு கஷ்டமும் அனுபவிக்கிறாள்?

விஜய லக்ஷ்மியின் மனத்திலே மூண்ட போர் விடாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாட்டுக்காக ஜகதீஷ் தன்னலத் தியாகம் செய்திருந்தான். பெரிய உத்தியோகத்தை உதறி யெறிந்திருந்தான். அது ஒன்றும் விஜயலக்ஷ்மிக்கு அவ்வளவு பெரிய விஷயமாகப் படவில்லை. கோகிலாவும் அவளைப் போன்ற பெண்தானே? அவளுக்கும் அவளைப் போலவேதான் தோன்றி யிருக்க வேண்டும் என்பது அவள் நினைப்பு. இது போல் நிலையற்ற உணர்ச்சி வசப்பட்டு எத்தனையோ முட்டாள்கள் உத்தியோகத்தை உதறி யெறிந்து விடுகிறார்கள்; தொழிலைத் துறந்து விடுகிறார்கள். இது சம்பந்தமாகக் கணவனைக் கடிந்து கொள்வதற்குப் பதில் கோகிலா அவனுக்குச் சிறிதும் துயரம் ஏற்படக் கூடாது என்ற முறையில் நடந்து கொள்கிறாளே! இந்தக் கோகிலாவின் செய்கை விந்தையிலும் விந்தையாக அல்லவா இருக்கிறது! புரிபடாத வேதாந்த தத்துவமாக அல்லவா தோன்றுகிறது!

"விஜயா! விஜி!"—லால்ஜி ஸேட் தூக்கத்தில் விஜயலக்ஷ்மியைக் கூப்பிட்டார்.

ஜகதீஷின் ரூபலாவண்யத்தையும் குண விசேஷங்களையும் பற்றி யோசித்தவாறே சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த விஜயலக்ஷ்மி சட்டென்று நாற்காலியில் எழுந்து உட்கார்ந்தாள். கனவு கலைந்த அவளுக்குக் கணவருடைய படுக்கை அறையில் உட்கார்ந்து கொண்டு வேறு ஒரு ஆடவனைப் பற்றிச் சிந்திப்பது மகா பாவம் என்று தோன்றியது.

"சை! நமக்கு எதற்கு அவர்கள் சிந்தனை? அவர்கள் இரண்டு பேரும் ஆனந்தமாக இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே! அவர்கள் வீட்டில் அவர்கள் ஆனந்தமாக இருந்தால் நாம் எதற்காகக் குறைப்பட்டுக் கொள்ள வேண்டும்? அல்லது அவர்கள் பேச்சைத்தான் நாம் எதற்காக எடுக்க வேண்டும்?"

இம்மாதிரி எண்ணிய விஜயலக்ஷ்மி ஜகதீஷ் கோகிலா இருவருடைய நினைவையும் தன் மனத்திலிருந்து அகற்ற முயன்றாள். அந்த நினைப்பு வேகத்துடனேயே லால்ஜி படுத்திருந்த கட்டிலுக்கருகே சென்றாள்.

"ஏன்? என்ன?"

ஒரு மனைவி தன் கணவனை எப்படிக் கேட்பாளோ, அப்படிக் கேட்டாள் விஜயலக்ஷ்மி. அப்பொழுது அவள் பேச்சில் குழைவும் நெளிவும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

லால்ஜி ஸேட் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். விஜயலக்ஷ்மி அவருடைய கையைத் தூக்கினாள். சிறிது உயரத் தூக்கியதும் அப்படியே விட்டு விட்டாள். தூக்கத்தில் துவண்டிருந்த கை மெத்தையில் பொத்தென்று விழுந்தது. லால்ஜி ஸேட் ஆழ்ந்த நீள் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். விஜயலக்ஷ்மி அவரைத் தட்டி எழுப்பினாள்; உலுக்கி விழிக்கச் செய்ய முயற்சித்தாள். ஒருவேளை எதையாவது பார்த்து விட்டு அவர் தன்னைக் கூப்பிட் டிருக்கலாமோ என்ற எண்ணம் அவளுக்கு. எனவே, "என்னை எதற்காகக் கூப்பிட்டீர்கள்?" என்று உரக்கக் கேட்டாள்.

லால்ஜி ஸேட் ஒரு கண்ணை மட்டும் பாதி திறக்க முயன்றார். அப்புறம் அவர் உதடுகள் அசைந்தன. அயர்ந்த தூக்கத்திலேயே,

சுதந்திர சரித்திரம்

நமது நாட்டில் சரித்திர புத்தகங்கள் ஆங்கிலேயரே எழுதி வந்தார்கள். அவர்களுடைய முடிவுகளை யொட்டியே நம்மவர்களும் எழுதி வந்தார்கள். இதன் பயனாக உண்மைக்கு மாறான பல விஷயங்களும், நம் முன்னோர்களின் தகைமைக்கு மாசு கற்பிக்கும் வகையிலுமே சரித்திர நூல்கள் அமையலாயின. ஆகவே சுதந்திரம் பெற்று விட்ட நாம், நம் சரித்திரத்தை நல்ல முறையில் எழுத வேண்டியது மிக முக்கியமானதாகும்.

யவனதேசத்து மன்னன் அலெக்சாந்தர் இந்திய மண்ணில் அடி எடுத்து வைத்தபோதே பாரத மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்றவர்கள் என்பதை நிலைநாட்டினார்கள். இதில் தொடங்கி ஆங்கிலக் கும்பெனியாரின் ஆட்சி முடிய உள்ள வீர சரித்திரத்தை நாற்பது பக்கங்களில் இந்நூலாசிரியர் முடித்துவிட்டு, ஆங்கில ஆதிக்கத்தைச் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாகப் பாரத மக்கள் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற அற்புதமான வரலாற்றை ஆண்மை துலங்கும் நடையில் சுமார் மூந்நூற்று நாற்பது பக்கங்களுக்கு மேல் எழுதி யிருக்கிறார். கட்ட பொம்மன், ஜான்ஸி ராணி, விபின் சந்திர பாலர், அரவிந்த கோஷ், வ. வே. சு. அய்யர் போன்றவர்களின் சாகசச் செயல்களைப் படிக்கும்போது நாம் பெருமிதம் கொள்கிறோம். நாம் பெற்ற சுதந்திரம் எத்தனை எத்தனை அரும் பெரும் தீரச் செயல்களாலும், தியாகங்களாலும் உருப் பெற்றது என்பதை இந் நூலின் மூலம் அறிந்து வியக்கிறோம்.

எழுதியவர்: எம். எஸ். சுப்ரமணிய ஐயர்; பிரசுரம்: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53–56, பவழக்காரத் தெரு, சென்னை—1; விலை. ரூ. 4.

“ஊம்” என்று ஒரு ‘ஊம்’ கொட்டி விட்டு மறுபடியும் கண்மூடி விட்டார்.

பாதி திறந்த கண் மூடிவிட்டது. ஆனால் திறந்த உதடு மூடிக் கொள்ளவில்லை. வாய் வழியாக அவர் மூச்சுவிடத் தொடங்கி விட்டார். அதன் பலனாக அந்த அறை முழுவதும் அவருடைய குறட்டைச் சப்தம் வியாபிக்கலாயிற்று. அதைக் கண்ணுற்ற விஜயலக்ஷ்மிக்கு மனம் புண்பட்டது. அவரைப் பார்க்கப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். லால்ஜி சேட்டின் படுக்கையில் கிடந்த தலையணை ஒன்றை எடுத்துக் கொண்டு அவள் மறுபடியும், தான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கே திரும்பி வந்து அமர்ந்தாள்.

இருள் சூழ்ந்த நள்ளிரவில் வானத்தில் பவனி வந்து கொண்டிருந்த தாரகைகள் ‘மினுக், மினுக்’ என்று மேனி குலுக்கி முறுவலித்துக் கொண்டிருந்தன. அவை தன்னைப் பார்த்துத்தான் சிரிக்கின்றனவோ என்று தோன்றியது விஜயலக்ஷ்மிக்கு. உயர் வானத்தின் உச்சி மேட்டை அவள் ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள். வானம் அது பாட்டுக்கும் உயர, உயர, உயரப் போய்க் கொண்டேயிருந்தது. வான வெளியின் உயரத்துக்கு ஒரு எல்லை கிடையாதா? முடிவு கிடையாதா?

தனது குறுகிய படுக்கை யறையின் நாற்புறத்துச் சுவர்களும் உடைந்து மேற் கூரையும் விழுந்தால், அவள் எல்லையற்ற வானத்துடன் கலந்து விடலாம் அல்லவா?

இதுபோன்ற ஒரு குருட்டு யோசனையில் அவள் இறங்கினாள். நிர்மலமான நீலவானத்துடன் இரண்டற ஒன்று கலந்து விட்டால் அவளும் நட்சத்திரங்களோடு நட்சத்திரமாகி நட்சத்திரம் போல் மேனி மினுக்கி நகைத்துக் கொண்டிருக்க முடியாதா?

நகைக்கும் நட்சத்திரங்களின் மினுக்கும் மேனியைப் பார்த்தவாறே படுத்திருந்த அவளுடைய கண்கள் அவளை யறியாமலே மூடிக் கொண்டன. அடுத்த கணமே அவளுக்கு நல்ல தூக்கம் வந்து விட்டது. நினைவிலே நின்று நர்த்தனம் புரிந்து கொண்டிருந்த எண்ணங்களும் உறக்கம் கொண்டு விட்டன.

மென்மையும் இனிமையும் இயைந்த பாடற் குரல் கேட்டு அவள் கண் விழித்தாள். தூக்கக் கலக்கத்தில் அவளுக்கு வானத்து நட்சத்திரங்கள் தான் பாடுகின்றனவோ என்ற பிரமை தட்டியது. அவள் கண்களை கசக்கி விட்டுக் கொண்டாள். தூக்கம் கலைந்து நல்ல நினைவு வந்த பின் அவள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். கீழே முற்றத்தில் கோலம் போட்ட வண்ணம் கோகிலா இனிமையே உருவான தனது குரலில் பூபாள ராகத்தில் பாடிக் கொண்டிருந்தாள்.

“பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை இருட் கணம் போயின யாவும்

* * *

இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?
இன்னுயிரே! பள்ளி யெழுந்தருளாயே!”

கோகிலாவின் பாட்டைக் கேட்டவாறே விஜயலக்ஷ்மி வான முகட்டை எட்டிப் பார்த்தாள். இரவு முழுதும் இன்பக் கேளிக்கைகள் புரிந்து களைத்துச் சலித்து விட்ட நட்சத்திரப் பெண்கள் மங்கி மெலிந்து ‘பொழுது புலரப் போகிறது’ என்பதை அறிவித்துக் கொண்டிருந்தனர். விஜயலக்ஷ்மி மாடியிலிருந்த வண்ணமே, “ஜகதீஷ் அண்ணா இப்பொழுது எப்படி இருக்கிறார்?” என்று கேட்டாள்.

கோகிலா பாட்டை நிறுத்தி விட்டு வியப்புடன் மேலே அண்ணாந்து பார்த்தாள். பிறகு “விஜயா அக்காவா? நீ எங்கிருந்து பேசுகிறாய்? இப்பொழுது ஜுரம் கொஞ்சம் குறைந்திருக்கிறது!” என்றாள்.

“அதுதான் தெரிகிறதே! இல்லா விட்டால் நீ இப்படிப் பாடிக் கொண்டிருப்பாயா?” என்றாள் விஜயலக்ஷ்மி சிரித்த வண்ணம். உள்ளத்தில் கொதிப்பேற்றி யிருந்த இரவு நிகழ்ச்சிகள் அனைத்தும் காலைக்குளிர் காற்றில் கலந்து மறைந்து விட்டிருந்தன. ‘குற்றம் குறைவற்ற இவர்கள் வாழ்க்கையில் புகுந்து நாம் எதற்காகக் குறுக்கிட வேண்டும்?’ என்ற எண்ணம் எழுந்து விஜயலக்ஷ்மியின் உள்ளத்திலே சங்கோசத்தை வருவித்துச் சென்றது.

நாம் எதற்காக இப்படியெல்லாம் செய்ய வேண்டும்? இனி எத்தகைய எண்ணங்களுக்குச் சிறிதும் இடமே கொடுக்கக் கூடாது என்று மனத்தில் முடிவு கட்டிய விஜயலக்ஷ்மி அதற்குப் பிறகு ஜகதீசைப் பற்றி அதிகமாக விசாரிக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். உடனே நினைத்ததைச் செயலிலும் காட்டி விட்டாள். (தொடரும்)


மிக
தெளிவானது...
கண்ணாடியைவிட 5% அதிக
தெளிவு வாய்ந்தது—பொருள்
களை நன்றாகக் காட்டுகிறது!
மிகவும் தெளிவு வாய்ந்த ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரண்ட் காகிதம் (அதன் மூலம் 95% வெளிச்சம் ஊடுருவிச் செல்லுகிறது) உங்களுடைய பொருள்களுக்கு பளபளப்பளிக்கிறது. உடனேயே கண்ணைக்கவர்ந்து விற்பனையைத் துரிதமாக்குகிறது. உங்களுக்கு வேண்டிய காகிதம் கிடைக்காவிட்டால் எங்களுக்கு நேராக எழுதுங்கள்.
இந்த அனுகூலங்களை கவனியுங்கள்:
ட்ரேயான்ஸ் ட்ரான்ஸ்பெரண்ட் காகிதம் மிகவும் உறுதிவாய்ந்தது! ஒரு அங்குல அகலமுள்ள துண்டுக் காகிதம் 20 ராத்தலை கிழியாமல், அனுகாசமல் தாங்கக்கூடும்.
இதுவே மிகவும் மலிவான பாக்கிங் சாதனம். விலையை ஒப்பிட்டுப் பாருங்கள்! 20"X30" அளவுள்ள ஒருதாளின் விலை 1½ அணாவுக்கும் குறைவு!
விலை:
நிறமற்றது:- 500 தாள்கள் கொண்ட 1 ரீம் ரூ 44/- அம்பர்:- 500 தாள்கள் கொண்ட ரீம்-ரூ 51/8. உள்ளூர் விற்பனை வரிதவிர. பாக்கிங்சார்ஜ்—ரூ 1/4 கூடுதலாக
TRAYONS
ட்ரேயான்ஸ்
ட்ரான்ஸ்பெரண்ட்காகிதம்
தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட்
பாக்டரி: ரேயான்புரம் போஸ்ட், (வடக்கு திருவாங்கூர்)
ஸேல்ஸ் ஆபீஸ்: யூனைடெட் இந்தியா லைப் பில்டிங் மதராஸ்-1
இந்தியாவில் முதன் முதலாக ட்ரான்ஸ்பெரண்ட் காகிதம் தயாரிக்கும் ஸ்தாபனம்.
மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள்: ரேயான் ட்ரேடர்ஸ் லிமிடெட்,
27 கோரல் மர்ச்செண்ட் தெரு, மதராஸ்-1 (பிராஞ்சுகள்: மதுரை, சேலம் & கோயம்புத்தூர்)
பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்: Mr. H. சுப்பண்ணா. டாட்பேட். பெங்களூர்.

லிப்டன்
டீ கெர்ல்



சிறந்த ஸ்ட்ராங் டீ
தருகிறது

உலகில் யார் யாரோ பிரமாதமான காரியங்களெல்லாம் செய்து பிரசித்தி யடைகிறார்கள். என்ன செய்வது என்று ஒன்றும் புரியாத சமயத்தில் உலகமே அதிசயிக்கத் தக்க ஏதேனும் ஒன்றைச் செய்து காட்ட வேண்டுமென்று எண்ணம் ஏற்படுவது சகஜம் தானே!

சிந்தனை பிரமாதமாகத்தான் வேலை செய்தது. ஆனால் உலகத்தில் முதலில் எந்தப் பிரமாதத்தைச் செய்து காட்டுவது என்பதுதான் என் சிந்தனையுள் அடிபடாத விஷயமாக இருந்தது. என் சிந்தனை என்னும் மண்குதிரையைச் சவுக்கை எடுத்து அடித்தேன். அது ஆகாய விமானத்தின் முகப்பில் வைத்திருக்கும் காற்றாடிபோலச் சுற்றத் தொடங்கியது.

திரிசங்குவைப் போல் இந்த உடலோடு நேராகச் சொர்க்கத்துக்கோ—நரகத்துக்கோ போவதென்றால் இது சரியான யோசனைதான். திடீரென்று திரிசங்குவைப் பற்றிய இந்த எண்ணம் எனக்கு ஏன் என்று காரணம் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனால் எவ்வளவோ சந்தர்ப்பங்களில் இப்படியே சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போய்த் தொலைந்து விட மாட்டோமா என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டதுண்டு.

திரிசங்குவைப் போல் அப்படியே இந்த உடலோடு சொர்க்கத்துக்குப் போவதாயிருப்பினும், அதற்கு விசுவாமித்திரரைப் போன்ற ஒருவருடைய உதவியல்லவா வேண்டியிருக்கிறது! இந்தக் காலத்தில் விசுவாமித்திரரைப் போன்ற ஒரு மனிதரைத் தேடிப் பிடித்து விடுவதாயிருந்தாலும் பிறருடைய உதவியால் நாம் செய்து காட்டும் அதிசயம் நமக்கு எப்படிப் பெருமையையும் புகழையும் கொடுக்கும்! பிறருடைய உதவி இல்லாமலேயே இந்த மகத்தான காரியத்தைச் செய்து காட்டி அநாதி காலம் தொட்டுத் திரிசங்குவுக்கு உள்ள பெருமையைக் குறைத்துவிட வேண்டும் என்று நினைத்தேன்.


ஒரு நல்ல நாளில் ஒரு பெரிய மைதானத்தில் ஊர் ஜனங்களையெல்லாம் கூடச் செய்து மைதானத்தின் நடுவிலே சிரசாஸனம் செய்வது போல் தலைகீழாக நின்று அப்படியே புதைவாணம் கிளம்புவதுபோல் வான மண்டலத்தை நோக்கிக் கிளம்பி விட வேண்டும். இதுதான் நான் வகுத்த வழி. வழி வகுக்கும் விஷயத்தில் நான் வெற்றி கண்டு விட்டேன் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் வகுத்த வழியைச் செயலில் வெற்றிகரமாகச் செய்து காட்ட இரண்டு மூன்று ஜன்மங்களாவது அப்பியாசம் செய்ய வேண்டும் என்று தோன்றியது. இந்த ஜன்மத்தில் இல்லா விட்டாலும் இன்னொரு ஜன்மத்திலாவது இந்தத் திரிசங்கு வேலையைச் செய்து காட்டி விடுவது என்று நிர்மானித்து விட்டேன்.


ஆனால் இந்த ஜன்மத்தில் ஏதேனும் பிரமாதம் செய்து காட்டாவிட்டால் இந்த ஜன்மம் எடுத்ததற்கே காரணம் இல்லாமலல்லவா போய்விடும்! மறுபடியும் என் சிந்தனை என்னும் மண் குதிரையை ஆட்டி அசைக்கவேண்டியிருந்தது. சில சமயங்களில் என் சிந்தனை ஓடம் தரை தட்டி விட்டால் (இந்த இடத்தில் மண் குதிரையாக இருந்த சிந்தனையை ஓடமாக்கிக் கொண்டதற்காக மன்னிக்கவும்) என் மனைவியின் மூளை அதற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறது. என் மனைவிக்கு நல்ல மூளை இருக்கிறது. ஆனால் அதற்குச் சிந்தனை செய்யும் திறமை இல்லை. நல்ல மூளை இருப்பதினாலேதான் அவள் சிந்திக்காமலேயே எதையும் சொல்லுகிறாள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நான் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தேன். அவள் கிணற்றடியில் நின்று தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாள். ' இந்தா ! உன்னைத்தானே!' என்றேன், அவளுக்குப் பக்கத்தில் போய் நின்று.

கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தவள் அப்படியே நிறுத்திக் கொண்டு, ''என்ன.........!'' என்றாள், என்னைத் திரும்பிப் பார்த்து. அவள் திரும்பிப் பார்த்த அழகையோ அப்பொழுது ஏற்பட்ட அவளது கண் பார்வையின் எழிலையோ வர்ணிக்கும் அவகாசம் எனக்கு இல்லை. எப்பொழுதுமே அவள் கண் பார்வைக்கு மனத்தில் கிலியையும் நடுக்கத்தையும் கொடுக்கக் கூடிய சக்தி இருக்கத்தானிருந்தது. அவள் பார்த்த பார்வையில் கிலியோ நடுக்கமோ எனக்கு ஏற்படுவதற்கு முன்னால் என் சிந்தனையில் ஒரு புதிய யோசனையின் பொறி பட்டுத் தெறித்தது.

''இதோ பார்! ஒரு நிமிஷ நேரம் நீ அப்படியே





"அந்தத் தாம்புக் கயிற்றை விட்டு விட்டு நில்லு, பார்ப்போம்!" என்றேன். பாதிக் கிணற்றில் தண்ணீரோடு நிற்கும் குடம், கயிற்றை விட்டு விட்டால் பாதிக் கிணற்றிலேயே திரிசங்குவைப் போல் நின்று விடுகிறதா என்று பார்ப்போம் என்பதுதான் என் ஆசை. என் ஆசை என் மனைவிக்கு எப்படித் தெரியப் போகிறது! என் வார்த்தையைக் கேட்டு அப்படியே கயிற்றை விட்டிருந்தால் அந்தக் குடம் அப்படியே பாதிக் கிணற்றிலேயே நின்றிருந்தாலும் நின்றிருக்கும். அவள் கண்களின் அச்சம் விளைவிக்கும் பேரழகு இப்பொழுது அதிகமாகியது... "ஏன் உங்களுக்கு வரவரப் புத்தி இப்படிப் போகிறது! குடம் கிணற்றிலே விழுந்தால் யார் எடுத்துக் கொடுப்பாங்க! நீங்க கிணற்றை எட்டிப் பார்க்கக்கூடப் பயப்படுறீங்க. கேணி முழுகுகிறவனுக்கு அப்புறம் இரண்டணா தண்டம் அழணும்......பொழுது போகாமல் இப்படி ஏதாவது சொல்லிக்கிட்டிருக்கத்தான் தெரியுது. எங்க அக்காவுக்கு மைத்துனர் வீராசாமி இல்லே, அவரு எழுபத்திரண்டு மணி நேரம் சைக்கிளை விட்டு இறங்காமல் சவாரி செய்தாராம். அதைப்பற்றி ஊரே மெச்சிக்கிறதாம். எங்க அக்கா பெருமையா சொல்லிக்கிறு. அவருக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலே வசூலாச்சாம். மாலை மேலே மாலையா வந்து விழுந்துதாம். நீங்களும்தான் இருக்கீங்க...!" என்றாள், குத்தலாகவும் கோபமாகவும்.

என் மனைவியின் கோபமும் ஆத்திரமும் கொண்ட பேச்சுக் கிடையே எனக்கு ஒரு வழி கிடைத்தது. ஏன் நானும் சைக்கிள் விட்டு ஊரைப் பிரமிப்படைய வைக்கக் கூடாது! என் மனைவியின் மனசுக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்க அப்பொழுது நான் தயங்கவே இல்லை. "நீ துளிக்கூடக் கவலைப்படாதே. அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதே மைதானத்தில் நான் சைக்கிள் சவாரி செய்ய ஆரம்பித்துச் சைக்கிளை விட்டு இறங்காமல் நூற்று நாற்பத்திநாலு மணி நேரம் சைக்கிள் விட்டுக் காண்பிக்கிறேன், பார்!" என்று சொல்லிவிட்டு வாசற் பக்கம் வந்தேன். அப்பொழுது யாரோ ஒரு பையன் ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்து விட்டுப் போனான். நான் அதை எவ்வளவு அலட்சியமாக வாங்கிப் பார்த்தேனோ, அந்த அளவுக்கு என்னைத் திகைக்க வைத்து விட்டது, அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கண்டிருந்த விஷயம்.

'அகில உலக சைக்கிள் சாம்பியன் பிளுங்கு நூர்முகம்மது அவர்கள் ஞாயிற்றுக் கிழமை அன்று காலை நமதுநகர் பந்தடி மைதானத்தில் சைக்கிளில் ஏறி நூற்றி ஐம்பது மணி நேரம் சைக்கிளை விட்டுக் கீழே இறங்காமல் தொடர்ந்து சவாரி செய்து காண்பிப்பார்...!' இதற்கு மேல் என் மூளைக்குக் கலக்கத்தை உண்டாக்கக் கூடிய செய்தி வேறு என்ன வேண்டும்!

கலக்கம் அடைந்தால் காரியம் கெட்டுவிடும் என்று தோன்றியது. தைரியமாகவும் திடமாகவும் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டேன். வருகிற ஞாயிற்றுக்கிழமை யல்லவா பிளுங்கு நூர்முகம்மது சைக்கிள் சவாரி ஆரம்பிக்கப் போவதாகத் துண்டுப் பிரசுரத்தில் கண்டிருந்தது! நான் வருகிற வெள்ளிக் கிழமை யன்றே அதே மைதானத்தில் இருநூறு மணி நேரம் விடாது சைக்கிள் சவாரி செய்ய ஆரம்பிக்கப் போவதாக ஒரு துண்டுப் பிரசுரம் போட்டு ஊரில் விநியோகிக்க ஏற்பாடு செய்தேன். இதுதானே நான் செய்ய வேண்டிய சரியான முடிவு!

முடிவு என்னவோ சரிதான். ஆனால் அதைப் பற்றி நான் சிந்திக்க வேண்டியவை அசாத்தியமாயிருந்தது. நான் இருநூறு மணி நேரம் சைக்கிள் சவாரி செய்யப் போவதாகத் துண்டுப் பிரசுரம் போட்டு ஊரில் விநியோகித்தது என் மனைவிக்குப் பெருமையாக இருந்தாலும் அவளுக்குச் சிறிது திகிலாகவும் குழப்பமாகவும் கூட இருந்தது. ஏன் இருக்காது! சைக்கிளில் ஏறுவது எப்படி என்று கூடத் தெரியாத ஒருவன் இருநூறு மணி நேரம் விடாமல் சைக்கிள் சவாரி செய்யப் போகிறேன் என்று துண்டுப் பிரசுரம் போட்டு விநியோகித்தால்! என் மனைவி அடைந்த அவ்வளவு திகிலும் குழப்பமும் நான் அடைந்து விடவில்லை. ஏனென்றால் இரண்டொரு நாட்களில் சைக்கிள் விடக் கற்றுக்கொண்டு விடலாம் என்ற தைரியம் இருந்தது. சைக்கிள் விடக் கற்றுக் கொள்வது எப்படி என்று சிந்தனை செய்யலானேன். 'சைக்கிள் விடுவது எப்படி!' என்று யாராவது புத்தகம் எழுதி இருக்கிறார்களா என்று ஒவ்வொரு புத்தகசாலைகளிலும் போய்ப் பார்த்தேன். ஒரு புத்தகமும் கிடைக்கவில்லை. நான் சைக்கிள் கற்றுக்கொண்டு இருநூறு மணி நேர சைக்கிள் சவாரியை வெற்றிகரமாக முடித்த பின், 'சைக்கிள் விடுவது எப்படி!' என்று ஒரு புத்தகம் எழுதி உலகத்துக்குள்ள பெருங் குறையை நிவர்த்தி செய்து விடலாம் என்று நினைத்தேன்.

முதன் முதலாக சைக்கிள் விடக் கற்றுக்கொள்கிறவர்கள் ஆரம்பப் பாடமாகக் குழந்தைகள் விடும் மூன்று சக்கர சைக்கிளில் ஏறி விடுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். மூன்று சக்கர சைக்கிளில் ஏறித் தெருவில் விட்டுக்கொண்டு போவதற்கு வெட்கமாகவும் கூச்சமாகவும் இருந்தால் வீட்டுக்குள்ளேயே சவாரி செய்து பழகிக்கொள்ளலாம். வீட்டுக்குள் மூன்று சக்கர சைக்கிள் பழகும்போது மனைவியையும் குழந்தைகளையும் உதவியாக வைத்துக் கொள்ளலாம். மூன்று சக்கர சைக்கிள் விட்டுப் பழகிய ஒரு சிறுவனின் உதவி இருந்தால் இன்னும் மகா சிரேஷ்டம்.



இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுதான். அதாவது பெரியவர்களாகிய நீங்கள் ஏறி உட்காரும்போது அந்தச் சிறு மூன்று



சக்கர வண்டி ஒடிந்து நொறுங்கி விடாத வண்ணம் வலுவும் அழுத்தமும் கொண்ட வண்டியாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்; மூன்று சக்கர சைக்கிளில் ஏறி உட்கார்ந்த பின் உந்து கட்டையைக் காலால் அழுத்திச் சுற்றக் கூடிய அளவுக்கு நம்முடைய நீண்ட கால்கள் இசைவாக இருக்காது. அதற்காகப் பயிற்சியை நிறுத்த வேண்டாம். ஆசனத்தில் உட்கார்ந்து கைப்பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தரையில் காலை உந்தி உந்தித் தள்ளிச் சவாரி செய்து பழகலாம்.

இதெல்லாம் சைக்கிள் விடக் கற்றுக் கொள்ளும் மற்றவர்களுக்கு நான் சொல்லும் பாடமே தவிர ஆரம்ப அப்பியாசமாக நான் மூன்று சக்கர சைக்கிள் விடக் கற்றுக்கொள்ளவில்லை. காரணம் எனக்கு அதற்கு அவகாச மில்லாததுதான். நான் பிரகாரத்தில் குறிப்பிட்டிருந்தபடி வெள்ளிக்கிழமைக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் இருந்தன. அதற்குள் நான் சைக்கிள் விடக் கற்றுக் கொண்டாக வேண்டும். இந்த மூன்று நாட்களுக்குள் எனக்குச் சைக்கிள் விடக் கற்றுக் கொடுக்கும் ஒரு சரியான ஆசாமியைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

என் சகோதரியின் மகன் நெடு நாட்களாகச் சைக்கிள் விடுகிறான். நல்ல அனுபவசாலி. ஒரு தடவை ஒரு வைக்கோல் வண்டி மீது சைக்கிளை விட்டு மோதி எவ்வித காயமும் இல்லாது தப்பி இருக்கிறான். ஒரு தடவை ஒரு கிழவி மீது சைக்கிளை ஏற்றி அவளைப் படுகாயப்படுத்திய காரணத்துக்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனவனை நான் ஜாமீன் கொடுத்து அழைத்து வந்தேன். இன்னும் எவ்வளவோ தடவை இரவு வேளைகளில் விளக்கில்லாமல் சாமர்த்தியமாகச் சைக்கிள் விட்டுக்கொண்டு போனதற்காக அபராதம் செலுத்தி இருக்கிறான். இவ்வளவு பெரிய அனுபவசாலியை நான் வாத்தியாராக அமர்த்திக் கொண்டு சைக்கிள் கற்றுக் கொண்டதில்தான் பிசகென்ன !

கற்றுக் கொள்வதற்காகச் சைக்கிள் இரவல் வாங்கி அலைந்தேன். நண்பன் குப்புசாமியின் சைக்கிள்தான் ஒழுங்கானதாகவும் உருப்படியானதாகவும் இருந்தது. அதை வாங்கிக் கொண்டு வந்தேன். ஊர் ஜன சந்தடி அடங்கியபின் நடு ராத்திரியில் என் சைக்கிள் அப்பியாசம் ஆரம்பமாகியது. சைக்கிள் விடக் கற்றுக் கொடுப்பதில் என் மருமான் நல்ல வாத்தியார் என்பது நான் சிறிது வளைந்தால், 'அடாடா, வளையக் கூடாது மாமா !' என்று அடிக்கடி சொல்லி என் இடுப்பில் விட்ட குத்துக்களிலிருந்து நன்கு தெரிந்தது. அவன் எத்தனை குத்துக்கள் விட்டால் என்ன! என் இடுப்பு அடிக்கடி வளைந்து கொண்டுதான் இருந்தது. அடிக்கடி கீழே விழுந்தேன். இரவு பன்னிரண்டு மணியிலிருந்து காலை ஐந்து மணி வரையில் சைக்கிள் விடுவதில் நான் அடைந்த முன்னேற்றம் என்னவென்றால் அவன் மாத்திரம் சைக்கிளையும் என்னையும் விடாமல் பிடித்துக் கொண்டிருந்தால் நான் கீழே விழாமல் ஒரு விதமாக சைக்கிளை விட்டுக்கொண்டு போவேன். ஒரு இரவுக்குள் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டது எனக்குப் பெரிதாகத்தான் பட்டது.

ஆனால் என் மருமான் அலுப்படைந்தவனாக, "மாமா! நீங்கள் நாட்டியம் ஆடக் கத்துக் கொண்டால் நன்றாய் வரும். சைக்கிள் விட லாயக்கில்லை" என்றான். அவனுடைய தீர்மானம் சரியானதாக இருக்கலாம். ஆனால் நான் இருநூறு மணி நேரம் தொடர்ந்து சைக்கிள் சவாரி செய்வதாய் ஊரில் விளம்பரம் செய்திருக்கிறேனே தவிர, இருநூறு மணி நேரம் தொடர்ந்து நாட்டியமாடிக் காட்டுவதாகவா விளம்பரம் செய்திருக்கிறேன் ! எப்படியோ அந்தச் சமயம் அலுப்படைந்திருந்த அவனுக்கு உற்சாக மூட்ட வேண்டிய பொறுப்பு என்னுடையதாய் இருந்தது. "சரி ! இந்தத் தடவை நீ என்னை விட்டு விடு. நானாகவே விடுகிறேன், பார்" என்றேன். அவன் என்னைச் சைக்கிளில் உட்கார வைத்து "ஜாக்கிரதை" என்று சொல்லிச் சைக்கிளை உந்தித் தள்ளினான். கொஞ்சநேரம் நானே தனியாகச் சைக்கிள் விட்டுக் கொண்டு போவது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. அடுத்த கணம் ஒரு மோதல் சப்தம் கேட்டது. என் முழங்காலில் பட்ட நல்ல அடியை நான் உணர்ந்தபோதுதான் சைக்கிளைத் தெருக்கோடி வாய்க்கால் மதிலில் மோத விட்டிருக்கிறேன், என்பதை உணர்ந்தேன். சைக்கிளின் முன் சக்கரம் வளைந்து நெளிந்திருந்தது. அதற்கு மேல் அப்பியாசம் செய்ய நானும் லாயக்கில்லை, சைக்கிளும் லாயக்கில்லை என்று தோன்றியதால் அத்துடன் அன்றைய அப்பியாசத்தை நிறுத்திக் கொண்டேன்.

முழங்காலில் பலமாகப்பட்ட அடியை என் மனைவியிடம் நான் காட்டிக் கொள்ளவில்லை. அந்த அடியை லட்சியம் செய்யாமல் அன்று இரவும் சைக்கிள் விடும் அப்பியாசத்தைத் தொடங்கி விடத் தீர்மானித்தேன். குப்புசாமியின் சைக்கிள் உபயோகத்துக்கு லாயக்கில்லை என்ற நிலைமை ஏற்பட்டவுடன் வேறு யாரிடம் சைக்கிள் இரவல்



"பரிசுப் போட்டி"

கே. எஸ். ரங்காச்சாரி

என்ன போட்டி என்ன போட்டி
எங்கே போனாலும் பரிசுப் போட்டி
சின்னப் பையன் பையில் கூட
மண்ணாய்ப் போன பரிசுப் போட்டி

ஆறு காசுக்கு வெத்தலை சீவல்
அதை மடிக்கப் பரிசுக் கூப்பன்
மோரு விற்கிற கிழவி யுடைய
முந்தானையில் பரிசுக் கூப்பன்

ஒரு கூப்பன் போட்டால் ரூபாய்
ஒன்னே ஒன்னு என்கிறான்
தாறு மாறாய்ப் போடுவோர்க்கு
தருமக் கூப்பன் கொடுக்கிறான்

ஒன்னு ரெண்டு கண்டு பிடித்து
ரெண்டு ஒன்னு போடணும்
கண்ணை நன்றாய் மூடிக் கொண்டு
காசைக் குலுக்கிப் போடணும்

பம்பர் போட்டி என்று சொல்லி
ஜம்பம் மிகுந்து வைக்கிறான்
நம்பிப் போட்ட ஜனங்களுக்கு
நாமத் தைத்தான் போடுறான்

முடிவு பேப்பரில் வந்ததுமே
முக மகிழ்ந்து பார்க்கிறோம்
கூடிக் குறைஞ்சு ஆறு தப்பு
அய்யோ என்று அலறுறோம்

முத்துப் பேட்டை முனுசாமிக்கும்
செத்துப் போன செட்டியார்க்கும்
பத்தாயிரம் பரிசுத் தொகை
பகிர்ந் தளித்தோம் என்கிறான்

சோத்தைக் குறைத்துச் சேர்த்து வைத்த
சேர்த்த பணம் போச்சுதே!
எத்தனை போட்டி என்னென்ன போட்டி
எப்போ இவை தொலையுமோ!

வாங்கலாம் என்று யோசிக்கலானேன். அடுத்த படியாக ராமமூர்த்தியின் சைக்கிள்தான் உருப்படியானதாகப் பட்டது. அதை எப்படி இரவல் வாங்கிக் கொண்டு வரலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது யாரோ என்னைச் சந்திக்க வந்திருப்பதாக என் மனைவி வந்து சொன்னாள். அந்த மனிதரை உள்ளே வர அனுமதித்தேன்.

வாட்ட சாட்டமான உருவம்; முறுக்கி விட்ட மீசை; பம்மென்று சிலுப்பிக் கொண்டிருக்கும் கிராப்புத்தலை; வர்ணக் கோடிட்ட பனியன். கருப்புக் கோடிட்ட நல்ல பட்டையான தோல் பெல்டு; இத்தகைய உருவ, உடை அலங்காரத்துடன் ஒரு மனிதர் காட்சியளித்தார். அவரைப் பார்த்தவுடனேயே யாரென்று எளிதாக நான் தெரிந்து கொள்ள முடிந்தது. ஞாயிற்றுக்கிழமை அன்று பந்தடி மைதானத்தில் நூற்றைம்பது மணி நேரம் தொடர்ந்து சைக்கிள் சவாரி செய்து காட்டுவதாய்த் துண்டுப் பிரசுரம் போட்டிருந்த பிணங்கு நூர்முகம்மது என்பவர்தான் அந்த மனிதர் என்று தெரிந்தது. அவர் வந்தவுடனேயே ஒரு நமஸ்காரம் செய்து விட்டு எனக்கு எதிரில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். என் மனத்தில் அந்த ஆசாமியைப் பார்த்ததும் பீதி எழுந்தாலும் என்னை ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு "நீங்கள் யார்!" என்றேன்.

"நான்தான் நூர் முகம்மது. நோட்டீசு பார்த்திருப்பீர்களே! உங்கள் நோட்டீசையும் நான் பார்த்தேன்..." என்றார் அலட்சியமாக.

"சரிதான் இப்போ இங்கே எதற்கு வந்திருக்கீங்க!" என்றேன் நானும் அமத்தலாக. அந்த மனிதர் சட்டென்று எனக்குப் பதில் சொல்லவில்லை. அவருடைய பார்வை யெல்லாம் எதிரில் சுவரோரமாக வைக்கப்பட்டிருந்த சைக்கிள் மீது சென்றிருந்தது. புத்தம் புதிதாக இருக்கும் ஒரு சைக்கிளின் முன் சக்கரம் ஒடிந்து நெளிந்திருந்தால் யாருக்கும் சிறிது சம்சயத்தைத்தானே உண்டாக்கும்! அந்த சைக்கிளைப் பார்த்ததும் அந்த மனிதருக்கு ஏற்பட்ட மனக் குழப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ள நினைத்தேன். "என்ன அந்த சைக்கிளை அப்படிப் பார்க்கிறீங்க? முன் சக்கரம் இவ்வளவு மோசமாக உடைந்து நொறுங்கி இருக்கே, அப்படி என்ன நடந்திருக்கும் என்று தானே! முரட்டுத்தனமான காரியத்திலே யெல்லாம் இறங்கினால் இப்படியாகாமல் என்ன செய்யும்!" என்று சொல்லி அவர் முகத்தைப் பார்த்தேன். அந்த மனிதரும் வியப்போடு என் முகத்தைப் பார்த்தார். அந்த மனிதர் திகைப்படைந்து போயிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்பினேன். "நேற்று ராத்திரி இருபது தடவை சைக்கிள் சவாரி செய்து கொண்டே இந்த வீட்டுமாடியில் ஏறி இறங்கி இருக்கிறேன். கடைசித் தடவை மாடியிலிருந்து இறங்கும் போது தான் முன் சக்கரம் சுவரில் உராய்ந்ததால் சேதம் ஏற்பட்டது. இப்படித்தான் ஏதாவது முரட்டுக் காரியங்கள் செய்து மாதம் இரண்டு மூன்று சைக்கிள்களை உடைக்கிறேன்" என்றேன் அலட்சியமாக.

என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு நூர் முகம்மது திகைப்புத் தாங்காமல் திரு திருவென்று விழித்தார்.

"அதிருக்கட்டும்; உங்களுக்கு எத்தனை நாளாக சைக்கிள் விட்டுப் பழக்கம்!" என்றேன்.

"எட்டு வருசமாய்..."

"அவ்வளவு தானே! எனக்கு மூன்று வயதிலிருந்து சைக்கிள் விட்டுப் பழக்கம். அதாவது நாற்பது வருஷங்களாய்...உங்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் விடத் தெரியுமா...! பழகி இருக்கிறீர்களா!" என்றேன்.

"இல்லை. அது குழந்தைகளல்லவா விடும்...!" என்றார் நூர் முகம்மது.

"குழந்தைகள் செய்கிற காரியத்தையெல்லாம் சாதாரணமாய் நினைக்க முடியுமா! அதையெல்லாம் நம்மால் செய்யமுடியுமா என்று யோசித்தால் தான் தெரியும். ஹூம்! மூன்று சக்கர சைக்கிள் விட்டுப் பழகாத ஒருவர் இரண்டு சக்கர சைக்கிளைக் கையால் தொடக்கூட யோக்கியதை இல்லை" என்றேன் அழுத்தமாக.


என்னுடைய பேச்சில் உண்மையாகவே அந்த மனிதருக்கு நாடி தளர்ந்து விட்டதை நான் அவர் முகக் குறியிலிருந்து உணர்ந்தேன். அதற்கு மேல் கேட்க வேண்டுமா! "போகட்டும், இந்த சைக்கிளென்ற வாகனத்தை எந்தக் காலத்தில் எந்த நாட்டில், யார், எதற்காக ஏன் கண்டு



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புதிது!
PROTEX
All-Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்



எந்த ஒளியிலும் ஃப்ளாஷ் இருக்கென்ருல் உங்களுக்கு படம் நிச்சயம்!







இன்டோர் அல்லது அவுட்டோர் எதானாலும் சரி, இந்த "கோடக்" காமரா உபயோகித்து அழகான ஸ்னாப்ஸ் எடுக்கமுடிகிறது. ஒளி மங்கலாகயிருக்கலாம். ஒரு "கோடக்" ஃப்ளாஷ் ஹோல்டர் உங்கள் படத்திற்கு பிரகாசம் அளித்து விடும். உங்கள் காமராவில் இதைப் பொருத்தி, பட்டனை அமர்த்தி விடுங்கள். அவ்வளவுதான்.

சிரமகரமான டைம் எக்ஸ்போஷர்களின் அவசியமில்லை. இந்த விலை குறைந்த ஃப்ளாஷ் பல்புகளுக்கு வேண்டும் பணம், அதனால் நீங்கள் வீண்போகாமல் சேமிக்கும் பிலிம்களிலிருந்தே கிடைத்துவிடும்.

இன்றே உங்கள் கோடக் வியாபாரியை பாருங்கள்.

"கோடக்" ட்யூ ஆப்லெக்ஸ் காமரா உபயோகிப்பதற்கு மிக எளிது. மிக பெரிதான வ்யூபைண்டர் தவறுதலேற்படாமல் படம் பிடிப்பதற்கு உபகரிக்கிறது. சிக்கனமானதும்கூட—ஒவ்வொரு ரோல் பிலிமிலிருந்தும் உங்களுக்கு 12 படங்கள் கிடைக்கும் இந்த காமராவை உபயோகிப்பதில் நீங்கள் பெருமை அடைவீர்கள். ரூ. 59/-

'கோடக்' DX—ஃப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-

அசல் லதர் கேஸ் ரூ. 11/-

ப்ரௌனி ரெப்லெக்ஸ் காமரா ப்ரகாசமான பூர்ணமான வியூபைண்டர் வழி குறிபாருங்கள்—பட்டனை அமர்த்திவிடுங்கள். அவ்வளவேதான். 12 ஆல்பம் சைஸ் ஸ்னாப்ஸ் ஒவ்வொரு ரோல் பிலிமுக்கும் கிடைக்கும். பலம்பொருந்திய கேஸுடன் வருகிறது ரூ. 45/-

'கோடக்' டைப் B ஃப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-

ஸிக்ஸ்—20 "ப்ரௌனி" காமரா மாடல் E குறைந்த விலையில் அற்புதமான பொருள்! அதிகப்படியாகப் பொருத்தப்பட்டிருக்கும் லென்ஸ் தெளிவு, மெய்யெனத் தோற்றமளிக்கும் படங்களை அளிக்கிறது. செல்ப்—கன்டைன்ட் கலர் பில்டர் உபயோகித்து, அழகான ஆகாயத்தையும் மேகங்களையும் சேர்த்து படங்கள் பிடிக்கலாம் ரூ. 34/-

"கோடக்" டைப் B ஃப்ளாஷ் ஹோல்டர் ரூ. 22/12/-

லதர் கேஸ் ரூ. 8/-   கேன்வாஸ் கேஸ் ரூ. 3/-

மேல்கொடுத்திருக்கும் விலைகளில் சேல்ஸ் டாக்ஸ் சேராது.

இன்னும் பல! கோடக்கிடம் எந்த போட்டோக்காரருக்கும் தகுதியான காமராக்கள் இருக்கிறது. ரூ. 17/8/-லிருந்து, விதவிதமான சைஸ், தரம் விலைகளில். இன்றே உங்கள் கோடக் வியாபாரியிடம் சென்று ஒன்றை பெறுங்கள்!

கோடக் லிமிடெட்
(இங்லேண்டில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்.

பிடித்தார் என்பதாவது உங்களுக்குத் தெரியுமா !'' என்று கேட்டேன்.

''தெரியாதுங்க...'' என்றார்.

''இதெல்லாம் தெரியாமல் சைக்கிள் சாம்பியன் என்று சொல்லிக் கொள்ள உமக்கு எப்படித் துணிச்சல் வந்தது! நூற்றைம்பது மணி நேரம் விடாது சைக்கிள் சவாரி செய்கிறேன் என்று எப்படி விளம்பரம் செய்யலாம்...!'' என்றேன்.

''விடாமல் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் சைக்கிள் விடப் பழகி இருக்கேனுங்க. பல ஊரிலே சைக்கிள் விட்டுக் காண்பித்திருக்கேனுங்க. இதிலே நல்ல வருமானம் கிடைக்கிறதினாலே இதுவே தொழிலா வைச்சுக் கிட்டேன். இந்த ஊருக்கும் வந்தேன்...'' என்றார் நார்.

''இந்த ஊரில் நான் ஒருவன் இருக்கிறேன்னு உமக்குத் தெரியாது போலிருக்கிறது...''

''தெரியாது. உங்க 'பிட்' நோட்டீசைப் பார்த்தப்புறம் தான் தெரிந்து கொண்டேன். இந்த விஷயத்தில் நாம் ஒரு சமாதானமான முடிவுக்கு வந்தால் நல்லாயிருக்காதா ! அதற்காகத்தான் உங்களைக் காண வந்தேன்...''

''என்ன சமாதானமான முடிவு...!''

''நீங்க தயவு செய்து எனக்காக வெள்ளிக்கிழமையன்று சைக்கிள் சவாரி செய்யப் போகிறதை நிறுத்திக்கணும்...''

''ஏன் நிறுத்திக்கணும்! அதனாலே எனக்குக் காலணாவுக்குப் புண்ணியம் உண்டா !'' என்றேன்.

''காசுதானா பிரதானம்...! எனக்கு வசூலாகிற பணத்திலே பாதி தருகிறேன். நீங்க ஏன் இரு நூறு மணி நேரம் சைக்கிள் விட்டு உடம்பை வாட்டிக்கணும்...'' என்றார் நார் முகம்மது என்னிடம் பெருத்த மரியாதையும் அபிமானமும் கொண்டு விட்டவர்போல்.

''காசை நான் பெரிதாகக் கருதவில்லை. நான் ஒரு பெரிய சைக்கிள் சாம்பியன். என் கௌரவம் என்ன ஆகிறது......!'' என்று கேட்டேன் விறைப்புத் தளராமல்.

''உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றுகிற விஷயத்திலே என்னை என்ன செய்யச் சொல்கிறீர்களோ, அதைச் செய்ய நான் தயாராய் இருக்கிறேன்'' என்றார் நார் முகம்மது.

நான் சிறிது நேரம் ஏதோ சிந்திக்கிறவன் போல் இருந்து விட்டு, ''நீ இப்பொழுதே மறுபடியும் ஒரு துண்டுப் பிரசுரம் போட வேண்டும். பிரபல சைக்கிள் சாம்பியனாகிய என்னுடைய சிடன் நீ என்று போட்டுக் கொள்ள வேண்டும். அது மட்டும் போதும். நீ மைதானத்தில் சைக்கிள் விட ஆரம்பிக்கும்போது நான்தான் உனக்குக் குருநாதர் என்று எனக்கு மாலை போட்டு நமஸ்காரம் செய்துவிட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும். அதே போல உன்னுடைய சைக்கிள் சவாரியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டவுடனே எனக்கொரு மாலை போட்டு வசூலான பணத்தையும் கொடுத்துக் கௌரவிக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் என் கௌரவம் நிலைக்கும். வேறு வழியில்லை. இதற்கு நீ சம்மதிக்காவிட்டால் நான் திட்டமிட்டுள்ளபடி வெள்ளிக்கிழமை சைக்கிள் சவாரியை ஆரம்பிக்கத்தான் நேரும்.''

''சரிங்க! உங்க வார்த்தைக்கு நான் கட்டுப்படுறேனுங்க'' என்றார் நார்.

அவர் என்னிடம் சந்தோஷமாக விடை பெற்றுக் கொண்டார். எனக்கேற்பட்ட மன நிம்மதியில் முழங்காலில் ஏற்பட்ட காயத்தின் வலிகூடப் போய் விட்டது போல் தோன்றியது. உலகத்தில் ஒரு பிரமாதமான காரியத்தைச் சாதித்து விட்டோமென்ற மன நிம்மதியோடும் சந்தோஷத்தோடும் நான் இருக்கும்போது என் மனைவி வந்தாள். ''உங்களுக்கு ஏன் இந்த கிரகசாரம்! உங்களால் இதெல்லாம் முடியுமா! இனிமேல் நீங்க சைக்கிளையே தொட வேண்டாம். ஆமாம்! சொல்லி விட்டேன்.........'' என்றாள்.

''இனிமேல் நான் சைக்கிளையே தொடல்லே. கோபப்படாதே. நான் சைக்கிள் சாம்பியனாக ஆகணுங்கிறதுக் காகத்தான் சைக்கிளைத் தொட்டேன். சைக்கிள் சாம்பியன் ஆகிவிட்டேன். இனிமேல் ஏன் நான் அதைத் தொடப் போகிறேன்!'' என்று நான் சாவதானமாகப் பதிலளித்தேன்.

பலகணிக் காட்சிகள்

அறிஞர்களையும் மேதைகளையும் பற்றி அறிந்து கொள்ள யாருக்குமே ஆவல் இருப்பது இயல்பு.

அரசியல், சங்கீதம், இலக்கியம், நடனம், கதா காலட்சேபம், சமூக சேவை முதலிய பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய நம் நாட்டு அறிஞர்களைப் பற்றிய ரஸமான கட்டுரைகள் இந்நூலில் காணப்படுகின்றன.

மகாகனம் சாஸ்திரியார், காந்திஜி, ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், பிரதம மந்திரி நேருஜி, ராஜாஜி, கே. எஸ். வேங்கடரமணி, சத்தியமூர்த்தி, டி. கே. சி. முதலிய பெரியோர்களின் தனிப் பண்புகளையும் விசேஷ மேதைகளையும் பற்றி அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளைக் கொண்டு அழகாகச் சித்திரிக்கிறார் நூலாசிரியர்.

இம்மாதிரி பெரியார்களைப் பற்றிய குண வர்ணனைச் சித்திரங்கள் எழுதுவதில் மேனாட்டு ஆசிரியர்கள் மிக்க வெற்றி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் கண்ட வெற்றியின் சிகரத்தை இந்த நூலாசிரியரும் எட்டிப் பிடித்திருக்கிறார். இலக்கியத் துறையில் இத்தகைய புது முயற்சிகளுக்குத் தமிழ் அன்பர்கள் விசேஷ ஆதரவு காட்டி ஊக்கமளிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

எழுதியவர்: கி. சந்திரசேகரன்: பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4: விலை: ரூ. 1-8-0.

கொங்கு நாடும் சமணமும்

கொங்கு நாட்டில் எங்கெல்லாம் சமணர்கள் இருந்தார்கள், அவர்கள் வழிபட்ட அருகக் கடவுளின் ஆலயங்கள் எங்கெல்லாம் இருந்தன, அவற்றின் தற்கால நிலையென்ன ஆகிய பல தகவல்களை ஆராய்ச்சி நோக்கோடு இந் நூலாசிரியர் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். தமிழக சரித்திரத்தில் ஆர்வ மிக்கவர்களுக்கு இந் நூல் பெரிதும் பயன்படும். இந் நூலின் கடைசிப் பகுதியில் ஆசிரியர் ''மற்றச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் பண்டைக் கால முதற்கொண்டு நாட்டில் விளங்கி வந்திருந்தாலும் அவைகள் கோயில்களுடைய எண்ணிக்கையை மிகுதிப் படுத்தினவே யன்றி, இலக்கியப் பண்பாட்டைச் சமணத்தைப் போல அத்தனை மிகுதியாகச் செய்யவில்லை'' என்று ஒரு போடு போட்டிருக்கிறார். இந்தக் கூற்றைக் குறித்துக் கருத்து வேற்றுமை இருத்தல் இயல்பேயாகும்.

ஆசிரியர்: கோவைக்கிழார்; பிரசுரம்: கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட், கோயமுத்தூர்.

மாங்காய் மாலை



ராமு

சமையற் கதவை இழுத்துத் தாளிட்டுக் கொண்டு பால் தம்ளருடன் கூடத்துக்கு வந்தாள் ஜானகி. குழந்தை பாலு தரையில் குப்புறப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். பால் தம்ளரை மேஜைமேல் வைத்தாள். குழந்தையை எடுத்து மெத்தையில் விட்டாள்.

அவள் கணவன் சுந்தரம் மும்முரமாக ஆபீஸ் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

ஜானகி மேஜைக்குப் பக்கத்தில் வந்து சாய்ந்த வண்ணம், "என்ன! உங்களைத்தானே!" என்றாள் அவனைப் பார்த்தவாறு.

"…………"

"என்ன! நான் கூப்பிடுவது காதில் விழவில்லை!"

"…………"

அவன் எழுதிக் கொண்டேயிருந்தான்.

அவள் 'விசுக்'கென்று எழுந்து கட்டிலில் போய்த் 'தொப்' பென்று விழுந்தாள்.

அந்த சத்தத்தைக் கேட்டுக் கவிழ்ந்திருந்த தலையை மெல்ல நிமிர்த்தினான் அவன்.

"ஜானகி! கூப்பிட்டாயா, என்ன!" என்றான்.

அப்பேச்சு அவளுக்குக் கோபத்தை மூட்டியது.

"என்ன, நான் பாட்டுக்கு அரை நாழிகையாகக் கூப்பிடுகிறேன். காதில் விழாததுபோல் எழுதிக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்! உங்கள் ஆபீஸ் வேலையை வீட்டிலுமா எடுத்து வந்து செய்ய வேண்டும்!" என்றாள்.

"என்ன செய்வது ஜானகி! நாளைக்குக் கணக்கெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்கப் போகிறார்களாம். அதனால் இன்றுவரை கணக்கை எழுதிவிட வேண்டும் என்று மானேஜர் உத்தரவிட்டிருக்கிறார்" என்றான் சுந்தரம்.

"உங்கள் மானேஜருக்கு என்ன! கொடுக்கிற சுண்டைக்காய் காசுக்கு இரட்டிப்பு வேலை வாங்குகிறார்" என்று அவள் மானேஜரைச் சபித்தாள்.

"ஏன் ஜானகி! எதற்காக அவரைக் கோபித்துக் கொள்கிறாய்! அவரவர்கள் கஷ்டம் அவரவர்களுக்கு" என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

இருவரும் மொட்டை மாடிக்குச் சென்றனர். பால்போல் நிலா பவனி வந்து கொண்டிருந்தது. கைப்பிடிச் சுவரைப் பிடித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் சுந்தரம். அவன் பக்கத்தில் வந்து நின்றாள் ஜானகி. அவன் வான வெளியை நோக்கியபடி இருந்தான்.

"என்னை இத்தனை நாளாக ஏமாற்றிக் கொண்டுதானே வருகிறீர்கள்" என்ற பீடிகையோடு ஆரம்பித்தாள் அவள்.

"நான் உன்னை எதற்காக எப்பொழுது ஏமாற்றினேன்! விவரமாகச் சொன்னால்தானே எனக்குப் புரியும்!"

"நானும் இரண்டு வருடமா ஆசையாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். நீங்கள் என்னடாவென்றால் 'பார்க்கலாம் பார்க்கலாம்' என்று தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறீர்கள்" என்றாள் ஜானகி வருத்தப்படும் தோரணையால்.

"நீ என்ன கேட்டாய்!"

"அதுதான் …… வந்து …… வந்து……மாங்காய் மாலை……" என்று அவள் சிரித்தாள்.

"ஓ! அதற்குத்தானா இவ்வளவு பெரிய பீடிகை! வாங்கி விட்டால் போகிறது. உனக்கில்லாமல் வேறு யாருக்குச் செய்து போடப் போகிறேன், ஜானகி!" என்றான் அவன் செல்லமாக.

"உங்கள் போனஸ் பணம் என்று வரும்!"

"உம்……நாளைக்கு!"

"அப்போ, நாளை சாயந்திரம் வரும்போது நீங்களே பார்த்து உங்களுக்குப் பிடித்ததாக ஒன்று வாங்கி வந்து விடுங்களேன்" என்றாள்.

அதற்குள் குழந்தை பாலு எழுந்து அழ ஆரம்பித்து விட்டான். மாடியிலிருந்து இருவரும் அவசரமாகக் கீழே இறங்கி வந்தனர்.

**　　**　　**

சுந்தரத்துக்கு மணமாகிச் சரியாக இரண்டு வருடங்கள் கூடப் பூர்த்தியாகவில்லை. அவன் உள்ளத்திலே எவ்வளவோ ஆசைகள் கொட்டிக் கிடந்தன. தன் மனைவி ஜானகிக்கு நகையும்நட்டுமாகச் செய்து போட்டு அழகு பார்க்கவேண்டுமென்று அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. ஆனால் அதற்குத் தகுந்த சம்பாத்தியம் இல்லாத அவன் நகைக்கும், நட்டுக்கும் எங்கே போவான்! கிடைக்கும் சம்பளம் பத்து தேதிக்கே காணாத அவன் மற்ற நாட்கள் கடன் வாங்கி அல்லவோ செலவு செய்து வந்தான்! இந் நிலையில் குடும்பம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிக் கொண்டே வந்தது. அவன் ஒருகுழந்தைக்குத் தந்தையானான். தாயைக் காக்கும் புதியதொரு பொறுப்பும் அவனைச் சேர்ந்து கொண்டது. கஷ்டப்பட்டுத்தான் குடும்பம் நடந்து வந்தது.

ஜானகி உலகம் அறியாதவள். பக்கத்து, எதிர் வீட்டுப் பெண்களெல்லாம் நிறைய நகைகளை அணிந்து கொண்டு உல்லாசமாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டிருக்கிறாள். எல்லாவற்றையும் விட அவளுக்குப் பக்கத்து வீட்டுப் பத்மா கழுத்தில் அணிந்திருக்கும் மாங்காய் மாலையைக் கண்டதும் அதிலேயே தன் மனத்தைப் பறி கொடுத்துவிட்டாள். தன் கழுத்துக்கும் ஒரு மாங்காய்மாலை வாங்கிப்

போட்டுக் கொண்டால் எவ்வளவு அழகாய் இருக்கும் என்று எண்ணினாள் ஜானகி.

கணவனிடம் தன் ஆசையை மெல்ல வெளியிட்டாள். அவனும் 'போனஸ்' பணம் வந்ததும் வாங்கித் தருவதாக வாக்களித்தான். அவள் உள்ளமும் குளிர்ந்தது. போனஸ் பணம் வருவதற்கு இரண்டு தினங்களே இருந்தன. ஆனால் போதாத வேளை! திடீரென்று அவன் தாயார் படுத்த படுக்கையாக விழுந்து விட்டாள். டாக்டருக்கும், மருந்துக்குமே அந்த முந்நூறு ரூபாய் போதவில்லை. மேலும் கொஞ்சம் கடன் வாங்கித் தாய்க்குச் செய்ய வேண்டியதைச் செய்தான். அவள் பிழைத்தெழுந்ததே புனர் ஜென்மமாகப் போய் விட்டது.

ஜானகியின் ஆசைத் தீ அணைந்தது.

இந்த வருடம் போனஸ் பணம் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே அவள் அவனை நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். அவனும் 'ஆகட்டும்' என்று தலையசைத்து வந்தான்.

•• •• ••

மணி ஆறடித்து ஓய்ந்தது. உள்ளுக்கும் வாசலுக்கும் குட்டி போட்ட பூனைபோல் நடந்து கொண்டிருந்தாள் ஜானகி. அவள் கண்கள் சுந்தரம் வழக்கமாக வரும் திக்கையே நோக்கியிருந்தன. 'மாங்காய் மாலை வாங்கி வருவார்' என்று எண்ணிச் சந்தோஷப்பட்டாள் அவள்.

மணி ஏழும் அடித்து விட்டது.

அவன் வரக்காணோம். ஏதோ அரவம் கேட்டு வாசலுக்கு வந்தாள் அவள். கோவிலுக்குச் சென்றிருந்த அவள் மாமியார் வாசற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

ஏமாற்றத்தால் அவள் முகம் சுருங்கியது.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. அவள் கணவன் சுந்தரம் வந்து விட்டான். மிகவும் களைப்போடு வந்த அவன் 'அப்பாடி' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.



"மாங்காய் மாலை வாங்கி வந்தீர்களா!" என்று பொங்கும் ஆவலை அடக்க முடியாதபடி கேட்டு, அவள் அவனுடைய பதிலை எதிர்பார்த்தாள்.

"இல்லை, ஜானகி! ஆபீஸிலிருந்து கிளம்பும் பொழுதே நாழியாகிவிட்டது. ஆகையால் நேராக வந்து விட்டேன்" என்றான் அவன்.

ஏமாற்றம் அவள் நெஞ்சை அள்ளிக் கொண்டு சென்றது. இதயம் சற்றுச் சுருங்கி விரிந்தது. மனத்திலே இருந்த மகிழ்ச்சி எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டது.

சாப்பிட்டுவிட்டுத் தன் அறையில் வந்து உட்கார்ந்துகொண்டு செய்திப் பத்திரிகையைப் படிப்பதில் ஈடுபட்டான் சுந்தரம். அந்தச் சமயம் அவன் தாயார் அங்கு வந்து நின்றாள்.

"என்னம்மா சமாசாரம்!...உட்காருங்களேன்" என்றான் அவன்.

"ஒன்றுமில்லேடா ... வந்து ஒரு முந்நூறு ரூபாய் இருந்தால் கொடேன். அவசரமாக வேணும்" என்றாள் அவள்.

அவன் கண்களை விரித்தபடி, "எதற்கம்மா இப்பொழுது முந்நூறு ரூபாய்!" என்றான்.

"உங்கப்பா இறந்து போவதற்கு முன்பு நம்ம ஊர் மாயாண்டியிடம் கடனாக முந்நூறு ரூபாய் வாங்கியிருந்தார். திருப்பிக் கொடுக்கவேயில்லை. நான் போன மாதம் ஊருக்குப் போயிருந்தபொழுது நச்சரித்து விட்டான் அவன். ஒரு மாதத்துக்குள் எப்படியாவது கொடுத்து விடுவதாக வாக்களித்து விட்டு வந்தேன்" என்றாள்.

அவன் யோசிக்கவில்லை. உடனே எழுந்தான். போனஸ் பணம் முந்நூறு ரூபாயைச் சட்டைப் பையிலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"ஏண்டா சுந்தரம்! இரவு வண்டிக்கே ஊருக்குப் போகலாம் என்று இருக்கேன். நீ என்ன சொல்கிறாய்!" என்றாள் அவன் தாயார்.

"உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள் அம்மா" என்று சொல்லிய வண்ணம் சட்டையை மாட்டிக் கொண்டு அவனை வண்டி ஏற்ற ஸ்டேஷனுக்குக் கிளம்பினான் அவன்.

இவ்வளவு நேரம் அங்கே நடந்த சம்பாஷணைகளை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டுமிருந்த ஜானகிக்குத் துக்கம் பீறிக் கொண்டு வந்தது. அவள் கட்டியிருந்த மனக்கோட்டை மடமடவென்று சரிந்து தரை மட்டமாகி விட்டது.

குழந்தை ஆசையுடன் கேட்கும் பொருளை வாங்கித் தராமல் இருந்தால் அதன் மனம் என்ன வேதனைப் படும்! அதே நிலையில்தான் இருந்தாள் ஜானகியும். அவள் மனம் மட்டற்ற வேதனையைச் சுமந்து கொண்டிருந்தது. மாமியாரின் மீது அவளுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டது.

இரண்டு நாட்களாக அவள் கணவனுடன் சரியாகப் பேசுவதுகூட கிடையாது. முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அன்று அவள் கணவன் ஆபீசுக்குச் சென்று விட்டான். மணி பத்திருக்கும். வாசல் வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி. பக்கத்து வீட்டுப் பர்வதம்மாள் அங்கு வந்து சேர்ந்தாள்.

"ஏண்டி ஜானகி! ஏன் ஓரே சோகமா உட்கார்ந்திருக்கே!" என்று சொல்லிய வண்ணம் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

ஜானகியின் வீட்டில் நடக்கும் ஒவ்வொன்றும் பர்வதம்மாளுக்குத் தெரியும். ஜானகியின் வாயிலிருந்தே விஷயத்தைக் கிரகித்துக் கொள்வாள். பலே கைக்காரி!

ஜானகி நடந்ததை அவளிடம் கூறினாள்.

"அடி பசிக கெட்டவளே! அகத்துக்காரரை அடக்கி ஆளத்தெரியாத நீயும் ஒரு பொண்ணு! எதிர் வீட்டு அலமுவைப் பாரு! அவள் கிழிக்கிற கோட்டைத் தாண்டமாட்டான் அவள் கணவன். மாமியார்க்காரி இவளைக் கண்டால் அப்படியே நடுங்கி அங்கேயே செத்து விடுவாள். வீட்டில் இவள் இட்டதுதான் சட்டம். நீ என்னமோ" என்று சொல்லிக்கொண்டே போனாள்.

"என்னம்மா செய்யறது! மாமி திடீர் என்று பணம் கேட்டு வாங்கிக் கொண்டு ஊருக்குப் போகிறது எனக்கு எப்படித் தெரியும்!" என்றாள்.

"அதற்குத்தான் கணவன் ஆபீஸிலிருந்து வந்ததும் பணத்தை எடுத்துப் பெட்டியில் வைத்திருக்க வேண்டும். உன்னைச் சொல்லி என்ன! உன் மாமியாரைச் சொல்லு. அவள் கைக்காரி. கழுகைப் போல் காத்திருந்து 'லபக்'கென்று கொத்திக் கொண்டு போய் விட்டாள். உம், எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்." இப்படியாகப் பேசி மாமியாரின் மேல் அவளுக்கிருந்த வெறுப்பை மேலும் தூண்டி விட்டு, வந்த காரியம் முடிந்து விட்ட காரணத்தால் வீட்டுக்குச்சென்று விட்டாள், 'இந்தப் பூனையும் பால் குடிக்குமோ!' என்று நினைக்கிற பர்வதம்மாள்.

பர்வதம் சொல்லிய வார்த்தைகள் ஜானகியின் உள்ளத்தில் அப்படியே நன்கு பதிந்து விட்டன.

"மாமியாராம் மாமியார், என்னிடம் வெண்ணெய்போல் பேசி அன்பைச் சம்பாதித்துக் கொண்டதாக எண்ணி யிருக்கிறார். உதட்டிலே புன்னகை; உள்ளத்திலே விஷத்தோடு இத்தனை நாள் என்னிடம் பழகி வந்திருக்கிறார். இது தெரியாமல் நான் அவரைத் தெய்வமாக வைத்துப் பூஜித்தேனே! இனி இங்கே வரட்டும். என்ன பாடுபடுத்தி விடுகிறேன், பார்!" — ஜானகியின் சிந்தனைக் கயிறு இப்படித் தெறிகெட்டு ஓடியது.

"ஜானகி! ஏதாவது கடிதம் வந்ததா!" என்று கேட்டவண்ணம் உள்ளே நுழைந்தான் சுந்தரம்.

"உங்கம்மா உங்களுக்கு எழுதி யிருக்கிறார்கள். இன்று சாயந்திரம் வந்து சேருகிறார்களாம்" என்று வெறுப்புணர்ச்சியுடன் கூறினாள் அவள்.

அந்தச் சமயத்தில் வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. அவன் மாமியார் வண்டியிலிருந்து இறங்கினாள் மூட்டை முடிச்சுகளுடன். அவளைக் கண்டதும் தலையைச் சாய்த்து மோவாயைத் தோள் பட்டையில் ஒரு இடி இடித்து விட்டு 'விர்'ரென்று உள்ளே சென்று விட்டாள் ஜானகி. சுந்தரம் ஓடிச் சென்று மூட்டைகளை வாங்கிக் கொண்டு உள்ளே வந்தான்.

இருவரும் ஊர் விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். ஜானகி உர்ரென்று கடுவம் பூனை போல் முகத்தை வைத்துக் கொண்டு வளைய வந்து கொண்டிருந்தாள். மாமியார் ஏதாவது கேட்டால் அவள் மனத்தைத் தைக்கும் படி பதில் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சுந்தரம் வெற்றிலைப் பாக்குத் தட்டுடன் கூடத்தில் வந்து உட்கார்ந்தான். அவன் தாயாரும் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

"சுந்தரம், நீ சமயத்துக்குப் பணம் கொடுத்து உதவினாய்! இல்லா விட்டால் என் மானம் போயிருக்கும். மாயாண்டி மகா முரடனும். கோர்ட்டில் வழக்கு போடுவதாக இருந்தானும்." அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

ஜானகி ஏதோ முணகியவண்ணம் மாமியாரைச் சுட்டெரித்து விடுபவள் போல் பார்த்து விட்டு அவளைக் கடந்து உள்ளே சென்றாள்.

"அப்புறம்!" என்றான் அவன்.

"நல்ல காலம்! பணத்தைக் கொடுத்தேனோ, பிழைத்தேனோ..." என்று சொல்லியவள் உள்ளே சென்று தன் பெட்டியை எடுத்து வந்து கீழே வைத்து அதைத் திறந்தாள்.

"சுந்தரம்! நம் மரகதம் இருக்காள் பாரு. அவள் பெண் கல்யாணத்துக்காகப் போன வருடம் என்னிடமிருந்து கை மாத்தாக ஐந்நூறு ரூபாய் வாங்கிப் போனாள். ஊருக்குச் சென்றிருந்த போது அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தாள். நம்ம ஜானகிக்கு ஒரு மாங்காய் மாலை பண்ணச் சொல்லி வாங்கி வந்தேன். அவளுக்கு எழுபது ரூபாயில் நல்ல நூல் புடவையும் வாங்கிக் கொண்டு வந்தேன். இந்தா மீதிப் பணம்!" என்று சொல்லியவண்ணம் மூந்நூறு ரூபாயை அவனிடம் நீட்டினாள்.


"ஜானகி! இந்தா இந்தப் புடவையை உடுத்திக் கொண்டு, மாங்காய் மாலையைப் போட்டுக் கொள்" என்றாள் அன்பு நிறைந்த குரலில்.

அங்கே நின்று கொண்டிருந்த ஜானகிக்குத் தலை 'கிர்' ரென்று சுற்றியது. கண்களில் கண்ணீர் முட்டி நிற்க, ஓடி வந்து மாமியாரை வணங்கி, "என்னை மன்னித்து விடுங்கள். உங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஏதேதோ சொல்லி உங்கள் மனத்தை நோக அடித்து விட்டேன்" என்று கெஞ்சுதலாக அவள் கதறினாள்.


"சீ, அசடே! எழுந்திரு!" என்று சொல்லிய வண்ணம் அவள் தலையை அன்போடு வருடினாள்.

புதுப் புடவை சரசரக்க, மாங்காய் மாலை அணிந்து கொண்டு, புது மாட்டுப் பெண் போல் தலைகுனிந்து உள்ளே சென்றாள் ஜானகி.


உறுதியான கட்டிட
வேலைகளுக்கு
அக்ரிகோ கருவிகளை
நம்பலாம்



அக்ரிகோ
சிறந்த வேலைகளுக்குச் சிறந்த கருவி!



சதுர வடிவமான மண் வாரி: ஐ. எஸ். ஐ. குறிப்புகளின்படி ஹைகார்பன் ஸ்டீலிலிருந்து தயாரிக்கப்பட்டது. கெட்டியான மரப்பிடி பொருத்தப்பட்டது.



மேற்கு இந்தியக்கோத்து மிகவும்பலமானது. ஆயினும் வேலை செய்ய இலகுவானது-உட்டுறுதி வாய்ந்திருப்பதால் நீடித்துழைக்கக்கூடியது.

நிலத்தை வெட்டிப் பண்பாடு செய்தல், அணைக்கட்டு வேலைகள் போன்ற விஸ்தாரமான திட்டங்களின் கடினமான தேவையை அக்ரிகோ கருவிகள் பூர்த்தி செய்கின்றன. மிகுந்த உறுதிக்கும், சீரான அமைப்புக்கும் இலகுவாக வேலை செய்வதற்கும் பெயர் பெற்ற அக்ரிகோ கருவிகளையே கண்ட்ராக்டர்கள் எங்கும் விரும்புகிறார்கள்.



கோடரி

இரண்டு ரகங்களில் கிடைக்கும். மிகவும் உறுதி வாய்ந்தது-நீடித்து உழைக்கக் கூடியது.

டாடா அக்ரிகோ கருவிகள்



கடப்பாரை

சாதாரணமாக 5'–5'' நீளத்திலும் 7/8'' லிருந்து 1¼'' கனத்திலும் கிடைக்கும். ஹை-கார்பன் ஸ்டீலிலிருந்து தயாரிக்கப்பட்டது

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்
தலைமை செல்லிங் ஆபீஸ்:
23-B நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா 1
கிளை ஆபீஸ்கள்: பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், ஸெகந்திராபாத், விஜயநகரம் கன்டோன்மெண்ட், ஜலந்தர் கன்டோன்மெண்ட், கான்பூர் & பாட்னா.

AG. 1873



அஜீரணம் வாழ்வையே துன்பமயமாக்கி விடுகிறது; வயதுக்கு மிஞ்சிய வயோதிகத் தோற்றமும் உண்டாக்கிவிடுகிறது. மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் துரிதமான நிவாரணம் தருகிறது. ஏனெனில் அது ஒரு அபூர்வச் சிறப்புடைய பௌடர்; சாஸ்திரீகமான தயாரிப்புத் திட்டப்படி பக்குவமான பொருட்சேர்க்கையுள்ள இந்தப் பௌடர் மூன்று வேலைகள் செய்கிறது—மிருதுவான இரைப்பைக்குச் சமனமூட்டுகிறது; வயிற்றுப் புளிப்பை மாற்றுகிறது; வலியையும் நிறுத்துகிறது.



மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் என்று பெயரைச் சொல்லிக் கேளுங்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் Alex C. Maclean "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்ற உண்மைக் கையெழுத்தும் தத்ரூபமாக அச்சிடப் பட்டுள்ளதா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.

மக்ளீன்

பிராண்ட் ஸ்டமக் பவுடர்

எப்பொழுதும் கையில் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

ஒரு டோஸ்

அஜீரணத்தாலேற்படும் வயிற்று வலி, உடற்பருமன், இருதய எரிச்சல், வயிற்று மந்தம், வாந்தி இவற்றை சடுதியில் குணப்படுத்தும்.

MSY. 9-TAM

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரசாமி

28. ஆஸ்துமா—தைராய்ட் கோளம்

இக்கோளம் பிரதான காற்றுக் குழாயின் மூன் பக்கம் கழுத்துப் பாகத்தில் பக்கத்துக்கு ஒன்றாக இருக்கிறது. இதன் எடை 20 முதல் 25 கிராம்கள் வரைக்கும்தான். இரண்டுக்கும் ஒரு நரம்புச் சேர்க்கை உண்டு. அரையணுவின் கனமும் ஒன்று முதல் ஒன்றரை அங்குல அளவில் தாமரை இலையைப்போன்ற வடிவமும் உடையது.

இந்தக் கோளத்தின் ரசம் உடலிலுள்ள ஒவ்வொரு பாகத்துக்கும், அணுக்களுக்கும் முக்கியமாயிருக்கிறது. இதனுடைய உதவியில்லாமல் எதுவும் சரிவர நடவாது. இது உடலின் சூட்டைப் பாதுகாக்கின்றது. இதன் வேலையைச் சரிவர அறிய வேண்டுமானால் தைராய்ட் கோளம் ஆரோக்கியமாக உள்ள ஒருவனிடமிருந்து அறிய முடியாது. எனவே முன் அத்தியாயத்தில் சொன்னது போல், பிராணிகளுக்கு ஆபரேஷன் மூலம் தைராய்ட் கோளத்தை நீக்கிவிட்டுக் குணப்படுத்தி விட்டார்கள். அப்படிச் சோதனை செய்ததில் முதலில் உடலில் இருக்க வேண்டிய உஷ்ணத்தின் அளவு குறைந்தது. எலும்பு வளர்ச்சி அடையவில்லை. தாறுமாறாகத் தொடங்கின. ஜனனேந்திரிய வேலைகள் குறைந்து வந்து நின்று விட்டன. சருமம் உலர்ந்தும், முடி கொட்டத் தொடங்கின. இருதயம் மெதுவாய்த் துடித்தது. தசைகள், தசை நார்கள் தளர்வடைந்து சோர்வடைந்தன. இரத்த சோகை உண்டாயிற்று. நோய்க் கிருமிகள் பெருகின. அறிவு, புத்திசாலித்தனம் உணர்வு முற்றிலும் இழந்து விட்டன. மற்ற எல்லாக் கோளங்களும் பலவீன மடைந்தன. ஆனால் பாங்கிரியாஸ் கோளம் மட்டும் பாதிக்கப்படவில்லை. இரத்தத்தில் இருக்க வேண்டியதற்கும் குறைவாக இனிப்பு இருந்தது.

மேற் சொன்ன குறிகள் இலேசாகவோ அதிகமாகவோ மனித உடலில் ஏற்பட்டால் அப்பொழுது நாம் தைராய்ட் கோளத்திலிருந்து போதுமான அளவு ஹார்மோன் சுரக்கவில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் மனித உடலில் மற்றுமொரு மாறுதலும் உண்டாக்குகின்றது. அதுதான் ஊளைச் சதை வைத்தல், அதாவது உடல் கனத்தல்.

மேற் சொன்ன குறிகளிலிருந்து தைராய்ட் கோளமானது உடலின் ஒவ்வொரு அணுவுக்கும் முக்கியமானது என்று ஏற்படுகிற தல்லவா! ஆகக் கூடி வளர்ச்சி, அறிவு, புத்திசாலித்தனம், ஜனனேந்திரிய அபிவிருத்தி முதலியவை தைராய்ட் கோளத்தின் சுபிட்சத்தைச் சார்ந்தே இருக்கிறது.


தைராய்ட் கோளம் அதிகமாய் ரசம் கக்கினால் என்ன ஆகும் என்பதை வெகு சுலபமாய்ச் சொல்லி விடலாம். மேற் சொன்ன காரியங்களெல்லாம் எதிர்மறையாக நடக்கு மென்பது அறிந்ததே. ஆனால் அப்படி யென்று அறிஞர்கள் வெறுமனே இருந்து விடவில்லை. அதற்கும் பல சோதனைகள் பிராணிகளின் மேல் நடத்தி முடிவு கண்டிருக்கிறார்கள். தைராய்ட் கோளத்தின் ஹார்மோன் பிராணிகளுக்குச் செலுத்தி உடலில் உண்டாகும் மாறுதலைக் குறித்திருக்கிறார்கள். அது அப்படியே மனித உடலிலும் உண்டாகின்றதாம்.

இருதயம் நிமிஷத்துக்கு 70 தடவை அடிக்க வேண்டியதாயிருக்க 150 தடவை அதிவேகமாய்த் துடிக்கும். பசி அதிகரித்து அளவுக்கு மீறிய உணவு உட்கொள்ளுவார்கள். அப்படிச் சாப்பிட்டும் எலும்புந் தோலுமாகத்தான் இருப்பார்கள். ஆனால் அளவுக்கு மீறிய வேகமும், சக்தியும், உணர்ச்சியும் இருக்கும். ஆனால் நரம்புத் தளர்ச்சியும் உடன் இருக்கும். சருமம் பசையுடன் இருக்கும். உடல் எப்பொழுதும் உஷ்ணமாகவே இருக்கும். சாதாரணமாய் உடலில் இருக்க வேண்டிய சூட்டைக் காட்டிலும் சற்று அதிகம் இருக்கும். இரத்தத்திலும் சிறிது சர்க்கரைச் சத்து அதிகம் இருக்கும்.

ஆனால் இந்தச் சோதனையில் பிராணிகளுக்கு ஏற்படாத ஒரு மாறுதல் மனிதனுக்கு ஏற்படுகிறது. அதாவது தைராய்ட் ஹார்மோன் அதிகம் சுரந்தால் கண் விழி அப்படியே ஆடாமல் அசையாமல் நின்று விடுகிறதாம்.

மற்றும் மனிதனுக்குக் கண்டமாலை என்ற நோயும் தைராய்ட் கோளத்தின் கோளாறினால் வருகிறது. இதன் ஹார்மோன் சுரப்பது குறைவுபடுவதாலும், அயோடின் சத்து உணவில் குறைவதாலும் இந்த நோய் வருகிறது.

பாரா தைராய்ட்: இவை தைராய்ட் கோளத்துக்குச் சமீபம் பக்கத்துக்கு இரண்டாக நான்கு கோளங்களாக இருக்கின்றன. இவைகளின் மொத்த எடையே இரண்டு கிராம்தான். இவை முக்கியமாக உடலில் சுண்ணும்புச் சத்து சரிவர இருக்கச்செய்கின்றன. இந்தக் கோளங்களை உடலிலிருந்து நீக்கி விட்டால் நரம்புகள் இழுத்து விரைத்து விடும். எனவே இக் கோளங்களின் ஹார்மோன் குறைந்தால் அநேகவித வலிப்புகள்



"மை மேகஸின்" பத்திரிகையின் அதிபரான திரு பி. கே. விநாயக முதலியார் அவர்களின் செல்வப் புதல்வி செல்வி சரோஜினிக்கும், திரு ஏ. வேதகிரி முதலியார் அவர்களின் புதல்வன் திரு ஏ. வி. வேணுகோபாலுக்கும் சென்ற மாதத்தில் சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு நண்பர்களும், உறவினர்களும், சென்னை நகரப் பிரமுகர்கள் பலரும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினார்கள். சுவாமி சிவானந்த சரஸ்வதி முதலிய பல பெரியோர்களிடமிருந்தெல்லாம் ஆசிச்செய்திகள் வந்திருந்தன.

வாழ்க மணமக்கள்!

வரும். இந்த ரசம் குறைந்தால் தசைகள், நரம்புகள் முதலியன சரிவர வேலை செய்யாது. இரத்தத்தில் சுண்ணாம்புச் சத்து சரிவர இருக்காது. இதன் ஹார்மோன் அதிகமானால் இரத்தத்தில் சுண்ணாம்புச் சத்து அதிகப்படும். ஆனால் அதே சமயம் எலும்புக்குள் இருக்கும் சுண்ணாம்புச் சத்தும் குறைவுபடும். அதனால் எலும்புகள் வளையவும் ஒடியவும் செய்யும். சிறு நீரில் சுண்ணாம்புச் சத்து அதிகம் காணப்படும்.

அட்ரினேல் கோளம்: இந்தக் கோளங்கள் குண்டிக்காய்கள் இரண்டின் பேரிலும் ஒரு தொப்பி வைத்தாற்போல் இருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் இரண்டு பாகங்களுண்டு. இதை இரட்டைக் கோளங்களென்றும் சொல்லலாம். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வேலைகளுண்டு. வெளியில் இருக்கும் பாகத்துக்கு 'அட்ரினேல் கார்டெக்ஸ்' என்றும், உள் பக்கம் இருப்பதற்கு 'அட்ரினேல் மெடுல்லா' என்றும் பெயர்.

அட்ரினேல் மெடுல்லா என்னும் பாகத்தின் ஹார்மோன் முக்கியமாக இரத்த அழுத்தத்தை உண்டாக்க உதவுகின்றது. இதைக் கண்டு பிடித்துச் சுமார் அறுபது ஆண்டுகள்தான் ஆயிற்று. அதிலும் இந்தக் கோளத்திலிருந்து சாரத்தை 1895-ம் வருடத்தில்தான் எடுத்தார்கள். இதைப் பிராணிகளில் பிரயோகித்துப் பார்த்ததில் பல பலன்கள் கண்டார்கள். அவைகளில் முக்கியமானது இரத்த வேகத்தை அதிகப்படுத்துவது தான். இந்தச் சாரத்திலிருந்து செய்யப்பட்ட மருந்துக்குத்தான் அட்ரினேலின் என்பது.

இந்த மருந்தை ஊசி மூலம் இரத்தத்தில் செலுத்தினதும் இரத்தம் வெகு வேகமாகப் பாயத் தொடங்கும். இருதயம் வேகமாக அடிக்கும். வயிற்றிலுள்ள மிருதுவான தசைகளுக்கெல்லாம் இரத்தம் அதிகம் பாய்ந்து சுறுசுறுப் படையும். அதனால் கல்லீரலிலுள்ள இனிப்புச் சத்து இரத்தத்தில் கலக்கச் செய்யும். இவை எல்லாவற்றையும்விட மிக முக்கியமான பணி ஒன்று இம்மருந்து செய்கிறது. அதனால் தான் அதற்கு அவ்வளவு மகத்துவம் ஏற்பட்டது. அதாவது மூச்சுக் குழாய்களுக்குச் சம்பந்தப்பட்ட 'ஸிம்பதெடிக்'—நரம்புக் கூட்டங்கள்—சுறுசுறுப் படையச் செய்கின்றன. அதனால்தான் ஆஸ்துமாக்காரர்களுக்கு இந்த மருந்தை ஏற்றினதும் அவர்களுக்கு மூச்சு விடச் சௌகரியமாய் இருக்கிறது.

இம் மருந்து இருதயத்தை வேகமாக அடிக்கச் செய்வதால் சாதாரணமாக மூச்சு வாங்குவதை அதிக அளவு வாங்க வேண்டியிருக்கிறது. அப்பொழுது அதிக அளவு பிராணவாயு ரத்தத்துடன் கலக்கிறது. அப் பிராண வாயுவைச் சுமந்து செல்லச் சிவப்பு இரத்த அணுக்கள் மண்ணீரல் சேமிப்பிலிருந்து விடுபட்டு வருகிறது. எனவே அதிக இரத்தம், அதிகப் பிராண வாயுவுடன் அதிக வேகமாய்ப் பாய்வதால், எலும்புகளைச் சார்ந்த தசைப் பாகங்களுக்கும், நுரை ஈரலிலுள்ள மிகப் பொடிக் காற்றுக் குழாய்களுக்கும் சுறுசுறுப்பு உண்டாக்குகிறது. அதனால் ஆஸ்துமாக்காரர்களுக்குக் காற்றுக் குழாயின் இறுக்கம் தளர்ந்து தாராளமாய் மூச்சை வாங்கவும் விடவும் முடிகிறது. சுகம் ஏற்படுகிறது.

பயப்படும் போதும், அபாயம் நேரிடும்போதும் இந்த அட்ரினேல் மெடுல்லா கோளத்தின் ரசம் அதிகமாகச் சுரக்கின்றது. அதன் ரசம் மஞ்சள் நிறமானது. நாம் பயப்படும் போது இது ரத்தத்தில் அதிகமாகக் கலப்பதால் உடல், முக்கியமாய் முகம் வெளுத்தாற் போல் தெரிகிறது. அபாயம் வந்த பொழுது நமக்கு எப்பொழுதுமில்லாத

துணிவு உண்டாகி விடும். ஒரு மிருகம் நம்மைத் துரத்தி வருகிற தென்றால் ஓரிரண்டு மைல்கூட ஓடுவோம். ஆனால் இதற்கு முன்பு ஓரிரு பர்லாங்குகூட நம்மால் ஓட முடியாது. எப்படியும் தப்பித்துச் செல்ல வேண்டும் என்ற துணிவு இந்த ரசம் அதிகம் சுரந்து நமது உடலுக்கு அந்தச் சக்தியைக் கொடுப்பதால் உண்டாகிறது.

எங்கேயாவது காயம் பட்டால் அதிக இரத்தம் சேதமாகாதபடிக்கு இரத்தம் உறைந்து தடுக்க இந்த ஹார்மோன் உதவுகிறது. இது அதிகம் சுரந்தால் குழந்தைகளுக்குத் தலை மூடி கட்டுக் கொண்டு கண் விழி பிதுங்கினாற் போல் இருக்கும். சருமம் பசையாக இருக்கும். இந்தக் குறிகளெல்லாம் அட்ரினேலின் என்னும் மருந்தை அதிகமாகப் பிரயோகம் செய்வதாலும் தோன்றும்.

ஆனால் இவ்வளவு முக்கியமாக இருக்கும் இந்த அட்ரினேல் மெடுல்லாவை உடலிலிருந்து அகற்றி விட்டால் மாறுதல் பிரமாதமாகத் தோன்றவில்லை என்று ஆராய்ச்சி மூலம் கண்டிருக்கிறார்கள்.

அட்ரினேல் 'கார்டெக்ஸ்' எனும் கோளத்தின் ஹார்மோன் குறைந்தால் நரம்புகள் பலவீனப் பட்டு விடும். சுறு சுறுப்பும், சிந்தனை சக்தியும் குறைந்துவிடும். கோமா என்ற வியாதி ஏற்படும். அடிசன் என்ற நோய் வரும்.

மற்றும் இரத்தத்திலுள்ள சோடியம் சத்து குறைந்து பொடாசியம் சத்து அதிகப்படும். சிறு நீர் அதிகப்படும். இரத்தத்திலுள்ள நீர் குறைந்து குறைந்து இரத்த அழுக்கம் ஏற்படும். நல்ல இரத்தத்தின் சுகாதாரத்தை அடியோடு கெடுத்துவிடும்.

இந்த அட்ரினேல் கார்டெக்ஸ் ஹார்மோனிலிருந்து சுமார் இருபத்தைந்து வருடங்களாகத் தான் மருந்துகளைத் தயார் செய்கின்றார்கள். இந்த ஹார்மோனுடன் மற்றும் பலவித மருந்துகளைச் சேர்த்து மற்றும் பலவிதத்தில் உபயோகிக்கின்றனர். அதில் இரண்டு மிக முக்கியமானவை. அதாவது ஒன்று, உப்பும் ஜலமும் கொண்ட ஹார்மோன்; இரண்டாவது இனிப்புச் சத்தை உடலில் சமன்படுத்தும் ஹார்மோன்.

இந்தக் கோளத்தில் அதிகமாய் ஹார்மோன் சுரந்தால் பெண்களுக்கு ஆண் தன்மையும் ஆண்களுக்குப் பெண் தன்மையும் ஏற்படும். பெண்களுக்கு மார்பகம் வளராது. முகத்தில் மீசை முதலியன தோன்றும். குரலும் ஆண்களைப் போல மாறும். ஆண்களுக்கு மார்பகம் வளரும். முகத்தில் தாடி மீசை வளராது. பெண்களின் குரலைப் போல இருக்கும். சிறு குழந்தைகளுக்கு இந்த ஹார்மோன் அதிகம் சுரக்குமானால் வயதாவதற்குள் பெண்கள் ருதுவாவதும், ஆண்களைப் போல மீசை முளைப்பதும் போன்றவை ஏற்படும்.

கிழவர்கள் வாலிபமடைய தைராய்ட் கிளாண்ட் ஆபரேஷன் செய்து வந்தார்கள் அல்லவா! இப்பொழுது ஆண்கள் பெண்களாகவும், பெண்கள் ஆண்களாகவும் மாறச் சஸ்திர சிகிச்சை செய்கிறார்கள். மூன்று வருடம் ஹார்மோன்கள் சிகிச்சையில் இருந்த பின் ஆபரேஷன் செய்து மறுபடியும் ஹார்மோன் சிகிச்சை அளிக்கிறார்கள். பல ஆண்களும் பெண்களும் இந்த விசித்திர சிகிச்சையைப் பெற்று வருகிறார்களாம்.

ஒரு பெண் ஆணாய் விட்டாள்; ஆண் பெண்ணாய் விட்டான் என்று பத்திரிகைகளில் படிப்பதுண்டு. ஆனால் இப்பொழுது விரும்புபவர்கள் அடையும் வழியும் உண்டாகி விட்டது. ஒரே பிறவியில் இரண்டையும் அனுபவித்து விடலாமல்லவா! ஆனால் பல லட்சக் கணக்கில் பணம் வேண்டுமே! அதற்கும் முன்பாக அம் மனப்பான்மை வேண்டும்!

(தொடரும்)


நக்ஷத்திர பிரகாசம் - எஸ்ட்ரெல்லா வெளிச்சம்!
பிரும்மஹிருதயம்
வானத்தின் வடக்குத் திக்கில் 'ஸாரதி' என்ற நக்ஷத்திரக் கூட்டத்தைச் சேர்ந்த 'பிரும்மஹிருதயம்' என்ற நக்ஷத்திரம் அதிசயிக்கத் தக்க ஜோதியை உடையது ...... எஸ்ட்ரெல்லா பாட்டரிகளும்கூட தவறாத பிரகாசமான வெளிச்சம் தரும். குறைந்த விலைக்கும் பிரக்யாதி பெற்றவை
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
ESTRELA BATTERIES LTD. BOMBAY
எஸ்ட்ரெலா பாட்டரீஸ்
எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - டெல்லி - மதராஸ் - கான்பூர் - நாக்பூர் - கல்கத்தா.


பெர்ல் பார்லி என்று கூறுவதற்கு முன்பாக
ராபின்ஸன்ஸ்
என்று சொல்லிக் கேளுங்கள்
எல்லா உபயோகங்களுக்கும் சிறந்தது
ROBINSON'S PEARL BARLEY
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்.,
த. பெ. 664 கல்கத்தா.
ARPX STM.

பிறந்தகம்

சோபனா

அன்புள்ள தோழி விஜயாவுக்கு,

என்னிடமிருந்து வெகு நாட்கள் கழித்து வரும் இக்கடிதத்தைக் கண்டு நீ நிச்சயம் ஆச்சரியத்தால் பூரித்துப் போவாய். "உன் கணவருக்குச் சித்தம் பேதலித்து விட்டதோ?" என்று நீ அதிசயத்துடன் கேட்பாய். பிறந்தகத்தையே மறந்து விட வேண்டும் என்று என்னைத் தீவிரமாக வற்புறுத்தி வந்த அவருடைய இந்தப் புதிய போக்கு, உனக்கு மட்டுமல்ல அவரையும், என்னையும் நன்கு தெரிந்த யாருக்குமே திகைப்பை விளைவிக்கக் கூடியதுதான்! எல்லாம் பத்திரிகையில் வெளியான அந்தப் பயங்கரச் செய்தியின் பலாபலன்தான். நீ நான் சொன்னால் நிச்சயம் ஏற்றுக்கொள்ள மாட்டாய். இருந்தாலும் நான் அதைப் பற்றி விரிவாக எழுதத்தான் வேண்டியிருக்கிறது!



பத்திரிகையில் எனக்கு மிகவும் பிடித்தமான பகுதியை நான் உனக்கு விளக்கிக் கூறவேண்டிய அவசியமே இல்லை. "இந்தக் கொலை வழக்குகளையும், தற்கொலைகளையும் தீ விபத்துக்களையும் படிப்பதில் உனக்கு என்ன ஆசையோ தெரியவில்லை!" என்று நீ அடிக்கடி பரிகாசம் செய்து வந்ததை நான் உனக்கு நினைவு படுத்த வேண்டுமா? அந்த மாதிரிச் செய்திதான் என்னைப் பிறந்தகத்தில் கொண்டு சேர்க்கக் காரணமாக இருந்தது.

சென்ற வாரம், திங்கட்கிழமை பத்திரிகையில் தற்கொலை செய்து கொள்ள முயன்ற ஓர் இளம் பெண்ணைப் பற்றி விவரம் வெளியானதை நீ படித்திருப்பாய் என்று எண்ணுகிறேன். என் புக்ககத்து ஊரில்தான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்ற விவரத்தை நீ சிரத்தையுடன் கவனித்திருக்க மாட்டாய். அதையும் தவிர அந்த வள்ளி எனக்கும் அவருக்கும் பரிச்சயமானவள் என்று சொன்னால் உனக்குத் திகைப்பாகத்தான் இருக்கும்.

வள்ளி ரொம்ப நல்லவள்! அவளுடைய புருஷன் முருகையன் ஒரு மாதிரி ஆசாமி. பெரிய பூந்தோட்டத்தின் அதிபதி அவன். அதன் மூலம் அடையும் வருவாய்தான் அவனுக்கு ஜீவனம். தன் தோட்டத்தைக் கண்ணுக்குக் கண்ணாகப் பாதுகாத்து வந்தான். தன் கையால் தானே ஏற்றம் போட்டு நீர் பாய்ச்சுவான். மாலை வேளையில் தோட்டத்து மலர்களைப் பறித்துச் சரமாகக் கட்டிக் கூடையில்வைத்து எடுத்துக்கொண்டு தினந்தோறும் வியாபாரத்துக்குக் கிளம்புவாள் வள்ளி.

உனக்கு என் மேல் கோபம் வந்தாலும் வரலாம் விஜயா! இருந்தாலும் வள்ளியைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் என் கண் முன் உன் அழகான உருவம்தான் வந்து நிற்கிறது. சில சமயம் வள்ளியைப்பார்த்தால் நீதானோ என்ற பிரமை என்னுள் எழும். அவ்வளவு அழகி அவள். தலையை அழகாக வாரிக் கொண்டை போட்டுக் கொண்டு, நெற்றியில் குங்குமம் இலங்க, பூக்கூடையைத் தாங்கிக் கொண்டு அவள் வரும் போதெல்லாம் சௌந்தரியதேவதையே அவள் உருவில் வருகிறதோ என்று ஐயுறுவேன் நான். எனக்குச் சம்பங்கி மலர்களின்மேல் உள்ள ஆசை எத்தகையது என்பது

உனக்கு நன்றாகத் தெரியும். பிறந்தகத்தில் இருந்த போது வீட்டுத் தோட்டத்தில் அதைப் பயிராக்கி யிருந்தேன்.

புக்ககத்துக்கு வந்த பிறகு, எனக்குச் சம்பங்கிப் பூவே கிடைப்பதில்லை. ஆனால் வள்ளி அறிமுகமாகிற வரையில்தான், இந்தச் சிரமம் இருந்தது. அவள் எப்படியும் எனக்குச் சம்பங்கிப் பூகொண்டு வந்து கொடுப்பாள்.



பூவே அரிதான காலத்தில் கூட வள்ளி, மற்ற வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமல் அதை மறைத்து எனக்கு மட்டும் ரகசியமாக எடுத்து வருவாள். அவளுடைய இந்தச் செய்கையிலிருந்து என்மேல் அவளுக்கிருந்த அன்பை வார்த்தைகளைக் கொண்டு வர்ணிக்காமலே நீ அறிந்து கொள்ளலாம்.

அடிக்கடி வள்ளி என்னுடன் சம்பாஷணையில் ஈடுபடுவாள். அவர் கோர்ட்டிலிருந்து வரத் தாமதமானால் வள்ளி எங்கள் வீட்டிலேயே அமர்ந்து பேச ஆரம்பித்து விடுவாள்.

"நீங்கள் பிறந்த வீட்டுக்குப் போவது இடையாதாம்மா?" என்று அவள் அடிக்கடி ஆதுரத்துடன் வினவுவாள். நான் என்னத்தைச் சொல்ல? எத்தனை அன்புடன் பழகினாலும் குடும்ப ரகசியங்களை எல்லாம் வெளியிட நான் விரும்ப வில்லை. என் பிறந்தகத்தை என் கணவர் அவ்வளவாக மதிக்கவில்லை என்று சொன்னால் அவளே இரு சார்பையும் மோசமாகவே எண்ணினாலும் எண்ணுவாள். என் கணவர் என் பிறந்தகத்தைப் பற்றின விஷயங்கள் தவிர மற்றவைகளில் என் மனம் கோணாமல் நடந்து கொள்கிறார் என்பதை நான் அவளிடம் வற்புறுத்த வேண்டும். இந்தத் தொல்லைக்காக "எப்போது ஒருவரைக் கைப் பிடித்தோமோ, அப்போதே மற்ற விஷயங்களை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். கணவன் மகிழ்ச்சியையே பிரதானமாகக் கருதவேண்டும்!" என்று சொல்லி மழுப்பி விடுவேன்.

"சில பேரால்தான் அப்படி யெல்லாம் இருக்க முடிகிறது. என்னால் அப்படி இருக்க முடியாதம்மா!" என்று பதில் சொல்லுவாள் வள்ளி.

அவளுக்கும் என்னைப் போல் மணமாகிக் கொஞ்ச மாதங்கள்தான் ஆகி யிருந்தன. என்னைப் போல் புருஷன் வீட்டுக்கு வந்தவள் தான். பிறகு பிறந்த வீட்டின் பக்கமே அவள் தன் தலையைக் காட்ட வில்லை. இந்த விஷயத்தை நான் தெரிந்து வைத்திருந்தேன். ஆனால் வள்ளியிடம், அவள் என்னைக் கேட்டது போலக் கேட்க என் மனம் இசைய வில்லை.

ஒரு தினம் வள்ளியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, வேடிக்கையாக நான், "ஏன் வள்ளி! உன் புருஷன் உன்னை மனம்கோணாமல் வச்சுக்கறானா?" என்று வினவினேன்.

வள்ளி கலகல வென்று நகைத்தாள். "வச்சுக்காம என்னங்க? சந்தோஷமாகத் தான் இருக்கேன்! ஆனால்..."-வள்ளி வார்த்தைகளை விழுங்கினாள்.

"ஆனால் என்ன?" என்று திகைப்புடன் கேட்டேன்.

வள்ளி ஒரு கணம் தாமதித்தாள். பிறகு "'பொறந்த வீட்டைப் பற்றிப் பேச்சை வச்சுக்காதே! உன் தன்மையைத் தெரிந்து நானாக இருப்பதனால் சரியான இடத்திலே வச்சிருக்கேன். மறுபடியும் குப்பை மேட்டிலே போய் விழுனும்னு துடிக்கிறே!' என்கிறாரு! அதான் எனக்குப் பிடிக்கிறதில்லை. என் பிறந்த வீடு ஏழைப்பட்ட வீடுதான். அதற்காக இவரு இப்படியா பேசறது? என்னவோ பயந்து சாகறேன்!" என்று வள்ளி தன் உள்ளத்தைத் திறந்து கொட்டினாள். அவள் குரலில் பிறந்த ஏக்கத்தின் தாகம் தெளிவாகத் தெரிந்தது. எனக்கு மட்டுமல்லாமல் ஒவ்வொரு பெண்ணுக்கும் பிறந்தகம் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்தாலும் அது சுவர்க்கத்தைப் போல் காட்சி அளிப்பதை உணர்ந்தேன். ஆனால் என் கணவரைப் போலவும், முருகையனைப் போலவும் இருப்பவர்களிடம் அவர்கள் தங்களைப் பிணைத்துக் கொள்ளும்போது?

என் கணவர் பொதுப் படையாகவே நல்லவர்தான். வரதக்ஷணையே இன்றி என்னை அவர் கைப் பிடித்ததிலிருந்தே அவருடைய நல்ல குணத்தை நான் அறிந்து கொண்டுவிட்டேன். அவர்மாதிரி கோர்ட்டில் வழக்குகளில் வெற்றிமேல் வெற்றி பெறுபவர்கள் இடையாது என்று ஊர் முழுவதும் பேசிக் கொள்ளுகிறார்கள். என்னை நாட்டுப்புறமான என் பிறந்தகத்துக்குப் போகக் கூடாது என்று இட்ட கட்டளையிலும் வெற்றி அவர் பக்கமே இருந்தது! நாளடைவில் அவரை அதைப் பற்றி வற்புறுத்திப் பிரயோசனமில்லை என்று நானும் அமைதியாக இருந்தேன். என்றாவது ஒரு நாள் அவர் மனம் மாறாதா என்றுதான் நான் வேண்டிக் கொண்டதெல்லாம். ஆனால் வள்ளி...?

அன்று மாலையில், காலையில் வந்த பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு எனக்குப் பிரியமான பகுதியைப் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் வள்ளி வந்தாள். அவள் வந்தபோதுதான் அந்தச் சுவாரஸ்யமான செய்தி என் கண்ணில் பட்டது. அமெரிக்காவில் ஒரு பெண் தன் பிறந்தகத்தைப் பற்றித் தூஷணையாகப் பேசின கணவனிடம் விவாக ரத்துப் பெற்றுக் கொண்டாளாம். இந்த விசித்திரமான செய்தி எனக்குச் சிரிப்பைத்தான் வருவித்தது.

"என்ன சிரிக்கிறீர்களம்மா?" என்று வள்ளி கேட்டாள். விஷயத்தை வெளி

யிட்டதும் அவள் உதட்டிலும் ஒரு விநாடி புன்னகை அரும்பியது.

"சீமையிலே இப்படி நடக்கிறது, நம் நாட்டில் அப்படிப்பட்ட நிலையில் ஒரு பெண் இருந்தால் என்ன செய்வாள்?" என்று சாவதானமாகக் கேட்டான் அவன்.



ஆனால் என்னிடமிருந்து வெளிப்பட்ட பதில் 'சுருக்' கென்றிருந்தது.

"தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்" என்றேன் நான். பேச்சு அதன் மேல் சுவாரஸ்யமாக ஓடவில்லை. வள்ளி புஷ்பங்களைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

மறு தினம் மாலையில் வள்ளியைக் காணவில்லை. சாயங்காலம் என் கணவரை யாரோ அவசரமாக அழைத்துக் கொண்டு போனார்கள். வெகுநேரம் கழித்து அவர் சோர்ந்து போய்த் திரும்பி வந்தார். ஏதோ பொது நல சேவையால் ஏற்பட்ட அயர்வு என்று நான் அதைப் பற்றி அதிகமாக விசாரப்படவில்லை.

அதற்கு அடுத்த நாள் விடியற்காலையிலேயே எழுந்து விட்டார் என் கணவர். என்றுமே அவர் அவ்வளவு சீக்கிரமாகப் படுக்கையை விட்டு எழுந்தது கிடையாது. இந்தப் புது அனுபவம் எனக்கு வியப்பாக இருந்தது. அவர் போக்கில் ஏதோ மாறுதல் இருப்பது போல் காணப்பட்டது. நான் அதை அதிகமாக வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவருடைய நடவடிக்கைகளை மட்டும் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தேன்.

வாசலில் பத்திரிகை விற்கும் பையன் குரல் கொடுத்தான். அவர் அவசரமாக எழுந்து போனது தெரிந்தது. பத்திரிகையை வாங்கிக் கொண்டு வந்து துரிதமாகப் பக்கங்களைப் புரட்டினார். பிறகு ஏதோ செய்தியைக் கத்திரிக் கோலால் கத்தரித்து எடுத்து பீரோவுக்குள் வைத்து விட்டுப் பத்திரிகையை அலட்சியமாக மேஜையின் மேல் விசிறி விட்டு எழுந்தார்.

சில பிரத்தியேக வழக்குகளைப் பற்றிப் பத்திரிகையில் வெளியாகும் செய்திகளை அவர் சேகரித்து வைத்துக் கொள்வது வழக்கம். இவைகளை அவர் பேனாவால் குறிப்பிட்டு விட்டுச் செல்வார். நான் அவைகளை ஓய்வு வேளைகளில் வெட்டி எடுத்து வைப்பேன். அன்று அவர் தானே அந்த வேலையை மேற்கொண்டது என் சம்சயத்தைக் கிளப்பியது. அவர் பல் துலக்கச் சென்றிருந்த சமயம் பார்த்து மெல்லச் சென்று அவர் பீரோவில் வைத்த அந்தக் காகிதத் துண்டை எடுத்துப் படித்தேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை!

வள்ளி தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளப் பூந்தோட்டக் கிணற்றில் குதித்து விட்டாளாம். அவளுடைய கணவன் அவளைப் பிறந்தகத்துக்குப் போக அனுமதிக்காமல், அவளுடைய பெற்றோர்களைப் பற்றி இழிவாகப் பேசினது தான் அதற்குக் காரணமாம். நல்ல வேளையாகச் சமயத்தில் அவளைக் காப்பாற்றினானாம் முருகையன். பஞ்சாயத்தார் இதைப் படபடப்பால் ஏற்பட்ட அவசரச் செய்கை என்று நிர்மாணித்து முருகையனைக் கண்டித்து, வள்ளியைப் பிறந்தகத்துக்குப் போக அனுமதிக்கும்படி அவனை வற்புறுத்தியிருந்தார்களாம்.

செய்தியைப் படித்ததும் என் கணவர்மேல் எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டுதான் வந்தது. இந்தச் செய்தியை மட்டும் இவ்வளவு கரிசனமாகப் பத்திரப்படுத்தி வைக்க விழைந்தவர் என்னிடம் ஏன் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை?

என் கணவர் வாசற்படியில் வந்து நின்று கொண்டு என்னைக் கவனித்துக் கொண்டிருந்ததை அப்போதுதான் கவனித்தேன்.

நான் அவரைக் கவனிக்காதது போல் அந்தத் துண்டுக் காகிதத்தில் மறுபடியும் என் கண்ணோட்டத்தைச் செலுத்தினேன். அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை! அவர் என் அருகில் வேகமாக ஓடி வந்தார்.

"இப்போதுதான் என் தவறுதலை நான் உணர்ந்தேன், லலிதா! நேற்று அந்தச் சம்பவம் நடந்த பிறகுதான் என் அகங்காரம் அடங்கியது. என் கண்களை மறைத்துக் கொண்டிருந்த திரை விலகியது. பஞ்சாயத்துக்கு என்னை அழைத்தபோது வள்ளி அதில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறாள் என்பதைப் பற்றி நான் கனவு கூடக் காணவில்லை. பஞ்சாயத்தாரின் தீர்ப்பு முடிந்த பிறகு நான் வள்ளியை ரகசியமாக விசாரித்தேன். நீதான் பேச்சு வாக்கில் ஏதோ சொன்னாயாம். அதைக் கேட்டவுடன் என் மனம் 'பக்' கென்றது. மனசில் குமுறிக் கொண்டிருப்பதைத் தானே வாய் வெளியிடும்..."

என் கணவர் மூச்சுவிடச் சற்றுப் பேச்சை நிறுத்தினார். அவருடைய தழு தழுத்த குரல் என் உள்ளத்தையே உருகும்படி செய்து விட்டது.

"உன்னை நான் இழக்க விரும்பவில்லை, லலிதா!" என்று கூறி அவர் என் கரங்களைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் உகுத்தார். அவரது மன நிலை எனக்குப் புரிந்தது!

அதன் பிரதிபலிப்புத்தான், நான் பிறந்தகத்துக்கு வந்திருக்கிறேன். எப்படி இருக்கிறது விஷயம்? — லலிதா.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madrrs-10.

REGISTERED No. M. 4392

Registered as a news paper in Ceylon

